# உதயன்





www.onlineuthayan.com

32: பக்கங்கள் சுடர் 27 கதிர் 256 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 24 புதன்கிழமை (08/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


# பிரிட்டிஷ் கொடிக்கு சரிசமமாக லண்டனில் பறந்தது புலிக்கொடி

## கடும் அதிருப்தியில் இலங்கை



லண்டன், ஒகஸ்ட்.8

லண்டனில் ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்வுகளின்போது புலிகள் இயக்கத்தினரின் பிரசாரச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்குப் பிரிட்டன் இடமளித்திருப்பது தொடர்பில் இலங்கை கடும் அதிருப்திக்குள்ளாகியிருப்பதாகத் தெரியவருகிறது. அத்துடன் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் இடங்களில் புலிக்கொடி தாராளமாகப் பறப்பது குறித்தும் இலங்கை அரசு கடும் விசனம் அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

லண்டனில் ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறும் காலப்பகுதிக்குள் இங்கிலாந்தில் வசிக்கும் எந்தவொரு நபரும் அரசியல் கருத்துகளையோ வேறெந்த நாடுகளின் பிரச்சினைகளை முன்னிறுத்திச் செயற்படவோ அனுமதிக்கப் போவதில்லையென முன்னதாகப் பிரிட்டன் அறிவித்திருந்தது.

ஆனால் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்கள் ஒலிம்பிக் கிராமம் ஒன்றிற்கருகில் ஸ்ட்ராட் போர்ட் என்னுமிடத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கியிருந்தனர். அத்துடன், பிரிட்டிஷ் தேசியக் கொடிக்கருகில் புலிக்கொடியை ஏற்றியிருந்த எதிர்ப்பாளர்கள், ஒலிம்பிக் நிகழ்வில் இலங்கை வீரர்கள் பங்குபற்றுவதைத் தடைசெய்ய வேண்டுமெனவும், போர்க் குற்றங்களை விசாரிப்பதுடன், லண்டனில் அகதிகளாக இருப்பவர்களைத் திருப்பி அனுப்பக்கூடாதென்றும் கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில், புலிகளின் ஆதரவாளர்களின் இவ்வாறான சுதந்திரமான செயற்பாடுகளுக்குப் பிரிட்டிஷ் அரசு அனுமதி வழங்குவது தொடர்பில் கடும் அதிருப்தியடைந்துள்ள இலங்கை அரசு இது

பார்க்க பக்கம் 4


வடமேல் மாகாணத்தில் பெரும் சிக்கல்களையும் சவால்களையும் எதிர்நோக்கும் தமிழ்மொழிக் கல்வி, இதனைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை.. 5

மதுரையில் தலைவர்களின் தலைகள் நேற்று அதிகாலை காணாமல் போனது. இதனால் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. 08

தமிழ்மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க வேண்டியது இன்று தவிர்க்கமுடியாத தொன்றாக மாறியுள்ளது. வாசுதேவ நாணயக்கார இவ்வாறு கூறுகின்றார். 17

இலங்கையில் தமிழ் ஈழப் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் குறித்த விவாதம் இன்று அகில இந்திய மாநாட்டில். 20


புலிகளின் செயற்பாட்டைத் தடுக்கவில்லையாம்

## மலேசியாவுக்கான தூதுவரை திருப்பியழைக்கிறது இலங்கை

கொழும்பு,ஒக 8

மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் நந்தா கொடகே தனது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னதாகவே, இலங்கை வெளிவிவகார அமைச்சினால் திருப்பி அழைக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நந்தா கொடகே மீது இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்குக் கிடைத்த பல்வேறு முறைப்பாடுகளை அடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மலேசியாவில் செயற்படும் விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவு அமைப்புகள், இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளும் பரப்புரைகளை முறியடிக்கத் தவறியதாக இவர் மீது குற்

பார்க்க பக்கம் 4

## தமிழ் அரசியல் கைதிகள் எந்நேரமும் கொல்லப்படலாம்

அச்சம் வெளியிடுகிறார் சுரேஷ் எம்.பி.

கொழும்பு, ஒக. 8

'சிறைக் கைதிகளும் மனிதர்களே' என்று எல்லா சிறைச்சாலைகளிலும் எழுதி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகள் மனிதர்களாக மதிக்கப்படுவதாகத் தெரிவதில்லை. அவர்கள் எந்த சூழ்நிலையிலும் கொல்லப்படலாம் என்ற துர்ப்பாக்கிய நிலைமையே சிறைச்சாலைகளில் காணப்படுகின்றது. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

கறுப்பு ஜூலையை முன்னிட்டும் நிமலரூபன் கொலைக்கு

பார்க்க பக்கம் 4

## சீனர்கள் கைதான விவகாரம்; சிக்கலுக்குள் இலங்கை அரசு

கொழும்பு,ஒக 8

இலங்கையின் கிழக்குக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட சீனர்கள் 37 பேரும் நேற்றுமுன்தினம் மாலையே விடுவிக்கப்பட்டுவிட்டதாகச் சீனா அறிவித்த போதிலும், இலங்கைக் கடற்படை அதனை நிராகரித்துள்ளது.

அறுகம்பையில் இருந்து 15 கடல்மைல் தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரண்டு சீன மீன்பிடி இழுவைப் படகுகளை இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர்.

இது அதிகரித்து வரும்

பார்க்க பக்கம் 4

## நவநீதம்பிள்ளையை பதவி விலகக் கோரியதாம் அமெ.



ஜெனிவா, ஒக.8

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை பதவி விலகுமாறு அமெரிக்கா கோரியது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனும், அமெரிக்காவும் நவநீதம்பிள்ளையை பதவி விலகுமாறு கோரியதாக இன்னர் சிற்றி பிரஸ்

பார்க்க பக்கம் 4

## டெசோ செல்லும் தலைவர்களை தடுக்க இலங்கைத் தூதர் முயற்சி

ராம்விலாஸ் பாஸ்வான் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஒக.8

டெசோ மாநாட்டில் தான் பங்கேற்பதைத் தடுக்க டில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் பிரசாத் கரியவாசம் முயற்சித்தார் என லோப் ஜனசக்திக் கட்சியின் தலைவர் ராம் விலாஸ் பாஸ்வான் குற்றம்சாட்டியுள்ளார்.

தி.மு.க. தலைவர் கலைஞர் தலைமையில் டெசோ

பார்க்க பக்கம் 4

## புலிகளைத் தாக்கியது போல் கல்வியை அழிக்கிறது அரசு

சாடுகிறார் ரணில்

கொழும்பு,ஒக 8

நந்திக்கடல் அருகே புலிகள் இயக்கத்தினரை நான்கு பக்கங்களும் சுற்றி வளைத்து இராணுவத்தினர் தாக்கியது போல, இலவசக் கல்வியை ஆகாயம், கடல் மற்றும் தரை மார்க்கங்களாக சுற்றி வளைத்து அரசு தாக்குதல் நடத்துகின்றது எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில்

பார்க்க பக்கம் 4

## இனப்பிரச்சினைக்கான தீர்வின் திறவுகோலே கிழக்குத் தேர்தல்

உரிமையை நிலைநிறுத்த வாக்களியுங்கள்; அம்பாறைக் கூட்டத்தில் மாவை எம்.பி.

அம்பாறை, ஒக.8

தமிழர் உரிமையை நிலைநிறுத்துவதற்கு அற்புதமான சந்தர்ப்பமொன்றாகக் கிழக்கு மாகாணசபைத் தேர்தலைத் தமிழ், முஸ்லிம் மக்கள் பயன்படுத்த வேண்டும். இனப்பிரச்சனைக்கான தீர்வின் திறவுகோலாகவும் அது அமைய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பார்க்க பக்கம் 4

## இரும்பு சேகரித்தவர் இழந்தார் பாதத்தை

யாழ்ப்பாணம், ஒக.8

கண்ணிவெடி அகற்றப்பட்டுக் கொண்டிருக்கும் பகுதியில் இரும்பு சேகரிக்கச் சென்ற இளைஞன் கண்ணிவெடியில் சிக்கிக் கால் பாதத்தை இழந்துள்ளார் என்று யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் வ.முருகதாஸ் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் முகமாலை இத்தாவில் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம்

பார்க்க பக்கம் 4

# மஹிந்த அரசை அழிக்காத வரை காவியுடை அராஜகம் தொடரும்

## பாணமை சம்பவம் குறித்து மனோ கணேசன் கருத்து

கொழும்பு, ஓக 8

காவியுடைப் பயங்கர வாதத்தை ஜனாதிபதி மஹிந்தவின் அரசுதான் ஊட்டி வளர்க்கிறது. 80 வருட பழைமையான கிழக்கு மாகாண பாணமை பிள்ளையார் ஆலயத்தின் பிள்ளையார் சிலையை பலவந்தமாகக் கடத்திச் சென்றுள்ள, காவியுடை கோஷ்டி, அரசின் மதவாத - இனவாதக் கொள்கை தரும் தைரியத்தில்தான் செயல்படுகிறது.

-இவ்வாறு குமுறுகிறார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

மேலும், இது இப்படியே போனால் நாளை நல்லைக் கந்தனையும் இவர்கள் கடத்தி செல்வார்கள். கடந்த காலங்களில் இப்படித்தான், கதிர்காம கந்தனையும் இவர்கள் கடத்தி சென்று இன்று அதை ஒரு பௌத்த ஸ்தலமாக மாற்றிவிட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பாணமை பிள்ளையார் சிலை பலவந்தமாக எடுத்துச் செல்லப்பட்டமை தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

> நாடு முழுக்க இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ ஸ்தலங்களுக்கு எதிராக நடைபெறும் ஆக்கிரமிப்புகள், தாக்குதல்கள், இத்தகைய கடத்தல்கள் ஆகியவை சிங்கள-பௌத்தத்தின் பெயரிலேயே நடத்தப்படுகின்றன.

நாடு முழுக்க இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ ஸ்தலங்களுக்கு எதிராக நடைபெறும் ஆக்கிரமிப்புகள், தாக்குதல்கள், இத்தகைய கடத்தல்கள் ஆகியவை சிங்கள-பௌத்தத்தின் பெயரிலேயே நடத்தப்படுகின்றன.

உண்மையான சிங்கள பௌத்தர்கள் இதை நினைத்து வெட்கப்படுகிறார்கள். ஆனால், அவர்களது வெட்கம் எங்கள் பிள்ளையாரை திருப்பி கொண்டுவரப்போவதில்லை. இதன்மூலம் குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில், தமிழர்களின் இன மத அடையாளங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. இது அதன் ஒரு அங்கம்தான்.

இந்த நாட்டிலே இந்த அரசின் ஆட்சியில் தமிழ் பேசும் மக்கள் படும்பாடு, அரசுக்கு உள்ளே இருந்தாலும் வெளியே இருந்தாலும் எல்லா தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் தெரிகிறது.

இந்த அரசின் அத்திபாரமே இந்த காவியுடை அரசியல்தான். இந்நிலையில் தங்களது அத்திபாரத்தையே எப்படி இவர்கள் அழிப்பார்கள்? இந்த அரசை அழிக்காமல் காவியுடை பயங்கரவாதத்தை அளிக்க முடியாது.

இந்நிலையில் இந்த அரசுக்கு, சரி எது, பிழை எது என்பது தொடர்பில் நாம் பாடம் புகட்டாதவரைக்கும், இந்த அரசு கொடுக்கும் தைரியத்தில் இவை தொடர்ந்து நடக்கும்.

கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் என்று எல்லா ஈஸ்வரங்களையும் குறி வைத்து செயற்படுவது இந்த காவி உடை மத வெறி கோஷ்டிதான்.

உடனடியாக இந்த கடத்திச் செல்லப்பட்ட பாணமை பிள்ளையார் மீண்டும் பாணமை ஆலய அறங்காவலர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். உடனடியாக இது நடைபெறாவிட்டால், நாம் எமது மத சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் நாம் நேரடிப் போராட்டங்களில் குதிக்க வேண்டிவரும்.

இனரீதியான போரை முன்னெடுத்த இந்த அரசு, இன்று மத ரீதியான போரை முன்னெடுக்கின்றது என்ற குற்றச்சாட்டை நாம் ஐ.நாவிலும், சர்வதேச மத சுதந்திர பாதுகாப்பு அமைப்புகளிடமும், இந்தியாவில் உள்ள இந்து மத அமைப்புகளிடமும் முன்வைக்க வேண்டிவரும். இது தொடர்பான மேலதிக தகவல்களை தற்சமயம் நாம் வேண்டி நிற்கின்றோம். - இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மோ.சைக்கிள் திருடியவருக்கு ஏழு வருடக் கடூழியச் சிறை

தென்மராட்சி, ஓக. 8

வரணி, சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலய திருவிழாவின் போது மோட்டார் சைக்கிள் திருடிய மந்துவில்வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஏழு வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகை செலுத்தத் தவறின் மேலும் ஒரு மாதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

இந்த நபர் ஏற்கனவே சரசாலையில் இடம்பெற்ற தாலிக்கொடி அறுத்த வழக்கில் குறைந்த வயதுடையவர் என்பதால் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக பொலிஸார் நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து முன்னர் வழங்கப்பட்ட தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார். (த-9)

## காந்தி சிலை உடைப்பு சந்தேகநபர்களுக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஓக.8

அரியாலை மகாத்மா காந்தி சிலையைத் தகர்த்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரையும் யாழ்.நீதிமன்றம் நேற்றுப்பிணையில் விடுவித்தது.

தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணைகளில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். பிணையாளிகள் யாழ்.நீதிமன்ற எல்லைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். அவர்களில் ஒருவர் அரச உத்தியோகத்தராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே பிணை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி அரியாலையில் காந்திஜி சனசமூக நிலையத்துக்கு முன்பாக நிறுவப்பட்டுள்ள மகாத்மா காந்தி சிலையே அடியோடு புரட்டப்பட்டது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அதேஇடத்தைச் சேர்ந்த இருவர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-4)




உதயன் இணைய வானொலி

www.uthayanradio.com

தினமொரு பரிசுக் குலுக்கல்

போர்த்துக்கேய தளபதியான நெவில் என்பவர் அழிக்க முற்பட்ட போது ஆலயத்தில் நின்ற பன்றிச்சை மரம் தன் காய்களை வீசி அழிக்க வந்தவர்களைத் துரத்தியடித்த வரலாற்றைக் கொண்ட முல்லைத்தீவு நந்திக்கடலோரத்தில் அமைந்துள்ள ஆலயம்?

1. திரு முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம்
2. தண்ணீரூற்று விநாயகர் ஆலயம்
3. வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம்
4. சிவநகர் சிவன் ஆலயம்

பெயர் :..........

முகவரி :..........

வயது :.......... தொ.பே. இல :..........

சரியான விடைகளை எழுதி, பரிசுக் கூப்பனுடன் பருத்தித்துறை வீதி, நல்லூரில் (பாரதியார் சிலையடி) அமைந்துள்ள உதயன் இணைய வானொலியின் உற்சவ காலச் சிறப்புக் கலையகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் இன்று மாலை 7 மணிக்கு முன் இடுவதன் மூலம் பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லும் வாய்ப்பு

1 ஆம் பரிசு : 4 GB பென் ட்ரைவ்

2 ஆம் பரிசு : கம்ப்யூட்டர் ருடே 6 மாத சந்தா

3 ஆம் பரிசு : அர்ச்சுனா சஞ்சிகையின் 6 மாத சந்தா

நேற்றைய வினாவுக்கான விடை : மாருதப்பிரவல்லி

வெற்றியாளர்கள் :

| முதலாம் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|
| பா. புருசோத்தமன் (யாழ்ப்பாணம்) | பே. கவிவர்மன் (யாழ்ப்பாணம்) | சி. கீதநந்தினி (கல்வியங்காடு) |





# வடமேல் மாகாண சபை அமர்வில் இடையே ஒலித்தது அபாய மணி

## உறுப்பினர்கள் விழுந்தடித்து ஓட்டம்

குருநாகல், ஓக. 8

வடமேல் மாகாணசபை அமர்வு நேற்று செவ்வாய்க் கிழமை குருணாகல் அவை மண்டபத்தில் நடைபெற்ற வேளை திடீரென அபாய மணி ஒலித்ததால் சபையில் இருந்த மகாண சபை உறுப்பினர்கள் சிலர் மேசைக்கு கீழ் குனிந்தும், சிலர் மாற்று வழிகளால் ஓடித்தப்ப முனைந்தமையும் இடம்பெற்றதால் சிறிது நேரம் அமளிதுமளி ஏற்பட்டது.

சபை அமர்வு நடைபெற்றுக்கொண்டு இருந்த வேளை திடீரென அபாயமணி ஒலித்தது. அந்தவேளை சபைத் தலைவர் தடுமாற்றம் அடைந்தார். இதைக் கண்ட ஏனைய உறுப்பினர்கள் ஓடித்தப்ப முயன்றனர். சிலர் மேசைக்குக் கீழ் ஒளித்துக் கொண்டனர். பலருடைய முகத்தில் வியர்வை வழிந்தோடியது. சிலர் அவசரக் கதவால் வெளியேற முயன்றபோது அந்தக் கதவுகள் பூட்டப்பட்டு காணப்பட்டதால் கூச்சலும் ஏற்பட்டது.

சபையின் கூச்சல் குழப்பத்தை கண்ட அவைத் தலைவர் இது தொடர்பாக ஆராயும்படி பாதுகாப்பு அலுவலர்களைப் பணித்தார். அவர்களும் ஓடிச் சென்று விசாரித்துத் தவறுதலாக யாரோ ஒருவர் அபாய மணியை அழுத்தி விட்டதாகத் தெரிவித்தனர்.

இதன்பின் அமைதியடைந்த சபை மீண்டும் கூடிய வேளை பல உறுப்பினர்கள் தங்கள் மேசை மீதிருந்த தண்ணீர் போத்தலை வாயில் வைத்தபடி இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. (த)

## இணைந்த கணித வினாத்தாள் தொடர்பாக முறைப்பாடுகள்

கொழும்பு,ஓக 8

ஜி.சி.ஈ உயர்தர பரீட்சையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இணைந்த கணித பாட வினாப்பத்திரத்தின் சிக்கலொன்று தொடர்பாகப் பல முறைப்பாடுகள் பரீட்சைகள் திணைக்களத்துக்குக் கிடைத்துள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.ஜே. புஷ்பகுமார தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு இந்த வினாத்தாளைத் தொகுத்த பேராசிரியர் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

''எனினும் வினாப்பத்திரம் I மற்றும் II I கருத்திற்கொள்ளும்போது குறித்த கேள்வி 1.5 புள்ளிகளுக்கு மாத்திரமே உரியது. எனவே முறைப்பாடுகளை அறிக்கை ஏற்றுக்கொண்டால் அந்த வினாவுக்கு விடையளித்த அனைவருக்கும் பூரண புள்ளிகளை வழங்க நாம் தீர்மானித்துள்ளோம்'' என அவர் கூறினார்.(த)

## வத்தேகம நகரசபைத் தலைவர் சரண்

வியாபாரியொருவரைத் தாக்கிய பின்னர் தலைமறைவாகியிருந்த வத்தே கம நகர சபை தலைவர் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை சரணடைந்துள்ளார். மேற்படி தாக்குதல் சம்பவத்தின் நகர சபைத் தலைவரைக் கைது செய்வதற்குப் பொலிஸார் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்ட நிலையில் அவர் சரணடைந்துள்ளார். வத்தேகம நகரில் ஜூலை 29 ஆம் திகதி மேற்படி அரசியல் வாதிக்கும் வியாபாரிக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதமொன்றையடுத்து வியாபாரி தாக்கப்பட்டுள்ளார். (த)

## கனடா விபத்தில் இலங்கையைச் சேர்ந்த தந்தையும் மகளும் சாவு

ரொரன்ரோ,ஓக 8

கனடாவின் ரொரன்ரோ நகரில் தேசிய நெடுஞ்சாலையில், கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையைச் சேர்ந்த தந்தையும் மகளும் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புளோரிடாவில் இருந்து ஐந்து நாள் விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கையைச் சேர்ந்த குடும்பத்தினர் காரில் சென்று கொண்டிருந்தபோது,எதிரே வந்த மற்றொரு வாகனம் மோதியதால் தந்தையும் மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். ஜயந்த நீல் வியரத்ன (வயது -49), நிலீஷா நிமானி (வயது-16) ஆகியோரே கொல்லப்பட்டுள்ளனர்.(த)

# முதன்முதலாக யாழில் சிவில் சமூக உபகுழு

## மனித உரிமை ஆணைக்குழுவின் ஏற்பாட்டில்

*யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 8*

*யாழ்.மாவட்டத்தில் முதல்முறையாக மனித உரிமை ஆணைக்குழுவுடன் இணைந்ததாகச் சிவில் சமூக உபகுழு ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ள சிவில் சமூகத்துடனான கலந்துரையாலின் போது இந்த உபகுழு அமைக்கப்படும். எனவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இயங்கும் சிவில் சமூகங்களின் பிரதிநிதிகளை கலந்துகொள்ளுமாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய ஆணையாளர் த.கனகராஜ் அழைப்பு விடுத்துள்ளார்.*

நாளை வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு கிறின்கிறாஸ் ஹோட்டலில் சிவில் சமூகத்துடனான இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக இணைப்பாளர் கனகராஜ் மேலும் தெரிவித்ததாவது:-

வழமையான கலந்துரையாடல்களைப் போலல்லாது இந்த முறை எமது ஆணைக்குழுவின் 3 ஆண்டுகள் செயற்றிட்டத்துக்கு அமைவாக உபகுழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

எமது மனித உரிமை ஆணைக்குழு சிவில் சமூகத்துடன் இணைந்து வேலைத் திட்டங்களை முன்னெடுக்க உள்ளது. இதற்காக இந்தக் கலந்துரையாடலில் சிவில் சமூகப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய உபகுழு ஒன்றை தெரிவு செய்ய உள்ளோம். இதனைத் தவிர ஆலோசனைகளை வழங்குவதற்கு நிபுணத்துவக் குழுவும் பொலிஸாரை உள்ளடக்கிய அரச உத்தியோகத்தர் குழுவும் யாழ். பிராந்தியத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

மேலும் இதே கலந்துரையாடலில் முதியோர் உரிமைகள் தொடர்பான பிராந்திய மட்ட கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்படும் தீர்மானங்கள் அடுத்தவாரமளவில் கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்ட கலந்துரையாடலில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

எனவே அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெற்ற சிவில் சமூகப் பிரதிநிதிகள் மாத்திரமல்லாமல் அழைப்பிதழ் கிடைக்கப்பெறாத சிவில் சமூகப் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளமுடியும் - என்றார். (த-5)

## சுன்னாகம் வீடு ஒன்றில் காலையில் துணிகரத் திருட்டு

வலி.வடக்கு, ஒக.8

சுன்னாகம் பொலிஸ் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து மடிக் கணினி, 65 ஆயிரம் ரூபா பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன பட்டப்பகல் வேளையில் திருடப்பட்டுள்ளன.

சுன்னாகம் உதவி அரசாங்க அதிபர் வீதியில் உள்ள வீட்டில் காலை 8.30 மணியளவில் வீட்டுக்காரர் வெளியில் சென்ற பின்னர் அங்கு நுழைந்த திருடர்கள் வெளிக் கதவையும் உள்ளே பூட்டியிருந்த இரண்டு கதவுகளையும் கொத்திப் பிரித்து உள்ளே சென்று இந்த துணிகரமான திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸில் வீட்டு உரிமையாளர்கள் முறையிட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-86)

## அனுமதி இல்லாமல் இயங்கிய கல்லுடைக்கும் ஆலைக்கு 'சீல்'

தென்மராட்சி, ஒக.8

சுகாதார விதிமுறைக்கு முரணாகவும், தொழில் நிலையம் நடத்துவதற்குரிய ஆவணங்கள் இல்லாத நிலையிலும் காணப்பட்ட கல் உடைக்கும் ஆலை பொலிஸார் மற்றும் சுகாதாரப் பகுதியினரால் நேற்று 'சீல்' வைக்கப்பட்டது.

கைதடியில் உள்ள கல் உடைக்கும் தொழில் நிலையமே இவ்வாறு 'சீல்' வைக்கப்பட்டு மூடப்பட்டதாகும். நேற்று முன்தினம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பொலிஸார் மற்றும் சுகாதாரப் பகுதியினர் இணைந்து நடத்திய கலந்துரையாடலில் அதனை மூடுவதென முடிவு செய்யப்பட்டது.

இதன் பிரகாரம் நேற்று சாவகச்சேரி பொலிஸாரும் சுகாதாரப் பகுதியினரும் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது சுகாதார விதிமுறைகளுக்கு முரணாகவும் உரிய ஆவணங்கள் இன்றியும் செயற்பட்ட தொழில் நிலையமே 'சீல்' வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## தென்மராட்சிக் கல்வி வலயத்தில் 13 வேலைத் திட்டங்களுக்கு நிதி

இந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 6 முன்பள்ளிகளுக்கும் 7 பாடசாலைகளுக்குமாக 13 வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், முன்பள்ளிகளின் அபிவிருத்திச் சபையினர் ஆகியோர் வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு மின்பிறப்பாக்கி கொள்வனவு-2 லட்சத்து 45 ஆயிரம் ரூபா.

கைதடி-நுணாவில் அ.த.க. பாடசாலைக்கு தளபாடக் கொள்வனவு-49 ஆயிரம் ரூபா.

கச்சாய் அ.த.க.பாடசாலைக்கு தளபாடக் கொள்வனவு-24 ஆயிரத்து 500 ரூபா.

கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி.க்கு பல்லூடக கருவி கொள்வனவு-98 ஆயிரம் ரூபா.

சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்துக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள் கொள்வனவு-1 லட்சத்து 98 ஆயிரம் ரூபா.

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு ஆய்வுகூடம் அமைத்தல்-1லட்சத்து 96 ஆயிரம் ரூபா.

மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலைக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள் கொள்வனவு-98 ஆயிரம் ரூபா.

விடத்தற்பளை கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளிக்கு கிணறு அமைத்தல்-98 ஆயிரம் ரூபா.

கரம்பைக்குறிச்சி மேற்கு முன்பள்ளி அபிவிருத்தி வேலை-98 ஆயிரம் ரூபா.

நுணாவில் மேற்கு கலைமகள் முன்பள்ளி புனரமைப்பு -24 ஆயிரத்து 500 ரூபா.

சரசாலை வடக்கு முன்பள்ளி புனரமைப்பு-49 ஆயிரம் ரூபா.

கரம்பைக்குறிச்சி முன்பள்ளிக்கு கட்டடம் நிர்மாணித்தல்-98 ஆயிரம் ரூபா.

கைதடி தென்.கிழக்கு விநாயகர் முன்பள்ளி சிறுவர் பூங்கா அமைத்தல்-73 ஆயிரத்து 500 ரூபா.

மேற்படி 13 வேலைத் திட்டங்களுக்குமென 12 லட்சத்து 49 ஆயிரத்து 500 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (த-9)

## சுகாதார வைத்திய பணிமனைக்கு சண்டிலிப்பாயில் புதிய கட்டடம்

### விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை

காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, வாடகை வீடுகளில் மாறி மாறி இயங்கி வருகின்ற சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அரசின் நிதியுதவியுடன் சொந்தக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான சகல ஒழுங்குகளையும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து மாறி மாறி வாடகை வீடுகளில் இயங்கி வருகின்றது. இதனால் பொது மக்கள் மட்டுமன்றி சுகாதார உத்தியோகத்தர்களும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள்.

அரசுக்குச் சொந்தமான காணி இந்தப் பிரதேசத்தில் இல்லாததனாலும் கட்டடம் அமைப்பதற்குரிய காணியை வாங்குவதற்கு அரசு முன்வராததனாலும் பொருத்தமான காணிய்ய அன்பளிப்பாக வழங்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் பொது மக்களைக் கோரியிருந்தனர். இந்தக் கோரிக்கைக்கிணங்க மானிப்பாய் பிரதேசத்தில் இரு இடங்களில் அன்பளிப்பாக காணி வழங்கப்பட்ட போதிலும் அக்காணி பொருத்தமற்றதனால் சுகாதாரப் பகுதியினர் அதை ஏற்க மறுத்துவிட்டனர்.

இந்த நிலையில், வெளிநாட்டில் வசிக்கும் ஒருவர் வலி.தென் மேற்கு பிரதேச செயலகத்திற்கு அருகாமையிலுள்ள மூன்றரைப்பரப்புக் காணியை பணிமனை அமைப்பதற்கு அன்பளிப்பாக வழங்க முன்வந்ததைத் தொடர்ந்து, அதற்குரிய சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு காணி சுகாதாரப்பகுதியினருக்கு எழுத்து மூலம் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்படி காணியில் கட்டடம் அமைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (த-115)

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்

இளவாலை பொலிஸ் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என கருதப்படும் மூன்று சந்தேக நபர்கள் இளவாலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் இளவாலைப் பகுதியில் கைதுசெய்யப்பட்டதுடன் மே மாதம் இடம்பெற்ற தங்கச் சங்கிலி அறுப்புடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். (த-86)

## கணவனால் தாக்கப்பட்ட மனைவிக்கு மருந்து கட்டியவருக்குப் பிணை

யாழ்ப்பாணம்,ஒக.8

எழுவைதீவில் கணவனால் தடுத்து வைக்கப்பட்டு தாக்கப்பட்ட பெண்ணின் காயத்துக்கு மருந்து கட்டித் தையல் போட்ட குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர் நீதிமன்றினால் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

**படுகாயமடைந்த மனைவி தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார்.**

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கணவனால் தாக்கப்பட்டார் என்பதனை அறியாது தவறுதலாக ஏற்பட்ட காயம் என்று நினைத்தே சந்தேகநபர் மருந்து கட்டித் தையல் போட்டுள்ளார் என்று சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் தெரிவித்து வாதாடியிருந்தார்.

அதனைப் பரிசீலித்த நீதிவான் 3 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 25 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் சந்தேகநபரை விடுவித்து வழக்கை ஒத்தி வைத்தார்.

இதேவேளை வீட்டில் தடுத்து வைக்கப்பட்டுக் கணவனால் துன்புறுத்தப்பட்டார் என்று ஆபத்தான நிலையில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது கணவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (த-4)

## அரியாலை கிழக்குப் பகுதியில் மீனவர் இளைப்பாறும் மண்டபம்

### ரூ.1.5 மில்லியன் செலவில் அமையும்

யாழ்ப்பாணம்,ஒக.8

அரியாலை கிழக்கில் கடற்தொழில் அமைச்சின் 1.5 மில்லியன் ரூபா நிதியுடன் மீனவருக்கான இளைப்பாறும் மண்டபம் ஒன்று அமைக்கப்பட உள்ளது என யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

**கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் நடவடிக்கை.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2012 ஆம் ஆண்டு அமைச்சின் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இந்த இளைப்பாறும் மண்டபம் அமைக்கப்படவுள்ளது. அரியாலை கிழக்குப் பகுதி தற்போது மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதியாகும். அங்கு அனேகமானவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்காக இந்தப் பகுதிகளில் இளைப்பாறும் மண்டபம் ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த மண்டபத்துக்கான அத்திவாரம் அமைக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டடப் பணிகள் நடைபெற்று மண்டபம் அந்தப் பகுதிக் கடற்தொழிலாளர் அமைப்பிடம் ஒப்படைக்கப்படும் என உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (த-13)

## சிவில் உடையில் சென்ற பொலிஸாருக்கும் மதுபானம்

யாழ்ப்பாணம்,ஒக 8

நயினாதீவில் சட்டவிரோத சாராய விற்பனையில் ஈடுபட்டிருந்த 4 பேர் சிவில் உடையில் சென்ற பொலிஸாருக்கும் அதனை விற்பனை செய்தமையால் மாட்டிக்கொண்டனர்.

நால்வரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது தம் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் அவர்களுக்கு 45 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்றம்.

நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தன.

நால்வரும் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அவர்களில் ஒருவர் ஏற்கனவே அவ்வாறான தொரு குற்றத்தில் ஈடுபட்டிருந்தவர். அதனால் அவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஏனைய மூவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-4)

## சீனர்கள் கைதான...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இலங்கை - சீனா உறவுகளுக்கு ஒரு சோதனை என்று சீனச் செய்தி நிறுவனமான சின்ஹுவா செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தநிலையில் இலங்கை அதிகாரிகள், இந்த விவகாரத்தைச் சட்டப்படியும் உண்மையுடன் அணுகி, கூடிய வரையில் சீனர்களை விடுவிக்க வேண்டும் என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் கேட்டுக் கொண்டுள்ளதாக சின்ஹுவா மேலும் செய்தி வெளியிட்டிருந்தது. அத்துடன், கைதான சீனர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டதாக, சீனத் தூதரகத்தை மேற்கோள்காட்டி சின் ஹுவா தகவல்வெளியிட்டது. எனினும் இலங்கைக் கடற்படை இதனை நிராகரித்துள்ளது.

சீனர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித்த அவர்கள் மீது நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு சுமத்தப்படவுள்ளதாகவும் இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளதாக ரொய்ட்டர் செய்தி நிறுவனம் கூறியுள்ளது. சீனர்கள் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர், இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை.அவர்கள் திருகோணமலையில் அவர்களின் படகிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர், நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர் என்று இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய ரொய்ட்டருக்குத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட சீனர்கள் 37 பேரும் சட்டநடவடிக்கைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் றோகண தெரிவித்துள்ளார். (த)

## பிரிட்டிஷ்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தொடர்பான தனது ஆட்சேபத்தை இராஜதந்திர ரீதியில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக மேலும் அறியமுடிகின்றது.

இலங்கை அரசின் இந்த அதிருப்தியை இலங்கை வெளிவிவகார அமைச்சு கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்திடம் வெளிப்படுத்துமென மேலும் தெரியவருகிறது.(த-சி)

## மலேசியாவுக்கான...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இவரைக் கொழும்பு திரும்புமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு உத்தரவிட்டுள்ள போதும், அவர் அதனை ஏற்க மறுத்துள்ளார். பதவிக்காலம் முடியும் வரை தான் மலேசியாவுக்கான தூதுவராகப் பணியாற்றப் போவதாகவும் நந்தா கொடகே கூறியுள்ளார்.

இதையடுத்து, மலேசியாவில் அவர் தொடர்ந்தும் இலங்கைக்கான தூதுவராக பணியாற்றினால் அவருக்கெதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு தயாராகி வருவதாகவும் அறியப்படுகிறது. (த)

## தமிழ் அரசியல் கைதிகள்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

எதிர்ப்புத் தெரிவித்தும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் 'அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு' ஏற்பாடு செய்த நிகழ்வொன்று கொழும்பு பொது நூலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்பதோடு அவர்கள் மீதான தாக்குதல், படுகொலைக்கு காரணமானவர்களும் விசாரிக்கப்பட வேண்டும். இந்த விடயங்கள் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச்செல்லப்பட வேண்டும். சர்வதேச மன்னிப்புச் சபைக்கு கொண்டுசெல்லப்பட வேண்டும்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பல்வேறு தரப்பினரும் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். அத்துடன், கைதிகளின் விடுதலைக்காக முன்னெடுக்கப்பட்ட அனைத்துவித நடவடிக்கைகளின் போதும் அவர்களின் விடுதலைக்கான கோரிக்கை அரசிடம் பலமுறை முன்வைக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை இதற்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது கவலைக்குரிய விடயமாகும்.

மிக மோசமான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் அமைச்சர்களாக இருக்கின்றார்கள், முதலமைச்சர்களாக இருக்கின்றார்கள். இன்னும் பல்வேறு பதவிகளை வகிக்கும் முக்கியஸ்தர்களாகக் காணப்படுகின்றார்கள். அதேசமயம், எந்தவிதமான தவறுகளையும் செய்யாதவர்கள் புலிகள் என்ற முத்திரை குத்தப்பட்ட நிலையில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறைக்கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். வவுனியா சிறைச்சாலைக் கைதிகள் மிகவும் கோரமான முறையில் தாக்கப்பட்டதன் காரணமாக நிமலரூபன் கொல்லப்பட்டார். மரியதாஸ் என்பவர் கோமா நிலையில் காணப்படுகின்றார். இன்னும் பலருடைய கைகள், கால்கள் உடைக்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்பதோடு அவர்கள் மீதான தாக்குதல், படுகொலைக்கு காரணமானவர்களும் விசாரிக்கப்பட வேண்டும். இந்த விடயங்கள் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச்செல்லப்பட வேண்டும். சர்வதேச மன்னிப்புச் சபைக்கு கொண்டுசெல்லப்பட வேண்டும். இவர்கள் விசாரிக்கப்பட வேண்டும். இதற்காக எந்தவிதமான இன, மத, குல வேறுபாடுகள் இன்றி நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்- என்றார்.

நிகழ்வில் மனோ கணேசன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், குமரகுருபரன், பாஸ்கரா, விக்கிரமபாகு கருணாரத்ன, அருட்தந்தை சக்திவேல் உட்பட பல்வேறு பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள், அரசியல் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (10-16)

## புலிகளைத் தாக்கியது....

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விக்கிரமசிங்க, இந்த மாபெரும் தாக்குதலிலிருந்து இலவசக் கல்வியைப் பாதுகாக்கத்தான் எதிர்க்கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் நான் உங்களை இங்கு ஒன்றுசேர்த்தேன் எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இலவசக் கல்வியில் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ள நிலையிலும், அதற்குப் பொறுப்பான கல்வி அமைச்சர் குறிப்பிட்ட தரப்புடன் கலந்துரையாடி பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுத்துள்ளார். இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். அமைச்சரின் அசமந்தத்தால் இந்தப் பிரச்சினை உக்கிரமடைந்து ஒருவருக்கொருவர் முரண்படக் கூடிய சூழல் உருவாகியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலவசக் கல்வியில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் இலவசக் கல்வித் துறையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து தீர்வுகாண வேண்டும். அதுமட்டுமல்லாது, இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டியது எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் எனது கடமையும் - பொறுப்புமாகும்.

வரலாற்றுக்காலத்திலிருந்து நாட்டின் கல்வித்துறைக்கு அதி முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அபயகிரி மற்றும் ஜேதவனராம விகாரைகள் ஆசியாவிலேயே உயர் கல்விநிறுவனமாக இருந்துள்ளதோடு, ராஜரட்டை மற்றும் கோட்டை யுகங்களில் இலவசக் கல்விக்கு விகாரைகள் பெரும் முக்கியத்துவம் கொடுத்தன.

கேரகலை பத்மாவதிக்கும், ஸ்ரீஜயவர்த்தனபுர சுனேத்ராதேவி பிரிவெனாவுக்கும் ஆசிய நாடுகளிலிருந்தும் மாணவ மாணவிகள் இருந்தனர் என வரலாறுகளில் அறியமுடிகின்றது.

இந்த வரலாறுகளின் அடிப்படையில் நாட்டின் இலவசக் கல்வி ஆரம்பமானது. ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளைக் கற்பிக்கக்கூடிய பாடசாலைகள் நாட்டுக்குக் கிடைத்தன. அதன் பின்னர் எமக்கு சர்வஜன வாக்குரிமை கிடைத்ததுடன் இலவசக் கல்வி முறைமையும் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது இலவசக் கல்வி சகல மாணவர்களுக்கும் கிடைக்கிறது. இந்த முறையை இன்னும் மேம்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் பயமின்றி எதிர்காலத்திற்கு முகங்கொடுக்கமுடியும். உலகம் அறிவை அடிப்படையாகக் கொண்ட ஒன்றாக எதிர்காலத்தில் மாறிவிடும். அதனால் கல்வித்துறையை நாம் அபிவிருத்தி செய்யவேண்டும்.

தெற்காசியாவிலேயே கல்வி கற்போர் தொகை அதிகமாக உள்ள நாடு நமது நாடுதான். நமது கல்வி முறைமை தொடர்பிலான தகவல்கள் உலக வங்கி அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நமது நாட்டின் கல்விக்கு இவ்வாறாகப் பல மதிப்பு இருக்கையில் நடைமுறையிலுள்ள அரசு, கல்வியை முற்றுமுழுதாகப் பிரச்சினைக்கு உள்ளாக்கி வருகிறது.

பரீட்சை முறைகளில் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது மட்டுமல்லாது, பல்கலைக்கழகங்களிலும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையிலும் கல்வி அமைச்சர் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காதுள்ளார்.

இலவசக் கல்வியை அடிப்படை உரிமையாக அரசியல் யாப்பில் உள்ளடக்கவேண்டும் என இந்தத் தனிநபர் பிரேரணை ஊடாக நாம்யோசனையொன்றை முன்வைத்துள்ளோம் - எனத் தெரிவித்துள்ளார். (த-சி)

## நவநீதம்பிள்ளையை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தெரிவித்துள்ளது. எனினும், இதனை நவநீதம்பிள்ளை மறுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் வேறு உயர் பதவி ஒன்றை வழங்குவதாகத் தெரிவித்து, இவ்வாறு பதவி விலகுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகவே நவநீதம்பிள்ளையின் இரண்டாம் தவணைப் பதவிக்காலம் குறைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## டெசோ செல்லும்....

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அமைப்பின், ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாடு சென்னை ராயப்பேட்டை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறுகிறது.

டெசோ மாநாட்டில் பங்கேற்கும் லோக் ஜனசக்தி கட்சித் தலைவர் ராம்விலாஸ் பாஸ்வான் டில்லியில்செய்தியாளர்களிடம்பேசுகையில்,

ஓகஸ்ட் 12ஆம் திகதி நடைபெறவிருக்கும் டெசோ மாநாடு எனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நேரத்தில் இலங்கைத் தூதர் என்னை வந்து சந்தித்தார். அவர் என்னை சமாதானப்படுத்த முயன்றார். ஆனால், நான் அவரிடம் கூறினேன், தமிழக மக்களை நீங்கள் நேரில் சந்தியுங்கள்.

இலங்கை அரசு மற்றும் தலைவர் பற்றிய அவர்களின் கருத்துக்களை அறியுங்கள். மேலும், தி.மு.க. தலைவர் கலைஞரையும் சந்தியுங்கள் என்று எனது கருத்தை உறுதியாக கூறிவிட்டேன் - என்று தெரிவித்தார்.

## இனப்பிரச்சினைக்கான...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அரசு இன்று மிகப்பெரிய பேரினவாத, மதவாத அடாவடித்தனங்களை இந்த நாட்டின் சிறுபான்மை சமூகங்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விட்டுள்ளதுடன், அதற்கான தூண்டுதல்களையும் மேற்கொண்டு வருகின்றது

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைவர்கள்,அமைச்சர்களாக அரசுடன் இணைந்திருந்தாலும் அரசின் இலக்கு தமிழ், முஸ்லிம் ஆகிய சிறுபான்மை சமூகங்கள் மீது ஒரே வகையாகவே உள்ளது .

நாட்டில் இந்து ஆலயங்கள், மத வழிபாட்டு நிலையங்கள் மீது பௌத்த பேரினவாதம் முன்னெடுத்துவரும் அடாவடித்தனங்கள் போன்று, இன்று முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீது கைவைக்கும் நிலைக்கு அராஜகம் தாண்டவமாடி வருகின்றது.

பௌத்த பிக்குகளே முன்னின்று நடத்தும் இந்த அட்டூழியங்களுக்கு அரசின் ஆசீர்வாதமும் நிறையவே உண்டு.

### உலகில் எங்குமில்லை

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை சமூகங்களுக்கெதிராக அவர்களது மத உரிமைகளுக்கெதிராக இடம்பெற்று வரும் பேரினவாத, மதவாத அநியாயங்கள், அட்டூழியங்கள் போல் உலகில் வேறு எங்கும் இடம்பெறவில்லை.

தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இந்த நாட்டில் அடையாளமுள்ள சமூகங்களில்லை என்று காட்ட முனையும் அரசின் நடவடிக்கைகள் இன்று உச்சநிலைக்கு வந்துள்ளன.ஆதிக்க வெறியாட்டம் மூலம் நாட்டை பௌத்த சிங்கள ஒற்றையாட்சி நாடாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த ஒற்றையாட்சி ஆதிக்கம் பௌத்த, சிங்கள இனவாதம் மூலம் இலங்கை முழுவதும் சர்வாதிகார முடிசூடா மன்னன் ஆட்சிக்கு இட்டுச் செல்லும் நிலைமை தோன்றியுள்ளது. இதனால்தான் சிறிய மதங்கள், இனங்கள், மனிதஉரிமை, மதஉரிமை, வாழும் உரிமைக்கு எதிராக அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

### நம் இலக்கு

வடக்கு, கிழக்கில் தங்களைத் தாங்களே ஆளும் உரிமை பெற்று வாழவேண்டுமென்ற இலட்சிய நோக்கு கொண்ட தமிழ், முஸ்லிம் மக்கள் இந்தப் பெரிய ஆதிக்க சக்திக்கு எதிராக நிற்பதே இலக்கு என்ற ஒன்றுபட்ட நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இதனடிப்படையில் சிறிய பிரச்சினைகளைத் தூக்கிப்பிடிப்பதைத் தவிர்த்து நாட்டில் உச்ச நிலையிலிருக்கும் நம் இனங்களை, அடையாளங்களை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராட முன்வரவேண்டும்.

### நம் பாசறை

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் தந்தை செல்வாவின் பாசறையில் வளர்ந்த சிறந்த அரசியல் சாணக்கியமிக்கவர். இதனால்தான் இந்த முறை கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் சேர்ந்து போட்டியிடுவதென முதலில் முடிவு செய்த போது, முஸ்லிம் மக்களின் அனைத்து தரப்பினரும் அரசுடன் சேர்ந்து போட்டியிட எந்த அடிப்படையுமில்லை என்று கொதித்தெழுந்ததுடன் கூட்டமைப்பை ஆதரிக்கப்போகிறோம் என்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினர்.

### பூகம்பம்

தமிழர்களுக்கெதிரானவர்களாக எம்மைக் காட்ட முனையக்கூடாது, தமிழர்களுக்கெதிராக அவர்களது அபிலாஷைகளுக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் செயற்படக்கூடாது என்றெல்லாம் குரல் கொடுத்தனர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னரும் முஸ்லிம் மக்கள் அதே உறவோடும், உணர்வோடும், ஒன்றிணைய வேண்டும். இத்தகைய பலம், முஸ்லிம்களும், தமிழர்களும் அதனைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு வந்தால் இனப்பிரச்சினைத் தீர்விலும் சாதகமான சூழ்நிலை கனிந்து வந்துவிடும். இனப்பிரச்சினைக்கான தீர்வின் திறவு கோலாகவும் அமைந்துவிடும்.

### விழிப்புடன்

இந்தத் தேர்தலில் அரசு தனது முழுப் பலத்தையும், படைப்பலத்தையும், தன்கூலிப்படைகளையும் பயன்படுத்தி மக்களை இறுதி நேரத்தில் வாக்களிக்கச் செல்லாமல் தடுக்கும் உபாயங்களை கையாளலாம்.

கிறீஸ்பூதம் போல், கழிவு எண்ணெய்க் கலாசாரம் போல் சேஷ்டைகளும் வரலாம். எனவேதான் நம் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் விழிப்புடன் செயற்பட்டு வாக்களிப்பு வீதத்தைக் கூட்ட வேண்டும். இதற்கான விழிப்பூட்டல்களை வாக்காளர் மத்தியில் முன்னெடுக்கவும் வேண்டும்.

### தேர்தல் மயம்

நம்நில உரிமைக்காக, வாழ்வுரிமைக்காக சாத்வீகப் போராட்டங்களையும், பெரிய மாநாடுகளையும் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தோம்.ஆனால் குறுக்கே இந்தத் தேர்தல் வந்துவிட்டது. இந்த நாட்டில் ஒரே தேர்தல் மயம் தான். இப்படித் தேர்தல்களுக்காக அரசு எத்தனையோ கோடிகளைச் செலவிடுகின்றது.-என்றார். (த-ச-30)

## இரும்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கபில்ராஜ் (வயது-18) என்ற இளைஞரே கால் பாதத்தை இழந்தார்.

அவர் உடனடியாக பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

அவருக்கு படுகாயம் ஏற்பட்டிருந்த கால் பாதம் சத்திரசிகிச்சை மூலமாக அகற்றப்பட்டது.

இது தொடர்பில் பாதத்தை இழந்தவரின் சகோதரர் ஒருவர் கூறுகையில், மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த மாடு அறுத்துக்கொண்டு ஓடிவிட்டதால் அதனைப்பிடிப்பதற்கு முற்பட்டபோதே கண்ணிவெடியில் சிக்கியுள்ளார் என்று கூறினார்.

8 பேர் கொண்ட குழுவினர் கைவிடப்பட்ட காலவலரணில் குத்திகளை எடுத்துக்கொண்டிருந்த போது பிரஸ்தாப நபர் மிதிவெடியில் சிக்கியதாகவும், இதனையடுத்து ஏனையவர்கள் தப்பியோடிவிட்ட தாகவும், அவர்களைப் பளைப் பொலிஸார் நேற்று கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியதாகவும் மற்றுமொரு தகவல் தெரிவித்தது. (த-4-5-6)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மக்கள் நலன் நாடும் வழியை திறக்க முனைவது எப்போது?

அண்மைக் காலத்தில், போர் முடிவுற்றதன் பின்னராக, தமிழர் பிரதேசங்களில் சமூக விரோதச் செயல்கள் நாளாந்தம் அதிகரித்து வருவது பெரும் பீடையாக வளர்கிறது. கொலைகள், கொள்ளைகள், பெண்கள் மீதான பாலியல் வன்செயல்கள், கலாசாரச் சீர்கேடுகள் என்பன கேட்பாரும் தடுப்பாரும் இன்றி மலிந்து விட்டன.

தனிப்பட்ட குரோதம் மற்றும் பழிவாங்கும் நோக்குடன் கொலைகள் மலிந்து வருவதாகச் சமூகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். எமது சமூகக் கட்டமைப்பும் அதன் பாற்பட்ட ஒழுக்க நெறிகளும் உதாசீனம் செய்யப்படும் நிலையே இதற்குக் காரணம் எனலாம்.

நவீன வசதிகள் மீதான அதீத விருப்பு, மதுபானப் பாவனைப் பழக்கம், வேலை வாய்ப்பின்மை காரணமான விரக்தி, டாம்பீகமாக வாழ்வதில் தேவையற்ற ஆசை, மற்றவரின் வசதி வாய்ப்புகள் தனக்கும் கிடைக்க வேண்டும் என்ற நினைப்பில் குறுக்கு வழியில் அதனைத் தேடுதல், போன்றவையே இத்தகைய சமூக விரோதச் செயல்கள் அதிகரித்துச் செல்வதற்கான அடிப்படை உந்துதல்களாக அமைகின்றன. இளவயதினரிடம் போதைப் பொருள் பாவனை தடுப்பாரின்றி வேகமாகப் பரவி வருவது இங்கு குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

மேலும், போரினால் ஏற்பட்ட இழப்புகள், பாதிப்புகள் அன்றாட சீவனோபாயத்துக்கு வழியின்மை என்பனவும் குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்வதற்கான பிரதான காரணங்களில் சிலவாகும்.

தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கண்ட நிலைமைகளை இல்லாமற் செய்வதற்கான திட்டமிடப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட செயல்முறை எதுவும் குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு இல்லை. அது குறித்து சமூக உணர்வுடன் செயற்படக் கூடியவர்கள் முன்வருவதாகவும் காணோம்.

அதற்கும் மேலாக , சமூக விரோதச் செயல்களையும் சட்டவிரோதச் செயல்களையும் தடுப்பதில் அதற்குப் பொறுப்பானவர்கள் கூர்மையுடனும் விழிப்புடனும் செயற்பட மனம் கொள்ள வேண்டியதும் இன்றைய அவசர அவசிய தேவை எனலாம்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர் வாழ்வு, மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்கு அவை சார்ந்த அரச அமைப்புகள் திட்டமிட்ட முறையில் செயலாற்ற வேண்டியது மிக அவசியம். ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் அவை மிக மந்த கதியிலேயே மெல்ல மெல்ல அசைகின்றன.

மேலும், இப்பணிகள் பற்றுறுதியுடனும், மக்கள் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டும் செயற்படுத்தப்பட வேண்டியவை . ஆனால், வடக்கில் அவை பிரசாரம் எண்பது வீதமும் செயல் இருபது வீதமும் என்ற எண்கணிதமாகவே காணப்படுகிறது.

பொதுவாகவே, நாடளாவிய ரீதியில் அரச இயந்திரத்தின் இயக்கம், எவ்வழி என்று குறிப்பிட்டுக் கூற முடியாத அளவுக்கு குழம்பிய குட்டையாகக் கலங்கித் தெரிகிறது. நாட்டின் மக்கள் நலன் சார்ந்த முக்கிய விடயங்களில் அரசின் நிலைப்பாடு எதுவென்று தெரியாத அளவுக்கு ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் தத்தம் மனம் போன போக்கில் கருத்து வெளியிட்டு வருகிறார்கள். அரச நிர்வாக இயக்கம் மிகப் பல சந்தர்ப்பங்களில் குழம்பிய குட்டை போன்று தெளிவில்லாததாக, உறுதியற்றதாகவே காணப்படுகிறது.

மக்களால், அவர்களின் வாக்குகள் மூலம் பதவிக்கு வந்தவர்கள், வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டவர்கள், தமது அதிகார பலத்தை நியாயமற்ற வகையிலும் சட்டம் ஒழுங்கைப் புறக்கணிக்கும் விதத்திலும் பயன்படுத்தும் போக்குத் தெற்கில் மேலோங்கி நிற்பதும் இங்கே சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும். பல சந்தர்ப்பங்களில் சண்டித்தன அரசியல் அங்கு மேலெழுந்து வருவதாக நோக்கர்கள் புட்டுக் காட்டுகிறார்கள்.

அவர்களைப் பின்பற்றி, அவர் தம் ஆதரவாளர்களும் செயற்படுவதால் சட்டம் , ஒழுங்கு பரந்த அளவில் குலைந்து போகும் ஆபத்து உருவாகி வருகிறது. இந்நிலை தொடர்ந்தால், அதுவே நிரந்தர மரபாக மாறி, ஜனநாயகம் தலைகீழாகி, மக்களுக்கான ஆட்சி முறை என்ற நியமமும் அதற்கான கோட்பாடுகளும் செல்லாக் காசாகிச் சிதைந்து போய்விடும்.

இது குறித்து, ஆட்சியில் அமர்துள்ள உயர் பீடத்தினரும் அவர்களைச் சார்ந்தோரும் மனங்கொள்வது நல்லது. ஜனநாயகப் பண்புகளையும் அவற்றுக்கான அடிவேர்களையும் பிடுங்கி எறிந்து விடாமல் தக்க வைப்பது குறித்து சிந்திக்கக் கூடாதா? மக்கள் நலன்நாடும் வழியைத் திறக்க முனைவது எப்போது?

# தமிழ் மொழி மூலமான கல்விக்கு வடமேல் மாகாணத்தில் தடைகள்

### உடன் கவனம் எடுக்குமாறு கோரிக்கை

குருநாகல்,ஓக 8

வடமேல் மாகாணத்தில், குருநாகல் கல்வி வலயத்தில் தமிழ்மொழி மூலக் கல்வி பல சவால்களை எதிர்கொண்டு உள்ளதாக அதிபர்களும், பெற்றோர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

வடமேல் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளராக தமிழ்ப்பெண்மணி ஒருவர் பதவி வகிக்கின்ற போதிலும் தமிழ்ப்பாடசாலை தொடர்பான அதிகாரங்கள் அனைத்தும் பெரும்பான்மையின அலுவலர்கள் வசம் உள்ளதால் சாதாரண இடமாற்றமொன்றைக் கூட அவரால் செய்ய முடியாத நிலையில் உள்ளார்.

அதிவிசேட கல்வி வலயமாக அனைத்து வசதிகளும் உள்ள இவ்வலயத்தில் தமிழ்மொழிப் பாடசாலைகளுக்கு 42 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். சிங்கள மொழிப் பாடசாலைகளில் அனைத்து வசதிகளும் உள்ளமையால், அதே ரீதியில் தமிழ்ப் பாடசாலைகளையும் பெரும்பான்மையின அலுவலர்கள் நோக்குவதாக அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

குருநாகல் வலயக் கல்விப் பணிமனையில் தமிழ்ப் பிரிவுக்கு தனியான இடம் இல்லை. பல முறை இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபோதிலும் மௌனம் சாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முக்கிய பாடங்கள் பலவற்றுக்கு ஆசிரிய ஆலோசகர்கள் இல்லை. அதேபோல் பாடங்களுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் தமிழ் மொழி மூலம் இல்லை.

குருநாகல் மாவட்டத்தில் தோட்டப் பாடசாலைகளுக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி நீண்ட நாள்களாக நிரப்பப்படாமல் உள்ளது. மேலும் தோட்டப் பகுதிகளில் அமையாத, தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் எவருமே படிக்காத எட்டு முஸ்லிம் பாடசாலைகளை தோட்டப் பாடசாலைகள் என இணைத்து வேடிக்கை ஒன்றை வடமேல் மாகாண கல்விப் பணிமனை புரிந்துள்ளது.

வடமேல் மாகாணத்துக்குக் கிடைக்கும் அனைத்து தமிழ்மொழி மூல நியமனங்களையும் முதல்வர் அதுல விஜேசிங்க புத்தளம் மாவட்டத்துக்கு மட்டும் வழங்கி குருநாகல் மாவட்ட தமிழ்க்கல்விக்கு ஊறு விளைவிப்பதாக பெற்றோர்களும், அதிபர்களும் தெரிவிக்கின்றனர். (த)

## பிறப்பு, திருமணச் சான்றிதழ்கள் பெறாதோர் தொடர்பு கொள்க

யாழ்ப்பாணம், ஓக.8

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இது வரையில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமணச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக தமது பகுதிக் கிராம சேவையாளர்களிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் அறிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமணச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு இந்த மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நடமாடும் சேவை மூலம் அவை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

எனவே இந்த நடமாடும் சேவையில் ஆவணங்கள் பெற விரும்புபவர்கள் உடனடியாக தமது கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அல்லது பிரதேச செயலகப் பதிவாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறும் பிரதேச செயலர் அறிவுறுத்தியுள்ளார். (த-5)

## புவேந்தன் முன்பள்ளி சிறுவர்கள் சுற்றுலா

தென்மராட்சி, ஓக.8

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்கள் இவ் வருட திருத்தலச் சுற்றுலாவாக திருக்கேதீஸ்வரம் செல்லவுள்ளனர். நிலைய இரண்டாம் தவணை விடுமுறை காலத்தின் போது நிலையத்தில் கல்வி பயிலும் சிறார்களை வருடாவருடம் நிலைய நிர்வாகத்தினர் ஒரு திருத்தலத்திற்கு பெற்றோருடன் அழைத்துச் செல்வது வழக்கம்.

இந்த வருடம் இரண்டாம் தவணை விடுமுறைக்காலத்தில் திருக்கேதீஸ்வரம் அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே நல்லூர், செல்வச் சந்நிதி, வல்லிபுர ஆழ்வார் ஆலயம், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் உட்பட பல்வேறு ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சுற்றுலாவில் சிறார்களுக்கு கேரதீவு மகாதேவா தாம்போதி, பூநகரிக் கோட்டை, பாலாவி தீர்த்தக்கரை ஆகியவை காண்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

## சாவகச்சேரி நகராட்சி எல்லைக்குள் 4 திட்டங்களுக்கு மட்டுமே நிதி

தென்மராட்சி,ஓக 8

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் சாவகச்சேரி தொகுதியில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள 42 வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் நான்கு வேலைத் திட்டங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வயல் பாரதி படிப்பக புனரமைப்பு, நுணாவில் மேற்கு வான்மதி ச.ச.நிலைய புனரமைப்பு, நுணாவில் கிழக்கு சர்வசாதன ச.ச.நிலைய புனரமைப்பு ஆகியவற்றுக்கு தலா 49 ஆயிரம் ரூபா வீதமும், கல்வயல் சனசமூக நிலையத்துக்கு தளபாடக் கொள்வனவுக்கு 24 ஆயிரத்து 500 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## பஸ் சேவையை நடத்துமாறு அரச அலுவலர்கள் கோரிக்கை

தென்மராட்சி,ஓக.8

வன்னிப்பகுதியில் உள்ள அரச திணைக்களங்களில் கடமையாற்றும் கைதடி மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் காலை பஸ் சேவையின்மையால் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

பூநகரி, துணுக்காய், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில்கடமை புரிவோர் காலையில் பஸ்சேவை இல்லாததால் கைதடி சந்திக்கு தாம் வருவதற்கிடையில் மேற்படி இடங்களுக்கான பஸ்கள் சென்று விடுகின்றன என்றும்,

இதனால் இந்த மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் 811 இலக்க பஸ் சேவையினை காலை 5.30 மணிக்கு டிப்போவிலிருந்து ஆரம்பித்து சாவகச்சேரி வரை நடத்துமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண பொது முகாமையாளரை அரச அலுவலர்கள் கோரியுள்ளனர்.

தற்போது காலையில் சேவையில் ஈடுபடும் பஸ் சேவை, பாடசாலை சேவையாக நடத்தப்பட்டு காலை 7.30 மணிக்கு சாவகச்சேரி சென்றடைவதால் தமது கடமைகளுக்குச் சரியான நேரத்துக்குச் செல்ல முடியவில்லையென மேலும் குறிப்பிட்டுள்ளனர். (எ-9)

## 104 வன்னி ஆசிரியர்களுக்கு செப்ரெம்பரில் மாற்றம் உறுதி

யாழ்ப்பாணம், ஓக.8

இடமாற்றம் செய்யத் தெரிவு செய்யப்பட்ட வன்னியில் கற்பிக்கும் 104 ஆசிரியர்களும் எதிர்வரும் முதலாம் திகதி இடமாற்றம் செய்யப்படுவர் என உறுதி அளித்து கடிதம் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் செய்திருந்த முறைப்பாடு முடிவுறுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணையாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

104 ஆசிரியர்களினதும் இடமாற்ற இழுத்தடிப்புக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கம் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தது.

இது தொடர்பான விசாரணை யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நடைபெற்றது. இறுதியாக நடந்த விசாரணையில் எதிர்வரும் முதலாம் திகதி ஆசிரியர் இடமாற்றம் வழங்குவதாக கல்வி அதிகாரியால் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் உறுதியளிக்கப்பட்டது. அது தொடர்பான உறுதிப்படுத்தல் கடிதம் ஒன்றை வழக்குமாறு ஆணைக்குழு கோரியிருந்தது.

இதன்படி மாகாண இடமாற்றச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட 104 ஆசிரியர்களும் எதிர்வரும் முதலாம் திகதி இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்று கடந்த 2 ஆம் திகதி வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உறுதியளித்து ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

அதனடிப்படையில் இலங்கை ஆசிரியர் சங்கம் செய்த முறைப்பாடு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதனை இலங்கை ஆசிரியர் சங்கமும் உறுதிசெய்தது. (த-4)

# தொடர்ந்து பாதிப்புற்று வரும் மன்னார் மாவட்ட மீனவர்கள்

## தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் திட்ட இணைப்பாளர் தெரிவிப்பு

**மன்னார் மாவட்ட மீனவர்கள் தற்போது, இந்திய இழுவைப்படகுகளின் அத்து மீறி வருகை, கடற்படையினரின் மீன் பிடி பாஸ் நடைமுறை, கடல் வளங்களை மீனவர்களின் விருப்பத்துக்கு அமைவாக பிடிப்பதற்கு அனுமதி இல்லாமை, தடை செய்யப்பட்ட மீனவ உபகரணங்களின் பாவனை, மீனவ துறைமுகம் மற்றும் மீனவ நிலங்கள் அபகரிப்பு போன்ற காரணங்களினால் மன்னார் மாவட்ட மீனவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.**

தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையானது சிறு தொழில் மீனவர்களின் உரிமை, இழுவைப் படகுகளின் வருகை மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் வருகை என்பவற்றை நிறுத்துவதற்கு பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இருந்த போதிலும் இதற்கான சரியான தீர்வு; இன்னமும் எமது மீனவ சமூகத்துக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று மன்னார் மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் இணைப்பாளர் ஏ.சுனேஸ் தெரிவித்தார்.

இந்திய இழுவைப்படகு மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் வருகையால் மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பான விசேட கூட்டம் கடந்த சனிக்கிழமை காலை மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசக் கட்டடத்தில் நடைபெற்றது, இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சுனேஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைமை செயலக இணைப்பாளர் ஜேசுதாசன் உட்பட மீனவ கிராமங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில்கடந்தமாதம் 13ஆம் திகதி துறைசார் நிபுணர்களுடனான கலந்துரையாடலையும், கிராம மட்ட மீனவர்களுடனான விசேட கலந்துரையாடலையும் நடத்தியுள்ளோம் - என்றார்.

இதே வேளை மன்னார் மாவட்ட மீனவர்கள் தற்போது, இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறி வருகை, கடற்படையினரின் மீன் பிடி பாஸ் நடைமுறை, கடல் வளங்களை மீனவர்களின் விருப்பத்துக்கு அமைவாக பிடிப்பதற்கு அனுமதி இல்லாமை, தடை செய்யப்பட்ட மீனவ உபகரணங்களின் பாவனை, மீனவ துறைமுகம் மற்றும் மீனவ நிலங்கள் அபகரிப்பு போன்ற காரணங்களினால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று மீனவ பிரதிநிதிகள் அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

(எ-12)

## மன்னாரில் குற்றச் செயலில் ஈடுபட்ட ஓட்டோச் சாரதிகள் தலைமறைவு

மன்னார், ஒக. 8

மன்னாரில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த ஒட்டோ சாரதிகள் தலைமறைவாகியுள்ளனர் என்று மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. மன்னாரில் ஓட்டோ சாரதிகளிடையே தற்போது மாற்றங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் மன்னார் ஓட்டோ உரிமையாளர்கள் தற்போது நீதியான முறையில் மக்களின் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று ஒரு சாரார் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும், மன்னாரில் சேவையில் ஈடுபட்டு வரும் ஓட்டோ சாரதிகள் சிலர் மக்களுடனும் குறிப்பாக பெண்களுடனும் அநாகரிகமான முறையில் நடந்து கொள்வதாக தொடர்ந்தும் முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன.

மன்னார் ஓட்டோ சங்கத்தின் தலைவர் இந்த விடயத்தில் மிகவும் அசமந்தப்போக்குடனே ஈடுபட்டு வந்தார்.

இதனால் தொடர்ந்தும் பல்வேறுபட்ட குற்றச்செயல்களில் சில ஓட்டோ சாரதிகள் செயற்பட்டு வந்தனர்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி மன்னாரில் இடம் பெற்ற அசம்பாவிதம் ஒன்றில் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட்டு வந்த ஓட்டோ சாரதிகளும் கலந்து கொண்டு வன்முறையில் ஈடுபட்டனர். வன்முறையில் ஈடுபட்ட ஓட்டோசாரதிகளைக் கைது செய்யுமாறு மன்னார் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்தநிலையில்வன்முறையில் ஈடுபட்ட ஓட்டோ சாரதிகள் தற்போது தலைமறைவாகியுள்ளனர்.

இதன் காரணமாக தற்போது மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்திற்கு முன் நின்று சேவையில் ஈடுபட்டு வரும் ஓட்டோ சாரதிகளில் பலர் எந்தவித பிரச்சினைகளும் இன்றி தமது பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

நீண்ட காலமாக சேவையில் ஈடுபட்டு வந்த ஓட்டோ சாரதிகளில் ஒரு சிலர் பல்வேறு தீய செயற்பாட்டில் ஈடுபட்டு வந்தனர்.

அதனைத் தட்டிக்கேட்கும் ஏனைய ஓட்டோ சாரதிகள் அல்லது பொது மக்களை அதிகாரத்தில் இருப்பவர்களைக் கொண்டு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த ஓட்டோ சாரதிகள் அச்சுறுத்தி வந்தனர் என்றும் மக்கள் தெரிவித்தனர். (எ-12)

## கட்டப் பணி நிறைவடைந்ததும் திறக்கப்படாத பஸ் நிலையம்



நெடுங்கேணி,ஓக.8

நெடுந்தீவு பிரதேச சபைப் பிரிவில் பொது பஸ் நிலையம் அமைக்கப்பட்டு கட்டடப் பணிகள் யாவும் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்படவில்லை.

இதனால் இந்தப் பிரதேச மக்கள் வெயிலிலும் மழையிலும் சிரமங்களுக்கு மத்தியில் காத்திருக்க வேண்டி உள்ளதாகக் கூறுகின்றனர்.

இந்த நிலையில் குறித்த பஸ் நிலையத்தைத் திறந்து வைத்து மக்களின் சிரமங்களைப் போக்க உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ம-435)

## துணுக்காய் வீதி திருத்தப்பணி


துணுக்காய்,ஒக.8

மாங்குளம்-துணுக்காய் பிரதான பி-269 வீதி திருத்தப்பட்டு வருகின்றது. தற்போது மல்லாவி நகர் பகுதியில் குன்றும் குழியுமாக இருந்த வீதி மண் வீதியாகப் போடப்பட்டுள்ளமையால் இதனூடாகப் பயணிப்போர் மிகவும் இலகுவாகப் பயணம் செய்து வருகின்றனர்.

இந்தப் பிரதான மாங்குளம்-துணுக்காய் வெள்ளங்குளம் பி-269 வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நேரடிக் கண்காணிப்பில் திருத்தப்பட்டு வருகின்றது.

(ம-415)

## பொலிஸ் நடமாடும் சேவையில் சைக்கிள்களுக்கு சிவப்பு ஸ்ரிக்கர்



துணுக்காய்,ஒக.8

மாங்குளம் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் பிரிவின் அனுசரணையுடன் மல்லாவி பொலிஸ் நிலைய பொலிஸார் மக்களுக்கான நடமாடும் சேவை ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்த நடமாடும் சேவையானது முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை மு.ப 9 மணிக்கு மல்லாவி பொலிஸ் அதிகாரி இந்திக்க ஹெட்டியாராச்சி தலைமையில் நடைபெற்றுள்ளது.

தேசியக் கொடியை துணுக்காய் பிரதேச செயலாளர் மு.கிருஷ்ணநவரத்தினராசா ஏற்ற, பொலிஸ் கொடியை மல்லாவி பொலிஸ் அதிகாரி இந்திக்க ஹெட்டியாராச்சி ஏற்றி வைக்க, தேசிய கீதத்தை பாடசாலை மாணவிகள் இசைத்தனர்.

மங்கள விளக்கை மாங்குளம் பொலிஸ் அதிகாரி உதித பெரேரா ஏற்றி வைக்க புகழேந்தி நகர் ஆலய குருக்கள் உருத்திரமூர்த்தி, பிரதேச சபை தலைவர் வீ.இராசரட்ணம், பிரதேசசபை செயலாளர் மு.கிருஷ்ணநவரத்தினராசா, மாந்தை கிழக்கு பிரதேச இணைப்பாளர் பிரிந்தாபன், மல்லாவி வைத்திய சாலை வைத்தியர் தமிந்த, பல் வைத்தியர் மகாலிங்கம் கிராம அலுவலர்கள் என பலர் ஏற்றி வைத்தனர்.

மல்லாவியில் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் ஆவணங்களை இழந்துள்ளனர். ஆவணங்களை இழந்தவர்களுக்கு இந்த நடமாடும் சேவையின் மூலம் பிறப்புச் சான்றிதழ், மரணச் சான்றிதழ், திருமணப் பதிவு, தேசிய அடையாள அட்டைகள் புதிதாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் இலவச பற்சிகிச்சையும் வழங்கப்பட்டது.

மேலும் துணுக்காய் பிரதேச சபையினரால் 2012 ஆம் ஆண்டுக்கான சைக்கிள்களுக்கு இலக்கத்தகடுகள் வழங்கப்பட்டன. இதன் போது 200 இற்கு மேற்பட்ட சைக்கிள்களுக்கு சிவப்பு நிற ஸ்ரிக்கர் பொலிஸாரினால் ஒட்டப்பட்டன. (எ-415)

## சான்றிதழ் வழங்கி மாணவர்கள் கௌரவிப்பு

வவுனியா, ஒக. 8

வவுனியாமாவட்ட தொழிற் பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்றுக் காலை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதமவிருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன், வடமாகாண பணிப்பாளர் ரி. வினோதராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வவுனியா மாவட்ட தொழிற் பயிற்சி நிலையத்தின் தொழிற் பயிற்சி பெற்ற மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இறுதியில் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

(ஒ-402)

## சட்டவிரோத மர அழிப்பில் எவரும் ஈடுபட வேண்டாம்

அக்கராயன், ஓக. 8

வீட்டுக்கென மர அனுமதி பெறுபவர்கள் காட்டில் மரங்களை வெட்டக்கூடாது என கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அக்கராயனில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நாகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வீட்டுத் திட்டத்துக்கென தமது காணியில் மரம் உள்ளதாகக் கூறி அந்த மரங்களை வெட்டுவதற்காக அனுமதி பெறுபவர் காட்டிலோ பிறருடைய காணியிலோ மரங்களை வெட்டிக் கொண்டு போவதை காணக்கூடியதாக இருக்கிறது.

எனவே சட்டவிரோதமாக மரம் அழிப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம் என்றார். (எ-18)

## குடிதண்ணீர்த் தட்டுப்பாடு

துணுக்காய்,ஓக.8

மல்லாவி நகர்ப் பகுதிகளில் உள்ள கிணறுகள் நீர் வற்றி வரண்டு காணப்படுகின்றன. இதனால் மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் இடர்களைச் சந்தித்து வருகின்றனர்.

அனிஞ்சியன்குளம் பகுதி கிராமங்களில் சில பகுதிகளில் குடிதண்ணீர் இன்றி மக்கள் அவலத்தில் உள்ளனர். இங்குள்ள கிணறுகள் குளங்களில் நீர்வற்றி இருப்பதால் ஒரு வகை துர்நாற்றமும் வீசி வருகின்றது.

பெரிய அளவில் குழாய்க் கிணறுகள் இருந்தும் செயலிழந்த நிலையில் காணப்படுவதால் மல்லாவியில் தண்ணீர்ப் பிரச்சினை அதிகரித்து வருகின்றது.

இதனால் ஐயன்கன்குளம் கிராமத்தில் குடிதண்ணீர் இன்றி மக்கள் குளத்தில் வற்றிய நீரை குடிதண்ணீராக பயன்படுத்தும் அவலத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

(எ-415)

# இரட்டைக் குழந்தைகள் வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ். போதனா வைத்திய சாலையில் இரட்டைக் குழந்தைகள் பிறந்து ஒரு குழந்தை காணாமல் போயுள்ளமை தொடர்பான வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது யாழ். நீதிமன்றம்.

நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விளக்கத்துக்கு வந்தது.

நேற்றைய தினம் மகப்பேற்று வைத்திய நிபுணர், தாதியர் மன்றுக்குச் சமுகமளித்திருந்தனர். முன்னர் நீதிமன்று உத்தரவிட்டதற்கிணங்க, வைத்தியசாலையில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தமை தொடர்பாகத் தெரிவிக்கப்படும் பதிவுகள், ஆவணங்கள் நேற்று மன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

இதன்போது தாதி ஒருவர் விளக்கமளித்திருந்தார்.

பிரஸ்தாபத் தாய்க்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அதற்கான ஒழுங்குகள், இரண்டு குழந்தைகளுக்கும் தேவையான துணிகளும் ஒழுங்குபடுத்தப்பட்டன. தாயார் சத்திரசிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்படும் வரை இரட்டைக் குழந்தைகள் என்றே 'எக்ஸ்றே' அறிக்கையிலும் தெரிய வந்தது. ஒரு குழந்தை சத்திர சிகிச்சை மூலம் வெளியே எடுக்கப்பட்டு உரிய இடத்தில் வைக்கப்பட்டது. மற்றைய குழந்தையையும் எடுக்கவேண்டும் என்று சத்திர சிகிச்சை கூடத்துக்கு உள்ளே சென்ற போது ஒரு குழந்தைதான் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர் என்று தாதி நேற்று வாக்குமூலம் அளித்துள்ளார்.

இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்ததாகத் தெரிவிக்கப்படும் தாயார் நீதிமன்றில் விளக்கமளிக்கையில்;

முதலாவது குழந்தை சத்திர சிகிச்சை மூலமாக வெளியே எடுக்கப்பட்டதை எனது கண்களால் கண்டேன். அதனை என்னிடம் தந்த போது நான் குழந்தைக்கு முத்தமிட்டேன். பின்னர் தாதி ஒருவர் குழந்தையை வைக்கவேண்டிய இடத்துக்குக் கொண்டு சென்றார்.

மற்றைய குழந்தை வெளியே எடுக்கும் தறுவாயில், எனது மூக்கில் பொருத்தப்பட்டிருந்த ஒட்சிசன் குழாயை எடுத்துக் கண்ணில் வைத்து மறைத்து விட்டனர். அப்படியே நான் மயங்கி விட்டேன். மயக்கம் தெளிந்தபோது ஒரு குழந்தைதான் என்றனர் - என்று மன்றில் அவர் தெரிவித்தார்.

கடந்த முறை இடம்பெற்ற விளக்கத்தில் வைத்தியர் ஒருவர் விளக்கமளித்திருந்தார். இவை அனைத்தும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அங்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அச்சுவேலியைச் சேர்ந்த பிரஸ்தாபப் பெண் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதி குழந்தைகளைப் பெற்றெடுத்தார். 2004 ஜூலை 5ஆம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்தார். 2005 ஜனவரி 6ஆம் திகதி வழக்கு நீதிமன்ற விசாரணைக்கு வந்தது. அன்று தொடக்கம் இது தொடர்பான வழக்கு நடைபெற்று வருகின்றது. பிரஸ்தாபத் தாயின் சார்பாக சட்டத்தரணி ஜொனி மருதநாயகம் முன்னிலையாகி வாதாடி வருகின்றார்.

இரட்டைக் குழந்தைகளில் பெண் குழந்தை தாயிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆண் குழந்தையைத் தன்னிடம் ஒப்படைக்கும் படி கோரியே தாய் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## கண்ணீர் அஞ்சலி



*முருகேசு நடராசா*
*(உபதபாலதிபர் வரணி)*

அகில இலங்கை தமிழ்பேசும் உபதபால்அதிபர்கள் தொழிற்சங்கத்தின் அங்கத்தவரும் முன்னாள் நிர்வாகசபை உறுப்பினருமான திரு.மு.நடராசா அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**உபதபாலதிபர் சங்கம்**
**யாழ்.கிளை.**

(21434)9-14)

## மரண அறிவித்தல்

### சவரிமுத்து லோறன்ஸ்

**(இளைப்பாறிய அதிபர், யா/சில்லாலை றோ.க.த.க. பாடசாலை)**

**சில்லாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து லோறன்ஸ் நேற்று (07.08.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற வெலிஸ்ரேஸ் (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், றாஜன், றஞ்சன், றவிந்திரன், றஞ்சிற் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுலங்கா, றஜனி பிரியதர்சினி, றூபா ஆகியோரின் மாமனும், சேரா, அமென்டா, றெபேக்கா, றவாயேல், டிவான், டிலான், றிச்சி, சஸ்மி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை , பொன்ராசா மற்றும் மரியராணி, வேதநாயகம், ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

இல. 41, சமானந்த வீதி,
மெரிமால,
தெகிவளை, கொழும்பு

தகவல்:
**குடும்பத்தினர்.**

(21432) (6.6.7)

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பணியாளர் நலநோன்பு கூட்டுறவுச்சங்கத்தால் 05.08.2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்றோர் விவரம் வருமாறு;

1 ஆம் பரிசு ரிக்கற் இலக்கம்-29721
2 ஆம் பரிசு ரிக்கற் இலக்கம்-27252
3 ஆம் பரிசு ரிக்கற் இலக்கம்-17010

மேலும் 5 ஆறுதல் பரிசுகள் பெற்றோர் ரிக்கற் இலக்கங்கள் வருமாறு,

24199, 13564, 33561, 056, 3651

இவர்கள் தங்கள் பரிசுகளை 20.08.2012 ஆம் திகதி எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

செயலாளர்
யாழ்.மா.கூ.பணியாளர்
நலநோன்பு கூட்டுறவுச் சங்கம் (வ.து)

(21170) (15-08)

## கணினி திருத்தம்
**(Computer Repair)**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா ? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம்.
அழையுங்கள்

T.P : 077 9086737 GUNAA BEST PC

(21437)(8-14)

# மீள்குடியமர்ந்த 200 பேருக்கு தே.அடையாள அட்டை இல்லை

## தென்னைமரவாடியில் தமிழர் அசண்டை

திருகோணமலை,ஓக.8

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கு எல்லைப் புறத்தில் உள்ள தென்னைமரவாடி தமிழ்க் கிராமத்தில் தற்போது மீள்குடியமர்ந்துள்ள மக்களில் சுமார் 200 பேருக்கு தேசிய அடையாள அட்டை இல்லாதது பல்கலைக்கழக மாணவர் குழு ஒன்று குறித்த கிராமத்துக்குச் சென்று நடத்திய தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கையின் போது கண்டறியப்பட்டது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட் பாளர்களில் ஒருவராகப் போட்டியிடும் பல்கலைக் கழக மாணவன் ஜெ.ஜெனார்த் தனன் தலைமையில் இந்தத் தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தேசிய அடையாள அட்டைகள் இல்லாததால் வாக்களிக்க முடியாத நிலைக்கு உள்ளாகி இருக்கும் இந்த மக்களுக்கு தென்னை மர வாடி கிராம சேவையாளர் ஊடாக தற்காலிக அடையாள அட்டை பெற்றுக் கொடுப் பதற்கான நடவடிக்கையை எடுப்பதாக வேட்பாளர் ஜெ.ஜெனார்த்தனன் பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு உறுதியளித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-40)



## புதிய கட்சி ஆரம்பித்தார் தங்கேஸ்வரி

எருவில்,ஓக.8

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான க.தங்கேஸ்வரி கிழக்கு தமிழ் மக்களின் அடையாளத்தை ஊக்குவிப்பதற்காக புதிய கட்சியொன்றை உருவாக்கியுள்ளார். தமிழ் மக்களின் சுதந்திரக் கட்சி என இந்தக் கட்சிக்கு பெயரிடப்பட்டுள்ளது. (ச-31)

# உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவன் நித்திரையில் மரணம்

## அம்பாறையில் பெரும் சோகம்

நாடெங்கும் நேற்று முன்தினம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டிய மாணவன் நித்திரையிலேயே உயிரிழந்த பரிதாபமான சம்பவமொன்று அம்பாறை, சம்மாந்துறையில் இடம் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் சம்மாந்துறை முழுவதும் பெரும் சோகத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

சம்மாந்துறை சென்னெல் சாஹிராவில் கல்வி கற்ற முகம்மட் இஸ்மாயில் ஆசிக் (வயது-19) எனும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கருவாட்டுக்கல் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த குறித்த மாணவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நோன்பு துறந்ததும் உணவருந்திவிட்டு தூங்கச் சென்றுள்ளார். மறுநாள் அதிகாலை நோன்பு பிடிப்பதற்காக இந்த மாணவனை எழுப்பிய போதே அவர் இறந்திருந்தது தெரிய வந்துள்ளது.

மரண விசாரணைகள் பொலிஸ் புலனாய்வு பொறுப்பதிகாரி அமரசிறி, பொலிஸ் பரிசோதகர் காதர் ஆகியோரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.

பிரேத பரிசோதனை மேற்கொண்ட வைத்தியர்கள் உணவு ஒவ்வாமை காரணமாகவே குறித்த மரணம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-30)

## தவறிவிட்டது

சூரியகுமார் ஜனுராம் (931052748V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை யாழ்ப்பாணம் சட்டநாதர் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும் தொடர்பு: 077 621 9129.

## பகுதிநேர வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக, யாழ்.மண்ணில் 50 வருடங்களாகச் சேவையாற்றிவரும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

★ 2 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
★ பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
★ பணி நிலையங்கள்:

**யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை, கிளிநொச்சி.**

அடிப்படைத் தகைமைகள்:-


★G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
★ 18 - 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (*BIO DATA*) விண்ணப்பங்களை 25.08.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**C/O உதயன்,**
**விளம்பர இல. 4386,**
**561,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(21430) (2-6)

## கண்ணீர் அஞ்சலி



எனது குடும்ப நண்பன்
*சின்னராசா அன்ரன் அரியரட்ணம்*
*(சின்னத்தம்பி மெக்கானிக்)*

06.08.2012 அன்று காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றேன். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*J.றொபேட்*
*(உரிமையாளர் றொபேட் கராஜ்)*

*யாழ்ப்பாணம்.*

(21426) (15-14)

# விண்ணப்பம் கோரல்

**மதிப்பீட்டுக்கும் கண்காணிப்புக்குமான அலுவலர்**
**(Monitoring & Evaluation Officer)**

மேற்படி பதவிக்கு சாந்திகத்தில் வெற்றிடம் ஒன்றுள்ளதால் கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமைகளை உடையோர் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

**தகைமைகள்:**

* 2011 ஆம் ஆண்டு சமூகவியல் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும். அத்துடன் இத்துறை சார்ந்த விடயமாக குறைந்தது ஒரு வருட அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த. (உ/த) சித்தியடைந்தவராகவும் இத்துறை சார்ந்த விடயமாக 5 வருட அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
* 25 - 32 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது.
* களமட்டத்திலான அனுபவங்களாக நடைமுறைப்படுத்தல், மேம்படுத்தல், மேற்பார்வை செய்தல், அவற்றை மதிப்பீடு செய்தல் போன்ற செயற்பாடுகள் முக்கிய விடயமாகக் கருதப்படும்.
* தமிழ்மொழியிலும் ஆங்கிலமொழியிலும் சிறந்த அறிவைப் பெற்றிருப்பதோடு எழுதவும் நன்கு தொடர்பாடவும் தெரிந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஒழுங்குபடுத்தல், முன்வைத்தல், உள்ளார்ந்த ஆளுமைத் திறன்கள் என்பவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.
* சமூக விஞ்ஞான ஆராய்ச்சி முறைமைகளின் தரம், அவற்றின் அளவுகளை விளக்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளவராக இருத்தல் முக்கியமாகக் கருதப்படும்.
* கணினியறிவில் Ms Office, SPSS என்பன தெரிந்திருத்தல் அவசியமாகக் கருதப்படும்.
* மோட்டார் வா்கன அனுமதிப்பத்திரம் உள்ளவராகவும், யாழ்.மாவட்டத்தில் எந்த இடமெனினும் சென்று பணியாற்றக்கூடியவராகவும் இருப்பது அவசியமாகக் கருதப்படும்.

**வேலையின் முக்கியமான செயற்பாடுகள் மதிப்பீடும் கண்காணிப்பும்**

* மதிப்பீடு, கண்காணிப்பு சார்ந்த அனைத்து செயற்பாடுகளையும் திட்ட இணைப்பாளருடன் இணைந்து தொடர்புபடுத்தலும் மேற்பார்வை செய்தலும், தேவையேற்படின், சமூக உளநலப் பராமரிப்பாளர்களிடம் இருந்து பெறப்படும் அளவுரீதியிலான, தரரீதியிலான தகவல்கள் இதில் உள்ளடங்கும்.
* பயனாளிகளின் சுயதொழில் ஊக்குவிப்புத் தொடர்பான மேற்பார்வை, மதிப்பீடு ஆவணங்களை மூன்று மாத காலத்திற்கு ஒரு தடவை அறிக்கையாகச் சமர்ப்பித்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளை உடைய இருபாலாரும் 15.08.2012 ஆம் திகதிக்கு முன்பாக உறவுமுறையல்லாத பரிந்துரை செய்யக்கூடியவர்கள் இருவரின் பெயர் குறிப்பிட்ட (Two non related referees) சுயவிவரக்கோவையினை சாந்திகத்தின் தலைமைக் காரியாலயத்தில் நேரடியாகவோ அல்லது கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரிக்குத் தபால் மூலமாகவோ அனுப்பி விண்ணப்பிக்கலாம் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**முகவரி:**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்,**
**சாந்திகம்,**
**இல.88/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

**நிறைவேற்றுப் பணிப்பாளர்,**
**சாந்திகம்.** (சி/2172)(2-6)

# மரண அறிவித்தல்

## திருமதி குணரட்ணம் சரோஜினிதேவி



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொட்டடி சீனிவாசகம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணரட்ணம் சரோஜினிதேவி நேற்று (07.08.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவபாக்கியத்தின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னலெட்சுமியின் மருமகளும், குணரத்தினத்தின் அன்புமனைவியும், குணரஞ்சன், குணரஞ்சினி (இத்தாலி), குணநேசன் (இத்தாலி), குணநிரஞ்சினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்றவர்களான சிரோன்மணி, தம்பிஜயா, பத்மநாதன், பாலசிங்கம், சிவராசா மற்றும் லோகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும், சங்கரப்பிள்ளை, சோதிநாதன், பத்மநாதன், தனேந்திரன், இரத்தினசிங்கம், பரமேஸ்வரி, தயாவதி காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனியும், கணேஸ் (இத்தாலி), பரமலிங்கம் (சுவிஸ்), விமலாம்பிகை, காலஞ்சென்ற கலைசெல்வி ஆகியோரின் மாமியும், சாருஜன் (இத்தாலி), விபுசன் (சுவிஸ்), கௌசிகா (சுவிஸ்), தருசன் (சுவிஸ்), காயத்திரி, நவனீதன், சிந்துஜன், கபிலன், நிதானன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2012) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 92, சீனிவாசகம் வீதி,**
**கொட்டடி யாழ்ப்பாணம்.** (21435)(8.14)

**தகவல்:**
**நா. குணரட்ணம் (கணவர்)**



# 2012 வாக்காளர் பட்டியல் டிசெம்பரில் வெளியிடப்படும்

## தேர்தல் ஆணையாளரின் பணிப்புரையை அடுத்து

யாழ்ப்பாணம், ஓக.8

இந்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதி, 2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலை வெளியிடுவதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் பணித்துள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல்தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஜூன் மாதத்திலிருந்து இடம் பெற்றுவருகின்றன. தற்போது மக்களிடமிருந்து பெறப்பட்ட 'பி, சி' படிவத்தை கிராம சேவையாளர்கள் மாவட்ட செயலக தேர்தல் திணைக் களத்தில் ஒப்படைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நடவடிக்கை இந்த மாதம் 15 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும்.

இந்தக் காலப்பகுதியில் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளாதவர்கள், தம்மை பதிவு செய்யுமாறு கோரி கடிதம் அனுப்பினால், தேர்தல் ஆணையாளரின் அனுமதியுடன் உரிமை கோரிக்கை காலத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் மே மாதம் 31 ஆம் திகதியே புதிய வாக்காளர் பெயர்ப்பட்டியல் வெளியிடப்படுவது வழமை. இருப்பினும் இந்த முறை 2012 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப்பட்டியலை இந்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதி வெளியிடுவதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன- என்றார். (த-5)

# அனலைதீவு விவசாயிகளுக்கு புதிய இன மிளகாய் விதை

யாழ்ப்பாணம், ஓக.8

அனலைதீவில் தெரிவு செய்யப்பட்ட 20 விவசாயிகளுக்குப் புதிய இனத்தைச் சேர்ந்த மிளகாய் விதைகளை யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் வழங்கவுள்ளது.

யாழ்.மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தலைமையில் நாளை வியாழக்கிழமை அனலைதீவுக்குச் செல்லும் திணைக்கள அதிகாரிகள் அங்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 20 விவசாயிகளுக்கு புதிய இன மிளகாய் விதைகளை விநியோகிக்கவுள்ளதுடன் மிளகாய் செய்கைக்கான பயிற்சிகளையும் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திணைக்களத்தில் விவசாய பாடவிதான உத்தியோகத்தர்களான ஆர்.செளந்தரராஜன், கே.தனபாலசிங்கம், உதவி விவசாயப் பணிப்பாளர், எஸ்.சதீஸ்வரன் விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை உத்தியோகத்தர் அ.ரமணிதரன் ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

வேலணை விவசாய போதனாசிரியர் எஸ்.இராமநாதன் தலைமையில் விவசாயிகளுக்கான மிளகாய் செய்கை தொடர்பான செயல்திட்ட விரிவுரைகளும் பயிற்சிகளும் வழங்கப்படும். (த-17)

### சட்டவிரோத மதுபான விற்பனை

# கடந்த மாதம் மட்டும் 130 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம்,ஓக. 8

யாழ். மதுவரித் திணைக்களத்தின் தேடுதல் வேட்டையில் கடந்த மாதத்தில் மட்டும் 130 பேர் சட்ட விரோத மதுபான விற்பனை மற்றும் 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகெரட் விற்பனை செய்த குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர் என யாழ். மதுவரித்திணைக்கள அத்தியட்சகர் என். சோதிநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம், பருத்தித் துறை, மல்லாகம், சாவகச்சேரி, சங்கானை ஆகிய மதுவரித் திணைக்களம் பிரிவுகள் ஊடாக மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 130 பேர் சட்டவிரோத மதுபானத்தை மதுப்பாவனை நிலையங்களில் வைத்து விற்பனைசெய்தமை மற்றும் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்தமை ஆகிய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் யாழ்ப்பாணத்தில் 46 பேரும், பருத்தித் துறையில் 11 பேரும், மல்லாகத்தில் 24 பேரும், சாவகச்சேரியில் 15 பேரும், சங்கானையில் 34 பேரும் என 130 பேர் மதுவரித் திணைக்களத்தில் சட்ட முறைகளுக்கு அப்பால் மதுபான விற்பனை, சிகரெட் விற்பனை என்பவற்றை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப் பட்டுக் குற்றப்பணம் அறவிடப்பட்டதுடன் இவ்வாறன நடவடிக் கைகள் இனி மேற் கொள்ளக்கூடாது என எச்சரிக்கப்பட்டும் உள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டுக் குற்றப் பணம் அறவிடப்பட்டதுடன் இவ்வாறன நடவடிக்கைகள் இனி மேற்கொள்ளக்கூடாது என எச்சரிக்கப்பட்டும் உள்ளனர்.

இதைத்தவிர மதுவரித் திணைக்களத்தின் அவதானிப்புக்கு அப்பால் சில இடங்களில் சட்ட விரோத மதுசாரம், சிகரெட் என்பன விற்பனை செய்யப்படுகின்றன. இது போன்ற தகவல்களை பொதுமக்கள் எமக்கு அறியத்தரும் பட்சத்தில் உரிய நடவடிக்கைகளை மதுவரித் திணைக்களம் மேற்கொள்ளும் எனவும் சோதிநாதன் மேலும் கூறினார். (த-14)

# காலநிலை மாற்றத்தால் கடலுணவுகள் தட்டுப்பாடு

## அவற்றின் விலைகளும் உச்சம்

யாழ்ப்பாணம்,ஓக 8

குடாநாட்டுச் சந்தைகளில் கடலுணவுகளின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன. கடந்த மூன்று, நான்கு தினங்களாக இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

தற்போதுள்ள பருவப் பெயர்ச்சிக் காற்று மற்றும் கடும் வெப்பமான கால நிலை காரணமாக கடலில் மீன்கள் பிடிபடுவது மிகக் குறைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். காலநிலை மாற்றம் காரணமாகவே மீன்பாடு குறைந்துள்ளதாக கடற்தொழில் நீரியல்வளத்திணைக்களத்தின் அதிகாரி ஒருவரும் தெரிவித்தார்.

மீன்பாடு குறைந்துள்ளமை காரணமாக தமது வருமானமும் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். தமது படகுகளுக்கான எரிபொருள் செலவைக் கூட நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் மீன்பாடு உள்ளமையால் மீனவர்கள் பலர் கடந்த சில நாள்களாக தொழிலுக்கு செல்லவில்லை என மீனவர் சங்கப் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாகவே கடலுணவு விலைகள் சந்தைகளில் உயர்வடைந்துள்ளதென்று தெரிவிக்கப்படுகிறது.

தீவுப்பகுதி மற்றும் வடமராட்சி ஆகிய இடங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் மீன்களின் அளவு மிகமிகக் குறைந்துள்ளது.

குருநகர், பாஷையூர், கொட்டடி, நாவாந்துறை, காக்கைதீவு மீன் சந்தைகளில் விற்பனைக்குப் போதிய அளவு கடலுணவுகள் வந்து சேராமையால் முற்பகல் 11 மணியுடன் சந்தைகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

நேற்றைய சந்தை நிலவரப்படி மீன் 1 கிலோ 500 ரூபாவாகவும், இறால் 1 கிலோ 800 ரூபாவாகவும், கணவாய் 1 கிலோ 700 ரூபாவாகவும் நண்டு (பெரியது) 1 கிலோ 400 ரூபாவாகவும், சுறாமீன் 1 கிலோ 1100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. (த-17)

# அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஓக.8

காரைநகரில்அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற குற்றத்துக்காக அதே இடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததோடு மணலையும் பறிமுதல் செய்தது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

சில தினங்களுக்கு முன்னர் இவ்வாறு சட்ட விரோதமாக மணல் ஏற்றிச் சென்ற போது ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். தான் குற்றவாளியென மன்றில் அவர் தெரிவித்திருந்தார். பிணையில் விடப்பட்ட அவர் மீதான வழக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில் சட்டத்தரணி ஒருவர் மூலமாக நகர்தல் பத்திரம் சமர்ப்பித்து நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது சந்தேக நபர், தான் குற்றவாளியென மன்றில் தெரிவித்தார்.

அதனை அடுத்து அவர் புரிந்த குற்றத்துக்காக நீதிமன்று 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் மணலையும் பறிமுதல் செய்தது.

மணல் ஏற்றிய டிராக்டரை என்ஜினை 12 லட்சம் ரூபா பிணையில் விடுவித்த நீதிமன்று டிராக்டர் பெட்டி பதிவு இல்லாமல் இருந்ததனால் அதனை மன்றில் தடுத்து வைக்க உத்தரவிட்டது. (த-4)

# திருநெல்வேலிச் சந்தையில் வாழைக்குலைத் தராசில் மோசடி

## நல்லூர் பிரதேச சபை கண்டுபிடித்தது

யாழ்ப்பாணம்,ஓக 8

திருநெல்வேலிச் சந்தையில் வாழைக் குலை விற்பனைப் பகுதியில் உள்ள தராசில் இருந்த நிறை மோசடி நல்லூர் பிரதேச சபையினால் கண்டு பிடிக்கப்பட்டதுடன் குறித்த தராசுக்குப் பொறுப்பாக இருந்தவரும் கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

இதனையடுத்து வாழைக் குலை மொத்த விற்பனைப் பகுதியில் 'எலக் ரோனிக்' தராசைப் பயன்படுத்துமாறு பிரதேச சபை அறிவித்துள்ளது.

சபைக்குக் கிடைத்த முறைப்பாடு ஒன்றை அடுத்து கடந்த சனிக்கிழமை சபையின் தலைவர் ப. வசந்தகுமார் தலைமையில் அந்த வாழைக் குலை விற்பனைப் பகுதிக்குச் சென்ற குழுவினர் தராசைச் சோதனை செய்த போது அதில் மோசடி செய்யப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வாழைக்குலை விற்பனைப் பகுதி தொடர்பாகப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்தே இந்தத் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டதாகச் சபையின் தலைவர் பா. வசந்தகுமார் தெரிவித்தார்.

குறித்த தராசில் செய்யப்பட்டிருந்த நிறை மோசடி உடனடியாகச் சீர் செய்யப்பட்டதுடன் அதற்குப் பொறுப்பாக இருந்தவர் கடுமையாக எச்சரிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதனையடுத்து வாழைக் குலை மொத்த விற்பனைப் பகுதியில் 'எலக்ரோனிக்' தராசைப் பயன்படுத்துமாறு பிரதேச சபை அறிவித்துள்ளது. (த-17)

# குடிதண்ணீரைப் போத்தலில் அடைக்கும் தொழிற்சாலை

## நல்லூர் பிரதேச சபை அமைக்கிறது

யாழ்ப்பாணம், ஓக. 8

குடிதண்ணீரைப் போத்தலில் அடைத்துக் குறைந்த விலையில் அதனை விற்பனை செய்யும் திட்டம் ஒன்றை நல்லூர் பிரதேச சபை மேற்கொள்ளவுள்ளதாக அதன் தலைவர் ப. வசந்தகுமார் தெரிவித்தார்.

கோண்டாவிலில் உள்ள சபைக்குச் சொந்தமான நன்னீர் கிணற்றில் இருந்தே குடிதண்ணீரைப் பெற்று போத்தலில் அடைத்து அதனை சந்தைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடிதண்ணீரைப் போத்தலில் அடைப்பதற்கான தொழிற்சாலைக்கான கட்டட வசதி மற்றும் இயந்திர சாதனங்களை ஏற்படுத்துவதற்கான நிதி வளத்தையும் பிரதேச சபை ஒதுக்கியுள்ளதாக அதன் தலைவர் மேலும் கூறினார்.

தற்போது கோண்டாவில் கிணற்றின் நீர் மாதிரி கொழும்புக்கு பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது பகுப்பாய்வு அறிக்கை கிடைக்கப் பெற்றதும் தொழிற்சாலையை நிறுவுவதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் , இந்த தண்ணீர் மிகக் குறைந்த விலையில் விநியோகிக்கப்படும் என்று தலைவர் மேலும் குறிப் பிட்டார் . (த-17)

# வாழைநாரில் இருந்து பொருள்கள் தயாரிக்கும் சுயதொழில் திட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 8

வாழை நாரில் இருந்து உற்பத்திப் பொருள்களை தயாரிப்பதற்கான சுயதொழில் முயற்சித் திட்டம் ஒன்றை நீர்வேலி வாழைக்குலைச் சங்கம் விரைவில் ஆரம்பிக்க உள்ளது. அதற்கான ஆரம்ப பணிகளில் சங்கம் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வாழை நாரில் இருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் தெற்குச் சந்தைகளில் அதிகவரவேற்பைப் பெற்றுள்ளமையால் அவற்றை தயாரித்துச் சந்தைப்படுத்துவதன் மூலம் பெருமளவு வருமானத்தை ஈட்டக் கூடிய நிலையுள்ளது இதனை கருத்தில் கொண்டு இந்த சுயதொழில் முயற்சித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் இந்த சுயதொழில் முயற்சித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தை ஆரம்பித்துச் செயற்படுத்துவதற்கான கட்டட வசதி மற்றும் இதர வளங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (த-17)

# தலைவர்களின் சிலைகள் உடைப்பு

## மதுரையில் நேற்றுப் பதற்றம்

மதுரை, ஓக.8

மதுரையில் நேற்று அதிகாலை மதுரை மாவட்டம் அவனியாபுரம் அருகே அம்பேத்கர் சிலையும், இமானுவேல் சேகரன் சிலையும் விஷமிகளால் உடைத்து சேதமாக்கப்பட்டன. இதனைக் கண்டித்து அந்தப் பகுதி மக்கள் மறியலில் ஈடுபட்டனர். பதற்றத்தைத் தணிக்க பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

மதுரை பெருங்குடியில் விமான நிலையம் செல்லும் பாதையில் அம்பேத்கர் சிலை உள்ளது. சிமெந்திலான இந்தச் சிலையை யாரோ அதிகாலையில் உடைத்துச் சிதைத்துள்ளனர். அதேபோல், பெருங்குடியிலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தில் அருப்புக்கோட்டை வீதியில் உள்ள சின்ன உடைப்புப் பிரிவில் இருந்த இமானுவேல்சேகரன், அம்பேத்கர் சிலைகளையும் நள்ளிரவில் விஷமிகள் சேதப்படுத்தி விட்டுத் தப்பி ஓடி விட்டனர். சிலைகள் உடைக்கப்பட்டுள்ளன. இது





குறித்து தகவல் அறிந்த அந்தப் பகுதியைச் சேர்ந்த 200 இற்கும் அதிகமானோர் நேற்றுக் காலை 5 மணிக்கு வீதியில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இதனால், போக்குவரத்து பாதித்து பதற்றம் ஏற்பட்டது.

மதுரை பொலிஸ் அதிகாரி பாலகிருஷ்ணன் தலைமையில் பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டனர். பதற்றத்தைத் தணிக்க அருப்புக்கோட்டை வீதியில் வாகனங்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டது.

சிலை உடைப்பு சம்பவத்தைக் கண்டித்து பெருங்குடி விமான நிலையம் செல்லும் பிரிவில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநகர் மாவட்டத் தலைவர் பாண்டியம்மாள் தலைமையில் தொண்டர்கள் மறியலில் ஈடுபட்டுள்ளனர். அங்கும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். சிலை உடைப்புச் சம்பவத்தால் அலங்காநல்லூர், பாலமேடு பகுதிகளிலிருந்து தொலைதூர கிராமங்களுக்குச் செல்லும் அரசு பஸ்கள் நேற்றுக் காலை 5 மணி முதல் நிறுத்தப்பட்டன. மதுரை நகர் மற்றும் புறநகர் பகுதியில் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். (வ)

## கிரானைட் கல் முறைகேடு; அழகிரியின் மகன் மீது வழக்கு



மதுரையில் அரசு குவாரியில் சட்டவிரோதமாக கிரானைட் கற்களை வெட்டி எடுத்ததற்காக மத்திய அமைச்சர் மு.க. அழகிரியின் மகன் துரை தயாநிதி மீதும், அவரின் பங்குதாரர் நாகராஜ் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

துரை தயாநிதியும் நாகராஜும் ஒலிம்பஸ் என்ற கிரானைட் நிறுவனத்தை நடத்தி வருகின்றனர்.

இந்த நிறுவனம், அரசு நிலத்தில் உள்ள கிரானைட் குவாரிகளில் இருந்து கற்களை வெட்டி எடுத்துள்ளது என்று முன்னாள் மதுரை மாவட்ட ஆட்சியாளர் சகாயம் மற்றும் அதிகாரிகளின் ஆய்வில் தெரிய வந்துள்ளது. இதை யடுத்து இவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. (வ)

## அஸாமில் மீண்டும் கலவரம்

### 3 பேர் உயிரிழப்பு

அஸாம் மாநிலத்தின் கோக்ராஜ்கர் பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கும், கலவரக்காரர்களுக்கும் இடையே நேற்றுக்காலை நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர்.

அஸாம் மாநிலத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஓய்ந்த கலவரம் மீண்டும் வெடிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் கடந்த சில தினங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 64 ஆக உயர்ந்துள்ளது.

ராணிகுலி பொலிஸ் நிலையத்தைக் குறிவைத்து கலவரக்காரர்கள் நடத்திய தாக்குதலைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதில் 3 பேர் உயிரிழந்தனர். 2 பேர் படுகாயமடைந்துள்ளனர். கடந்த 48 மணி நேரத்தில் அஸாமில் நடைபெற்ற 2ஆவது துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)


## மோடியின் எதிர்ப்பாளர் ஆரம்பிக்கிறார் புதிய கட்சி

பாரதீய ஜனதாக் கட்சியில் இருந்து விலகிய குஜராத் மாநில முன்னாள் முதல்வர் கேசுபாய் பட்டேல் 'குஜராத் பரிவர்த்தன் கட்சி' என்ற பெயரில் புதிய கட்சி ஆரம்பிக்கவுள்ளார்.

குஜராத் மாநிலத்தில் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சி பிளவுபட்டுள்ளது. மாநில முதல்வர் நரேந்திர மோடியின் எதிர்ப்பாளர்களை ஒன்று திரட்டி மாநில முன்னாள் முதல்வர் கேசுபாய் பட்டேல், குஜராத் பரிவர்த் தன் கட்சி என்ற புதிய கட்சியைத் ஆரம்பித்துள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சியில் இருந்து விலகுவதாக கேசுபாய் பட்டேலும் அவரது ஆதரவாளர்களும் கடந்த சனிக்கிழமையன்று அறிவித்தனர். இந்தநிலையில் மாநிலத் தலைநகர் அக மதாபாத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த் கேசுபாய் பட்டேல், தமது புதிய கட்சிக்கு குஜராத் பரிவர்த்தன் கட்சி என்ற பெயர் சூட்டியிருப்ப தாகக் கூறியுள்ளார்.

இந்த ஆண்டு இறுதி அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியில் நடைபெற உள்ள மாநில பேரவைத் தேர்தலில் மொத்தம் உள்ள 182 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தப் போவதாகவும் கேசுபாய் பட்டேல் அறிவித்துள்ளார். (வ)



அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்ற லோக்சபா சபை முன்னவர் சுஷில் குமார் ஷிண்டேவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் வாழ்த்துத் தெரிவித்தார். அருகில் பா.ஜ. மூத்த தலைவர் அத்வானி நிற்கின்றார்.

## கண்ணியில் சிக்கி படையினர் இருவர் சாவு

டில்லி, ஓக.8

சத்தீஸ்கர் மாநிலம் தண்டேவாடா மாவட்டத்தில் நேற்றுக் காலை கண்ணி வெடித் தாக்குதலில் துணை இராணுவ ஜவான்கள் இருவர் உயிரிழந்தனர்.

படையினர்களுக்குத் தேவையான பொருள்களை எடுத்துச் சென்ற வாகனத்தின் மீது நடத்தப்பட்ட கண்ணி வெடித்தாக்குதலில் சம்பவ இடத்திலேயே இரண்டு படையினர் உயிரிழந்தனர் என்றுமூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வ)

## நித்தியின் சீடர்களின் போக்கைக் கண்டிக்கிறார் மதுரை ஆதீனம்



மதுரை ஆதீன மடத்தின் மரபுகளை நித்தியானந்தாவின் சீடர்கள் மதித்துக் காப்பாற்றவில்லை என்ற மதுரை ஆதீனத்தின் திடீர் முறைப்பாட்டால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கும்பகோணம் அடுத்த திருப்புறம்பியத்தில் உள்ள சாட்சிநாதர் சாமி கோயிலுக்கு மதுரை ஆதீனம் நேற்று முன்தினம் சென்றார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

நித்தியானந்தா, கைலாஷ் யாத்திரை சென்றுள்ளதால், நான் மட்டும் வந்துள்ளேன். மதுரை ஆதீனத்துக்குட்பட்ட கோயில் நிர்வாகங்கள் இப்போதும் என்னுடைய கட்டுப்பாட்டில்தான் உள்ளன.

நித்தியானந்தா மீது பல வழக்குகள் பல நீதிமன்றங்களில் உள்ளன. அவர் மீது உள்ள வழக்குகளுக்கு அவர்தான் பதில் கூற வேண்டும். மதுரை ஆதீன மடத்துக்குச் சில மரபுகள் உள்ளன. இந்த மரபுகளை நித்தியானந்தாவோடு வந்துள்ள சீடர்கள் மதித்து காப்பாற்றவில்லை. நித்தியானந்தா அந்த மரபுகளைக் கடைப்பிடிப்பாரா என்பது கடவுளுக்குதான் தெரியும்- என்றார். (வ)

## இனிவருகின்ற லோக்சபா தேர்தலில் திரிணமூல் காங். தனித்துப் போட்டி

டில்லி, ஓக 8

2014 இல் நடைபெறவுள்ள லோக்சபா தேர்தலில் திரிணமுல் காங்கிரஸ் மேற்கு வங்க மாநிலத்தில், தனித்துப் போட்டியிடத் திட்டமிட்டுள்ளது.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் முக்கிய கட்சிகளில் ஒன்றான, திரிணமுல் காங். 2009 இல் நடைபெற்ற லோக்சபா தேர்தலில், காங் கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது. அதுபோல், 2010 இல் மேற்கு வங்க மாநிலத்தில் நடந்த சட்ட சபைத் தேர்தலிலும் இந்தநிலை தொடர்ந்தது.

இந்தநிலையில் ஜனாதிபதித் தேர்தலில், ஐ.மு.கூ. வேட்பாளர் பிர்ணாப் முகர்ஜிக்கு, மம்தா பானர்ஜி தன் ஆதரவைத்தர காலம் தாழ்த்தியது, காங்கிரஸ் மற்றும் திரிணமுல் காங்கிரஸ் கட்சிகளிடையே கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தியது. இந்தநிலையில், 2014 இல் நடைபெறும் லோக்சபா தேர்



தலில், காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைக்கப்போவதில்லை என்று திரிணமுல் காங். கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தக்கட்சித் தலைவர் சுதீப் பந்தோபாத்யாய் தெரிவித்ததாவது:-

2014 இல் நடைபெறவுள்ள லோக்சபா தேர்தலில், மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள 42 தொகுதிகளிலும், திரிணமுல் காங். தனித்துப் போட்டியிடும். பொது வாழ்வில் ஈடுபடுபவர்கள் நேர்மையாளராகவும், வெளிப்படையாகவும், எளிமையா கவும் இருக்க வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர். இத்தகைய குண நலன்களைக் கொண்டவராக எங்கள் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி திகழ் கிறார்-என்றார். (வ)

## கேரளாவில் நிலச்சரிவு; 4 பேர் சாவு

கேரளாவின் கோழிக்கோடு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கனமழையால் நேற்றுக் காலை நிலச் சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர்.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மேலும் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர். இதேவேளை பழசி அணையின் மதகுகள் திறக்கப்படாததால் கன்னூர் மாவட்டத்தில்இருட்டி பகுதி ஓரளவு நீருக்குள் மூழ்கி விட்டது. இதனால் ஏராளமான மக்கள் வேறு இடங்களுக்கு சென்றுள்ளனர்.

## கல்லூரிக் கட்டடம் இடிந்து 10 பேர் உடல் நசுங்கிச் சாவு



ஸ்ரீபெரும்புதூர், ஓக 8

காஞ்சிபுரத்தில் பொறியியல் கல்லூரிக் கட்டடம் சரிந்து விழுந்ததில் ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த 9 தொழிலாளர்கள் உடல் நசுங்கி உயிரிழந்தனர். இதில் சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தொழிலாளி ஒருவர் நேற்று முன்தினம் நள்ளிரவில் உயிரிழந்தார். இதை யடுத்து சாவு எண்ணிக்கை பத்தாக உயர்வடைந்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார் சத்திரம் அருகே உள்ள குன்னம் என்ற இடத்தில் தனியார் பொறி யியல் கல்லூரிக்காக புதிதாக 4 மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

ஒரிசா, அஸாம், குஜராத் உள்ளிட்ட பல்வேறு வட மாநிலங்களைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இரவு பகலாக கட்டடப்பணியில் ஈடுபட்டு வந்தனர். கட்டடம் ஒன்று திடீரென இடிந்து விழுந்தது. இந்த இடிபாடுகளி டையே சிக்கி 10 பேர் உயிரி ழந்தனர். மேலும் 6 பேர் காயமடைந்து காஞ்சிபுரம் அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இடிபாடுகளில் மேலும் பலர் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (வ)

# தாம்ரே புயல் தாண்டவம்

## சீனாவில் 9 பேர் சாவு; 4 பேரைக் காணவில்லை

பீஜிங், ஓக. 8

சீனாவில் வீசிய கடும் புயலால் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளனர். 9 பேர் உயிரிழந்துள்ளனர்; 4 பேரைக் காணவில்லை.

சீனாவின் வடகிழக்கு மாகாணம் 'தாம்ரே' புயலால் பேரழிவைச் சந்தித்துள்ளது. நேற்றுமுன்தினம் லயோனிங் மாகாணத்தைப் புயல் தாக்கியதில் ஒரு லட்சத்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளனர்.

புயலால் ரயில் சேவை தற்காலிகமாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜியூயான் நகரத்தில் மட்டும் 6 பேர் இறந்துள்ளனர். மின்விநியோகம் தடைப்பட்டுள்ளது. சாலைப்போக்குவரத்து முடங்கியுள்ளது. குடிதண்ணீர்க்குழாய்கள் உடைபட்டுள்ளன.



கனமழை காரணமாக, சண்டெஹே மற்றும் ஜிஹே ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, பெங்ஜி நகரில் உள்ள சுரங்கத்தில் 300 தொழிலாளர்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர்.

கனமழை காரணமாக, சண்டெஹே மற்றும் ஜிஹே ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, பெங்ஜி நகரில் உள்ள சுரங்கத்தில் 300 தொழிலாளர்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர்.

மத்திய சீனாவின் ஹுபேய் மாகாணத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர்.

இந்தத் தகவல்களை அரசின் செய்தி நிறுவனமான ஜின்ஹுவா வெளியிட்டுள்ளது.

புயல் பாதிப்பு நேற்றும் மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது. ஜியாங்யாங் நகரத்தில் கடும் மழை காரணமாகத் தாழ்வான பகுதிகளிலும், சுற்றியுள்ள கிராமப்பகுதிகளிலும் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

தென்மேற்கு சீனாவில் யுனான் மாகாணத்தில் டியேஜியா கிராமத்தில் 200-க்கும் மேற்பட்ட மக்கள் சகதிக்குள் சிக்கியுள்ளனர். இதில் 100 பேர் வரை மீட்கப்பட்டுள்ளனர் என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அணுகுண்டுத் தாக்குதல் நினைவு ஜப்பானில் திங்களன்று அனுஷ்டிப்பு



டோக்கியோ, ஓக. 8

ஜப்பானின், ஹிரோஷிமா நகரில் அமெரிக்கா, அணுகுண்டு வீசித் தாக்குதல் நடத்தியதன், 67ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரின்போது, நடத்தப்பட்ட இந்தக் குண்டு வீச்சில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். மேலும், பலர் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டனர். இந்தத் துயர சம்பவ தினத்தை ஜப்பானிய மக்கள் ஒவ்வொரு வருடமும் அனுஷ்டித்து வருகின்றனர்.

இந்த நினைவு தினத்தை முன்னிட்டு நடந்த அமைதிப் பேரணியில், சிறப்பு விருந்தினராக, 1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6ஆம் திகதி ஜப்பான் மீது அணுகுண்டுத் தாக்குதல் நடத்த உத்தரவிட்ட அமெரிக்க ஜனாதிபதி ஹரி துருமேனின் பேரன் கலந்து கொண்டார். இது தவிர, ஜப்பானுக்கான அமெரிக்கத் தூதர், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ஹிரோஷிமா நகர மேயர் அணு ஆயுதங்கள் வைத்துள்ள அனைத்து நாடுகளும், இந்த நகரைப் பார்வையிட வருகை தரவேண்டும் எனக் கேட்டுகொண்டுள்ளார். இந்த அமைதிப் பேரணியில் ஜப்பானின் பிரதமரும் கலந்து கொண்டார்.

## பூட்டுத் தயாரிக்கும் தொழிற்சாலையில் விபத்து

சீனாவில் பூட்டுத் தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்; 14 பேர் காயமடைந்தனர். கிழக்கு சீனாவின் ஜேஜியாங்க் மாகாணத்தில் வென்செயு கிராமத்தில் ஒரு குடும்பத்தினர் நடத்தி வந்த தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் வெடிவிபத்து ஏற்பட்டது. இந்த விபத்தால் 300 சதுரமீற்றர் பரப்புள்ள இடம் தீக்கிரையானது.

ஒகாய் மாவட்ட அதிகாரி ஒருவர் இதுகுறித்துக் கூறுகையில், வன்பொருள் தொடர்பான இந்தத் தொழிற்சாலை சட்டவிரோதமாக நடத்தப்பட்டுவந்துள்ளது. அதில் பூட்டுகளைத்தயாரித்துவந்துள்ளனர்.

இயந்திரத்தில் இருந்து வந்த தீப்பொறி, அடர்த்தியாகக் குவிக்கப்பட்டிருந்த துகள்களில் பட்டுத் தீப்பிடித்ததால் வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது என்றார். காயமடைந்தவர்களில் 5 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால், இறந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

## துருக்கியில் நிலநடுக்கம்

துருக்கியின் தென்கிழக்குப் பகுதியில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் இது 5.3 அலகுகளாகப் பதிவானது. இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. சொத்துகளுக்கும் சேதம் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் நிலநடுக்கம் உணரப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிர்நாக் மாகாணத்தில் உளுடெரே பகுதியில் நிலநடுக்கத்தின் அளவு கடுமையாக உணரப்பட்டது.

இந்தப் பகுதியானது ஈராக் எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. நிலநடுக்கம் ஏற்பட்டபோது மக்கள் வீடுகளை விட்டு வெளியேறிவிட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 5 வருட 'அறைத் தண்டனை'யைப் பிள்ளைகளுக்கு வழங்கிய தாய்

ரஷ்யாவைச்சேர்ந்த பெண்ணொருவர் தனதுபிள்ளைகளை 5 வருடங்களாகப் படுக்கையறையினுள் அடைத்து வைத்த குற்றத்துக்காக 10 வருட சிறைதண்டனையை எதிர்கொண்டுள்ளார்.

மேற்படி பெண் தனது மகளான டயானாவையும்,6 வயது மகனான பவெலையும் தனது வீட்டின் படுக்கையறையில்வைத்து, அந்த அறையின் கதவில் ஆணிகளை அடித்து, கடந்த 5 வருடங்களாகச் சிறைப்படுத்தி வைத்துள்ளார்.

இழந்த தனது வாழ்க்கையை மீண்டும் திரும்பப் பெறுவதற்காகத் தான் இவ்வாறு செய்ததாக அவர் கூறியுள்ளார். இறுதியில் தமது பாட்டியினால் அவர்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவின் ரோஸ்டோவ் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்ற சமூகவியலாளர்களும், பொலிஸாரும் பெரும் ஆச்சரியமடைந்துள்ளனர்.

இரு பிள்ளைகளும் கடந்த 5 வருடங்களாக மிகவும் அச்சம் நிறைந்த சூழலில் வாழ்ந்துள்ளனர். அங்கு மலசல கூடமோ, குளியலறையோ இருக்கவில்லை. அந்தச் சிறுவர்கள் உறங்குவதற்கான மெத்தையைத் தவிர அங்கு வேறு எதுவும் இருக்கவில்லை.

அந்தப் பிள்ளைகள் மீட்கப்பட்ட பின் மெத்தையை வெளியில் எடுத்தபோது மெத்தைக்கடியில் ஒரு தொகைப் புழுக்களும், மூட்டைப் பூச்சிகளும் கூட்டமாகக் காணப்பட்டன என பிள்ளைகளின் பாட்டி தெரிவித்தார்.

இரினா யேகோராவோ வயது 24 என்ற பெண்ணே மேற்படி பிள்ளைகளின் தாயென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

'நான் எப்போதும் இந்தப் பிள்ளைகள் குறித்துக் கவலையடைந்ததில்லை. நான் மறுபடியும் பழைய வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும்' என அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

இரினா மற்றும் அவரது கணவர் இருவருமே மது பாவனைக்கு அடிமையானவர்கள். சிறுவர் கொடுமை மற்றும் தவறான சிறைத் தண்டனை என்பவற்றுக்காக மேற்படி இருவரும் தற்போது சிறைத் தண்டனையை எதிர்கொண்டுள்ளனர்.

## அணு விஞ்ஞானிகள் நால்வர் கொலை குற்றத்தை ஏற்றனர் குற்றவாளிகள்



அணு விஞ்ஞானிகள் நால்வரைக் கொலை செய்ததை ஒப்புக்கொண்டதாகக் கூறப்படும் ஈரானியர்கள் சிலரை அந்த நாட்டுத் தொலைக்காட்சி காண்பித்தது. இவர்கள் 13 பேர் கொண்ட குழுவொன்றின் அங்கத்தவர்கள் எனவும் இந்தக் குழுவினர் ஈரானிய விஞ்ஞானிகளைக் கொலை செய்வதற்கு இஸ்ரேலிய புலனாய்வுப் பிரிவினரால் பயிற்சியளிக்கப்பட்டனர் எனவும் ஈரான் தெரிவித்துள்ளது.

விஞ்ஞானிகளைத் தாம் எவ்வாறு கொலை செய்தனர் என்பது குறித்து இந்தக் குழுவினர் உரையாடுவதை மேற்படி தொலைக்காட்சி ஒளிபரப்பியதுடன் விஞ்ஞானியொருவரின் காரில் காந்தம் பொருத்தப்பட்டக் குண்டை இணைக்கும் காட்சியை மீளச்செயற்படுத்திக் காண்பித்தது. மேற்படி 13 பேரில் 5 பெண்களும் அடங்குகின்றனர்.

2010 ஜனவரி மாதம் முன்னிலை அணு விஞ்ஞானி ஒருவரை 120,000 டொலர்கள் பணத்துக்காகக் கொலை செய்தமை தொடர்பில் குற்றவாளியாகக் காணப்பட்ட மஜித் ஜமாலி பாஷி என்பவருக்கு மே 15 ஆம் திகதி மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரானின் ஏரோ – 2 ஏவுகணைப் பரிசோதனை

ஜெருசலேம், ஓக. 8

ஈரானுடன் மோதல் போக்கைக் கடைபிடித்து வரும் இஸ்ரேல் தனது ஏவுகணை வரிசையை விரிவுபடுத்தியுள்ளது.மத்திய ரக ஏவுகணைகளை வழிமறித்துத் தாக்கும் 'ஏரோ-2' ஏவுகணையை இஸ்ரேல் மேலும் மேம்படுத்தியுள்ளது. ஈரானின் மத்திய தூர ஏவுகணைகளான 'சஹாப்', 'செஜில்', சிரியாவின் 'ஸ்கட் டிஎஸ்' ஏவு கணைகளை வழிமறித்துத் தாக்கும் திறனுடையதாக 'ஏரோ-2' மேம்படுத்தப்பட்டுள்ளது என இஸ்ரேலில் இருந்து வெளியாகும் 'ஜெருசலேம் போஸ்ட்' பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

எதிர்வரும் மாதங்களில் 'ஏரோ-3' எனும் புதிய இடைமறித்துத் தாக்கும் ஏவுகணையை முதன் முறையாகப் பரிசோதித்துப் பார்க்க, அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

இஸ்ரேலின் முதல் தலைமுறை ஏவுகணை தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு 80 சதவீத நிதியுதவி அமெரிக்காவால் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யப் பிரஜைகள் இருவருக்கு எதிராக சதிக் குற்றச்சாட்டு

மட்றிட், ஓக. 8

ரஷ்யப் பிரஜைகள் இருவருக்கு எதிராக அல் குவைதா இயக்க சதி குற்றச்சாட்டுகளை ஸ்பெயின் அதிகாரிகள் பதிவு செய்துள்ளனர்.

அத்துடன் வெடிபொருள்களைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டும் குறித்த இருவருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளது என அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இவர்களுடன் கைது செய்யப்பட்ட துருக்கிய பிரஜைக்குப் எதிராக வெடிபொருள்களைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டு ஏற்கனவே சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த ரஷ்யப் பிரஜைகள் இருவரும் அல் குவைதா இயக்க உறுப்பினர்கள் எனச் சந்தேகிப்பதாக ஸ்பெயின் உள்விவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்ற விசாரணைகளுக்கான திகதி நிர்ணயிக்கப்படும் வரை குறித்த இருவரும் சிறைவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இயற்கைப் பேரிடர்களுக்குப் பாதுகாப்புப் பெறுவதற்காக சிறுவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகிறது.

# சிரியப் பிரதமர் 'பல்டி'

## போராளிகள் பலம் அதிகரிக்கின்றது

டமாஸ்கஸ், ஒக. 8
சிரியப் பிரதமர் ரியாத் ஹிஜாப் அரசு பொறுப்பில் இருந்து விலகி அரச எதிர்ப்புப் படையினருக்கு ஆதரவாக செயற்பட்டு வருகிறார் எனத் தகவல்கள்வெளியாகியுள்ளன.

சிரியாவின் பிரதமராக ரியாத் ஹிஜாப் கடந்த ஜூன் 6ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதி ஆசாத் தலைமையிலான அலாவிட்டே சிறுபான்மையின ஆட்சியில், ரியாத் ஹிஜாப் பெரும்பான்மைச் சன்னி முஸ்லிம் இனத்தவராக இருந்தார்.

ஜனாதிபதி ஆசாத்துக்கு ஆதரவாக இருந்த 31க்கும் மேற்பட்ட ஜெனரல்கள் எல்லையைத்தாண்டி, துருக்கிக்குச்சென்று அரச எதிர்ப்புப் போராளிகளுடன் இணைந்துள்ளனர்.

இந்த நிலையில் ரியாத் ஹிஜாப், அரச எதிர்ப்புப் படையினருக்கு ஆதரவாக



விலகி இருப்பது உறுதியானால், அது ஜனாதிபதிக்குக் குறிப்பிடத்தக்க இழப்பாக இருக்கும்.

ரியாத் ஹிஜாப், ஆட்சிப் பொறுப்பில் இருந்து விலகியுள்ளதை சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இயக்குநர் ரமி அப்தேல் ரஹ்மான் உறுதிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ரியாத் ஹிஜாப்பின் தற்போதைய நிலை குறித்து

**ரியாத் ஹிஜாப், ஆட்சிப் பொறுப்பில் இருந்து விலகியுள்ளதை சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இயக்குநர் ரமி அப்தேல் ரஹ்மான் உறுதிப்படுத்தியுள்ளார்.**

முரண்பட்ட தகவல்கள் உலவுகின்றன. அவர் ஜோர்டான் சென்று விட்டதாகச் சிலர் கூறுகின்றனர். தப்பிச் செல்வதற்கு முன்னரே கைது செய்யப்பட்டதாக சிலர் கூறுகின்றனர் - என்றார்.

அரச தொலைக்காட்சியான அல்-இக்பாரியா, துணைப் பிரதமர் ஒமர் கலாவன்ஜி தற்காலிகப் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும்,பிரதமர் ரியாத் ஹிஜாப் நீக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், சிரியாவின் அரச தொலைக்காட்சியான அல்-இக்பாரியா தலைமையகத்தின் மீது கலகக்காரர்கள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர்.

அரச எதிர்ப்புக் கலகக்காரர்களிடம் இருந்து, இறுதிப் பகுதியையும் கைப்பற்றி விட்டதாக ராணுவம் அறிவித்த 2 நாள்களுக்குள் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. டமாஸ்கஸின் முக்கிய பகுதியில் அமைந்துள்ள அரச தொலைக்காட்சித் தலைமையகத்தில் தாக்குதல் நடந்துள்ளது. 3ஆவது தளத்தில் நிகழ்ந்த இந்தக் குண்டு வெடிப்பால் உயிரிழப்பு ஏதுமில்லை. சிலர் லேசான காயமடைந்துள்ளனர் என செய்தித்துறை அமைச்சர் ஓம்ரான் அல்-ஜோஃபி தெரிவித்துள்ளார்.

# மாலியில் வலுக்கட்டாயமாக சிறுவர்கள் ஆயுதக் குழுக்களில்



பமாகோ, ஒக.8
வட ஆபிரிக்க நாடான மாலியில் செயல்படும் தீவிரவாதக் குழுக்களில் சிறுவர்கள் வலுக் கட்டாயமாக சேர்க்கப்படுகின்றனர் என்று சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது.

சிறுவர்களுக்கு ஆயுத பயிற்சி அளிப்பது, கண்ணி வெடிகளை அகற்ற பயன்படுத்துவது, உளவு வேலை பார்க்க அனுப்புவது, சமையல் பணியில் ஈடுபடுத்துவது உள்ளிட்டவற்றுக்குப் பயன்படுத்துகின்றனர். சிறுமிகளாயிருந்தால் அவர்களைப் பாலியல் அடிமைகளாக நடத்துவதாக மாலியில் செயல்படும் குழந்தைகள் நல அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக குழந்தைகள் நல அமைப்பின் தலைவர் மெழுத் லாமைன் சிஸே கூறியதாவது:-

தீவிரவாதக் குழுக்களில் கட்டாயமாகச் சேர்க்கப்படும் இந்தச்சிறுவர், சிறுமிகளில் பெரும்பாலானோர் மாலி, செனகல் மற்றும் நைஜரைச் சேர்ந்தவர்களாவர். இத்தகைய கொடூரமான செயலைத் தடுத்து நிறுத்த சர்வதேச அமைப்புகள் முன்வர வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

இப்போது மாலியின் வடக்குப் பகுதியில் தீவிரவாதக் குழுக்கள் சிறுவர்களைத் தேர்ந்தெடுத்து வருகின்றனர் என அவர் குறிப்பிட்டார். ஒருகாலத்தில் ஸ்திரமான ஜனநாயக நாடாகக் கருதப்பட்ட மாலியில் இப்போது உள்நாட்டுக் கலவரம் அதிகம் இடம்பெறுகின்றது. மாலியில் இப்போது இரண்டு குழுக்கள் செயல்படுவதால் ஸ்திரமான அரசை உருவாக்க முடியவில்லை. கடந்த மார்ச் 22ஆம் திகதி ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியும் நடந்தது. பொதுவாக வடக்குப் பகுதியில்தான் அடிக்கடி இதுபோன்ற கலவரங்கள் ஏற்படுகின்றன.

## தாக்கப்பட்டது செஞ்சிலுவைச் சங்கம்

லிபியாவின் மிஸ்டாட்ரா நகரிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிரனைட் மற்றும் எறிகணை போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பென்ஹாசி மற்றும் மிஸ்ராட்டா நகரங்களில் தமது பணிகளை நிறுத்தும் நோக்குடன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

இரண்டு நகரங்களிலும் கடந்த மூன்று மாதங்களில் நடத்தப்பட்ட ஐந்தாவது தாக்குதலாக இது பதிவாகியுள்ளது. எனினும் இந்தத் தாக்குதலில் தமது உத்தியோகத்தர்கள் யாரும் காயமடையவில்லை என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

குருத்வாரா சூட்டுச் சம்பவம்

## பாதுகாப்புச் சபையினருடன் ஒபாமா அவசர ஆலோசனை

அமெரிக்க மாநிலமொன்றிலுள்ள குருத்வாராவில் சீக்கியர்கள் 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து, அந்த நாட்டுப் பாதுகாப்புச் சபைத் தலைவர்களுடன் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அவசர ஆலோசனை நடத்தினார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து எப்.பி.ஐ. உட்பட பல்வேறு அமைப்புகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றன.

சூட்டுச் சம்பவம் குறித்து ஜனாதிபதி ஒபாமாவுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக அவர் உயர் அதிகாரிகளின் கூட்டத்தை வெள்ளை மாளிகையில் கூட்டினார். இதில் பாதுகாப்பு சபை எப்.பி.ஐ. இயக்குநர் ரோபர்ட் முல்லர், ராணுவ தளபதி ஜேக் லியு, உள்நாட்டுப் பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் பிரன்னன் ஆகியோர் பங்கேற்றனர். அப்போது துப்பாக்கிச் சூடு குறித்து ஒபாமாவிடம் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தனர். பின்னர் விஸ்கான்சின் ஆளுநர் ஸ்கொட் வோக்கர், ஓக் கிரீக் நகர மேயர் ஸ்டீவ் ஸ்கோப்பிடி ஆகியோரைத் தொடர்பு கொண்டு பேசிய ஒபாமா, பாதுகாப்புக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்வதாகத் தெரிவித்தார்.

இதற்கிடையில், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும், வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவும் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

## அலெப்போவை மீட்க 20 ஆயிரம் ராணுவம்

ஹோம்ஸ், ஒக.8
அலெப்போவைக் கைப்பற்ற 20 ஆயிரம் ராணுவத்தினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரியாவின், துருக்கி எல்லையோர நகரங்களும், சிரியாவின் 2ஆவது பெரிய தொழில் நகரமான அலெப்போவும் போராளிகளின் வசம் உள்ளது. அலெப்போவை மீண்டும் தங்கள் வசமாக்கக் கடும் தாக்குதல்களை அந்த நாட்டு ராணுவம் தற்போது தொடுத்துள்ளது.

சிரிய ஜனாதிபதி அசாத்தின் ராணுவ போர் விமானங்களும், ஹெலிகொப்டர்களும் குண்டு மழை பொழிந்து வருகின்றன. இவை தவிர மேலும் 20 ஆயிரம் ராணுவத்தினர் அலெப்போவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, சிரியாவில் நேற்று முன்தினம் நடந்த தாக்குதல்களில் 38 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 24 பேர் பொது மக்கள். மேலும் 10 ராணுவத்தினரும், 4 போராளிகளும் அடங்குவர் என அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் அ.யூட்.ததேயுஸ் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி விக்ரோறியா அருளானந்தம்**

அவர்கள் 06.08.2012 ஆம் திகதி இறைபதம் அடைந்ததனையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர், அங்கத்தவர்கள்,
கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள்,
நலன்புரிசங்கம்- யாழ்.மாவட்டம்.
(சி/2162)(5-6-7)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் பூபாலசிங்கம்



கோப்பாய் வடக்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பூபாலசிங்கம் கடந்த (05.08.2012) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னப்பிள்ளை தம் பதியரின் அருமை மகனும், இராசமலரின் அன்புக் கணவரும், லோகராசசிங்கம் (ஜேர்மனி), முருகானந்தன் (விவசாய திணைக்களம், விவசாய போதனாசிரியர் அலுவலகம் - தைடி), வரதராசன், தேவானந்தன், பவானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமுதினி, சசிகலா, சாந்தினி, நளினி ஆகியோரின் அன்பு மாமனும், புவிதா, ரஜிதா (ஜேர்மனி), ஜனார்த்தனன், ராகவன், மயூரினி, யதுசா, மது ஷானினி, அபிவர்னன் ஆகியோரின் பாசமிகு பேரனும், சிவபாக்கியம், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற இராசதுரை மற்றும் இராஜேஸ்வரி, தனபாலசிங்கம், சரஸ்வதி, நடேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.08.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோப்பாய் கந்தனாடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கந்தசாமி கோவிலடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
**மனைவி, பிள்ளைகள்.**
(21463) (6.7.45)

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.450 மட்டுமே தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம்
(21352)(6.7.8)

**Video** துறையில் புரட்சி படைக்கும்

**Diploma in Video Mixing**

Adobe Premier, Pinnacle Studio, Cool 3D Studio, ஆகிய முன்னணி மென்பொருட்களுடாக capturing, Video Converting உள்ளடக்கி கற்பிக்கப்படும்.

கணக்கியல்துறையில் வல்லுனராக....

**Dip in computerized Accounting**

*Quick Book, ACCPAC, MYOB* ஆகிய முன்னணி மென்பொருட்களுடாக கம்பனி கணக்குகளுடன் VAT இனையும் உள்ளடக்கி

Duration: 3Month
Course Fee: 2500/=
சனி ஞாயிறு } 09AM & 03PM
20ம் திகதிக்கு முன் பதிவுசெய்துகொள்ளவும்

**COMPUTER EXPRESS**
No 15, Sirambiyadi Lane, (off stanly Road), Jaffna. Phone : 021-222-8250
(21416)

## போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்
## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் தங்குவதற்கு உகந்த சகல வசதிகளுமுடைய 15 பேர் தங்கக்கூடிய, குறைந்தது 5 அறை கொண்ட ஒரு வீடு வாடகைக்குத் தேவைப்படுகின்றது. வீடு வைத்தியசாலையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்திற்குள் இருக்க வேண்டும். வீடு வாடகைக்குத் தர விரும்புபவர்கள் பின்வரும் விலாசத்துக்கு தபால் மூலமாக மாதவாடகையுட்பட விவரங்களை மூடிய கடித உறையில் 17.08.2012 பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.


(சி/2168) (2-6-)

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(16)

அந்தக் குறிப்பிட்ட கம்பெனியில் சைக்கிள்களை அவரால் நிறைய விற்பனை செய்ய முடிந்தது. இது எப்படிச் சாத்தியமாயிற்று என்று அவரே சொல்லுகிறார்.



"நான் அந்தக் கம்பனியின் பழைய சைக்கிள்களை என்னுடைய வாடகைக் கடையில் வைத்திருந்தேன். அவை நன்றாக உழைத்தன. அந்த சைக்கிள்களை நல்ல முறையில் விற்பனை செய்ய முடியும் என்கிற நம்பிக்கை அதனால் எனக்கு ஏற்பட்டது. அந்தக் கம்பனியில் ஏஜென்சி கேட்டேன். அவர்கள் தர மறுத்துவிட்டார்கள். நான் நம்பிக்கை இழக்கவில்லை. அந்தக் கம்பனியின் விற்பனை மேலாளரை நேரிற் சந்தித்தேன். அவரைச் சந்திக்கும் முன், அவரிடம் பேசினால், ஏஜென்சி கிடைக்கும் என்கிற நம்பிக்கையுடனேயே அவரைப் பார்த்தேன்.

"அந்த மேலாளர் நான் சொன்ன விடயங்களைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டார். பிறகு ஒரு பெரிய பிணைத் தொகையைச் சொல்லி அதை நான் கட்ட முடியுமா என்று கேட்டார். என்னிடம் அப்போது அவ்வளவு பெரிய தொகை இருக்கவில்லை.

"என்னால் அவ்வளவு பெரிய தொகையை உடனடியாகக் கட்ட முடியாது என்றும், ஒரு சிறிய தொகையைக் கட்டுவதாகவும், நான் விற்கின்ற சைக்கிள்களின் கமிஷனை எனக்குத் தராமல், என்னுடைய மீதி பிணைத் தொகைக்குச் சரி செய்து கொள்ள நான் சம்மதிப்பதாகவும் கூறினேன்.

"அவர் என்னை ஏற இறங்கப் பார்த்தார். இந்த ஆளை நம்புவதா இல்லையா என்கிற மனப் போராட்டம் அவரிடம் நிகழ்வதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. நானும் அவருடைய விழிகளை ஊடுருவிப் பார்த்தபடியே, என்னை நம்புங்கள், என்னை நம்புங்கள் என்று மனதிற்குள்ளாகவே சொல்லிக் கொண்டேன். என்னுடைய எண்ணங்களுக்கு இருந்த வலிமையை அப்போது தான் என்னால் உணர முடிந்தது.

"அவர் என்னைப் பார்த்து, முதலில் குறைந்த எண்ணிக்கையில் சைக்கிள்கள் தருகிறேன். உங்களின் விற்பனைத் திறமையைப் பார்த்துக் கொண்டு அதற்கேற்றபடி செய்யலாம் என்றார். நான் உடனே ஒப்புக் கொண்டேன். ஆறு மாதத்திற்குள் அவர்கள் பிரமிக்கும் படியாக விற்பனை செய்து காட்டினேன். அவர்கள் முழுக் கமிஷனையும் எனக்குத் தந்ததோடு கூடுதலான பிணைத் தொகையையும் பின்பு கேட்கவேயில்லை."

மேலே உள்ளவை நண்பர் என்னிடம் சொன்ன தகவல்கள். அந்தக் குறிப்பிட்ட கம்பனியின் சைக்கிள் விற்பனையில் ஒரு பெரிய சாதனையை அவர் உருவாக்கினார். அது மட்டுமல்ல படிப்படியாக சில பெரிய கம்பனிகளின் மொபைட், ஸ்கூட்டர் ஆகியவற்றின் ஏஜென்சியும் அவருக்குக் கிடைத்தது.

நண்பர் தன்னுடைய வெற்றிக்கு இரண்டு காரணங்களைக் கூறுகிறார். ஒன்று தன்னம்பிக்கை, மற்றொன்று மற்றவர்களிடம் நம்பிக்கை.

உறுதியான எண்ணங்கள் இல்லாமல் எதையும் சாதிக்க முடியாது என அவர் அழுத்தமாகச் சொல்கிறார். நமக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டு முகமலர்ச்சியுடன் காரியங்களைச் செய்தால் வெற்றி நம்மை நாடி வரும் என்பது அவருடைய உறுதியான நம்பிக்கை.

அவருடைய கூற்றின் உண்மையினை என்னால் நன்றாகவே உணரமுடிகிறது. வாடகைக்கு சைக்கிள்கள் கொடுக்கும் கடையை நடத்தி, கடுமையான வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலத்திலும் அவரை நான் பார்த்திருக்கின்றேன். எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பார். நம்பிக்கையுடனும் பேசுவார். வாடகைக்கு சைக்கிள் எடுக்க வருகின்ற அனைவரிடமும் நட்புரிமையுடன் பழகுவார்.

பெரிய ஏஜென்சி எடுத்து பல லட்சங்கள் புரளுகின்ற தொழிலில் அவரை நான் பார்க்கிறேன். அதே உற்சாகம், அதே கனிவு, அதே நம்பிக்கை. வசதி பெருகியதால் அவருடைய வாழ்க்கைக் கண்ணோட்டம் மாறிவிடவில்லை.

எண்ணங்கள் வலிமையாக இருந்ததால் எதையும் சாதிக்கலாம் என்று அவர் நம்புகிறார். வறுமையைப் பற்றி அவர் சொல்லுகின்ற கருத்து என் மனதைத் தொட்டது. வறுமை என்பது குற்றமல்ல, அது ஒரு நிலை, அது மாறக்கூடியது. நம்முடைய முயற்சியால் மாற்றக் கூடியது. நம்பிக்கையுடனும், நாணயத்துடனும் பாடுபடுகின்ற எவரும் வறுமையை விரட்டி, வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும். நண்பரின் இந்தக் கருத்துடன் நூற்றுக்கு நூறு நான் உடன்படுகிறேன்.

'வறுமை என்பது ஒரு நிலை' என்கிற வாசகம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வாசகமாகும். அது ஒரு நிலை என்பதால், அது மாறக்கூடியது என்பதும், நாம் முயன்றால் மாற்றக்கூடியது என்பதும் தெளிவாகிறது. இதை எவ்வாறு மாற்றுவது என்பது தான் கேள்வி. நம்முடைய எண்ணங்கள் உயர்ந்ததாக இருக்கவேண்டும். என்னுடைய வலிமையை நான் மாற்றிக் காட்டுவேன் என்கிற மன உறுதி நமக்கு இருக்க வேண்டும்.

(தொடரும்)

-பி.சி.கணேசன்-

# மாணவர்களின் கல்வி நிலை உயர ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்

## கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி தெரிவிப்பு

**கரவெட்டி திருஇருதயக் கல்லூரி அமைக்கப்பட்டு ஒரு நூற்றாண்டை எட்டியுள்ள நிலையில் பாடசாலையின் முக்கியத்துவத்தை உணர வேண்டிய பெரிய பொறுப்பு மாணவர்களுக்கு உண்டு. ஒரு பாடசாலை சிறப்பாகச் செயற்பட்டால் அது ஒரு சிறைச்சாலையை மூடுவதற்குச் சமனாகும்.**

வடமராட்சி, ஓக.8

எமது மாணவர்களின் கல்வி நிலையும், ஒழுக்கமும் உயர்வடைய வேண்டுமானால் பாடசாலை, கல்வித் திணைக்களம், வீடு மற்றும் சமூக அமைப்புக்கள் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வரவேண்டும் என்று கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கம் தெரிவித்தார்.

கரவெட்டி திரு இருதயக் கல்லூரி பாடசாலைத் தினமும், பரிசளிப்பு விழாவும் அதிபர் எஸ்.கணபதிப்பிள்ளை தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கல்வியையும், ஒழுக்கத்தையும் உயர்த்தவேண்டும் என்றால் குறித்த நிறுவனங்கள் அனைத்தும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலம் சாதிக்க முடியும். தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை கல்வி ஒழுக்கம் உயர்ச்சி மிக அவசியமானது.

இந்தப் பாடசாலை அமைக்கப்பட்டு ஒரு நூற்றாண்டை எட்டியுள்ள நிலையில் பாடசாலையின் முக்கியத்துவத்தை உணர வேண்டிய பெரிய பொறுப்பு மாணவர்களுக்கு உண்டு. ஒரு பாடசாலை சிறப்பாகச் செயற்பட்டால் அது ஒரு சிறைச்சாலையை மூடுவதற்குச் சமனாகும்.

எனவே மாணவர்கள் ஒவ்வொரும் தமது பாடசாலைகளை உயர் பாடசாலைகளாகக் கருதி கல்வியில் மட்டுமல்லாமல் இணைப்பாடவிதான செயற்பாடுகளுடனும் ஒழுக்கத்துடனும் சிறந்து விளங்க வேண்டும். இதுவே மாணவர்கள் பாடசாலைக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

தம்மாலான முயற்சியுடன் பாடசாலைகள் அர்ப்பணிப்புடன் செயலாற்றிவரும் வேளையில் மாணவர்களின் கற்றலுக்கான சூழ்நிலையை வீட்டில் அமைத்துக் கொடுப்பது பெற்றோர்களின் கடமையாகும். அத்துடன் பெற்றோர்கள் பிள்ளைகளின் உடல், உள ஆரோக்கியத்திலும் கூடிய கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

இன்றைய மாணவர்கள் நாளைய எதிர்கால சந்ததியினர் என்பதை உணர்ந்து பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கத்திலும் அக்கறை எடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு உண்டு.

கல்வி நிலை உயர்வடைய அந்தந்தப் பாடசாலைகள், சமூகங்கள் தம்மாலான சேவைகளை பாடசாலைகளுக்கு நிறைவேற்றித் தரும் போது மாணவர்களுக்கான நற்சூழலை பெற்றோர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை ஒவ்வொரு மாணவனின் மனதிலும் தோன்றவேண்டும். அப்போது தான் முயற்சியோடு இணைந்த வெற்றி கிட்டும். முடியாது என்ற பதம் முட்டாள்களின் அகராதியில் தான் இருக்கிறது என நெப்போலியனின் கூற்றுக்கு இணங்க முடியாது என்ற காரியம் மாணவர்களிடையே இருக்கக்கூடாது - என்றார். (எ-8)

# இலக்கியத்திறன் பரீட்சை முடிவுகள்

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் பரீட்சை முடிவுகள் வருமாறு:-

**பிரிவு "அ"**

**பரிசும் சான்றிதழும் பெறுவோர்**

ம.கிருத்திகா (உருத்திரபுரம் உ.நி.ப.), மோ.பிருந்தா (உருத்திரபுரம் உ.நி.ப.), ரா.பானுமதி (கிளி.மத்திய கல்லூரி).

**ஊக்கப் பரிசு பெறுவோர்**

க.குகேந்தினி (கிளி.மத்திய கல்லூரி)

**பிரிவு "ஆ"**

ந.சாமந்தி (திருவையாறு உ.நி.ப.), க.அரிமர்த்தனா (புனித திரேசா பெண்கள் கல்லூரி), ர.வினுசா (உருத்திரபுரம் உ.நி.ப).

**ஊக்கப் பரிசு பெறுவோர்**

வே.நிதர்சினி (திருவையாறு உ.நி.ப), சி.சர்பினி (திருவையாறு உ.நி.ப), வ.நிதர்சனா (வன்னேரிக்குளம் உ.நி.ப), க.கீர்த்தனா (புனித பற்றிமா றோ.க.த.க.பா), பா.துஸ்யந்தினி (புனித பற்றிமா றோ.க.த.க.பா.), கி.கிருசாந்தி (உருத்திரபுரம் உ.நி.ப), கு. சரணிகா (உருத்திரபுரம் உ.நி.ப), இ.இலக்சியா (கிளி.இந்துக் கல்லூரி), த.சிந்துயா (கிளி.இந்துக் கல்லூரி), ச.கயேந்தினி (பரந்தன் இந்து உ.நி.ப), க.பௌசிகன் (முருகானந்தா கல்லூரி), பு.டினுயா (புனித திரேசா பெண்கள் கல்லூரி), த.தயூரா (புனித திரேசா பெண்கள் கல்லூரி).

**பிரிவு "இ"**

**பரிசும் சான்றிதழும் பெறுவோர்**

பா.அட்சிகா (புனித திரேசா பெண்கள் கல்லூரி), கே.திவாரகா (பளை மத்திய கல்லூரி), ஜெ.கயானி (வட்டக்கச்சி உ.நி.ப), த.ஜீவலோயினி (கிளி.இந்துக் கல்லூரி), நி.பிரசாந் (உருத்திரபுரம் உ.நி.ப)

(தொடரும்)(எ)

# கட்டுரைப் போட்டி; விக்ரோறியாவுக்கு வெண்கலப் பதக்கம்

அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட இரசாயனவியல் கட்டுரைப் போட்டியில் தேசிய மட்டத்தில் விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். இவர்களில் இருவர் ஆங்கில மொழி மூலம் இந்தப் போட்டிக்குத் தோற்றியவர்களாவர். கார்த்திகா இந்திரகுமாரன் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

காருண்யா ஸ்ரீகிருஷ்ணராஜா தேசிய ரீதியில் ஏழாம் இடத்தைப் பெற்று திறமைச் சித்தியை அடைந்துள்ளார்.

தமிழ்மொழி மூலம் இந்தப் போட்டிக்குத் தோற்றியவர்களில் விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த நிரோசனா ஸ்ரீரங்கன் தேசிய ரீதியில் ஐந்தாம் இடத்தைப் பெற்று திறமைச்சித்தியை அடைந்துள்ளார். (எ-13)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவகால சிறப்பு நிகழ்வுகளாக நடத்திய ஆன்மிக சிந்தனைகளில் சீரணி நாகம்மாள் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் இசை நிகழ்வும் இடம்பெற்றது. (எ-7)

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ–9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹாரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## பெறுபேறுகள் அபாயமாய் தெரிகின்றன

இலங்கையில் வாழும் கல்வி கற்கும் இளந்தலைமுறையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உயர்தரப் பரீட்சை ஆரம்பித்திருக்கின்றது. இந்த முறை நாடெங்கிலும் இருந்தும் 2 லட்சத்து 77,671 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். பல மாணவர் எதிர்பார்ப்போடும், ஆர்வத்தோடும் பரீட்சைக்கு சென்று வருவதை அவதானிக்கும் போது கவலை ஒன்று மேலெழுகின்றது.

கடந்த வருடமும் இதே ஓகஸ்ட் மாதத்தில் பல்லாயிரம் எதிர்காலக் கனவுகளோடு மாணவர்கள் பரீட்சையில் தோற்றியிருந்தனர். ஆனால் இலங்கை அரசியல் போலவே, வெளியிடப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளும் குளறுபடிகளுக்குள்ளாயின. பிள்ளைகளின் லட்சியங்களும், பெற்றோர்களின் எதிர்கால நம்பிக்கைகளும் இத்தோடு சபலத்துக்கு உள்ளானது.

முதற்கட்டமாக வெளியிடப்பட்ட பரீட்சை பெறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்கள், இரண்டாம் கட்ட, திருத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேற்று முடிவுகளோடு பல்கலைக்கழக தெரிவு நிலையை இழந்தார்கள். கைக்கெட்டியது வாய்க்கு எட்டாதது போல பலரின் நிலைமை கவலைகளின் உச்சமானது. அதிலும் பழைய பாடத்திட்டத்தின்படி பரீட்சைக்குத் தோற்றியவர்கள் என்றுமில்லாத பின்னடைவையும் பாதிப்பையும் எதிர்கொண்டனர்.

இந்தப் பாதிப்பில் இருந்து தப்பித்து, தமது எதிர் காலம் எதிர்பார்த்த கனவின்படியே அமைய வேண்டும் என்பதற்காக பாதிக்கப்பட்ட மாணவர்களும் அவர் தம் பெற்றோர்களும் தெருவில் இறங்கிப் போராடுகின்றனர். நீதிமன்றங்களில் நீதி கேட்டுப் படிஏறுகின்றனர். இதுவரை இலங்கையில் மீறப்படும் மனித உரிமை மீறல்களுக்காக மட்டும் குற்றப்பதிவை மேற்கொண்ட பெற்றோர்கள் இந்த முறை பெறுபேற்றுப் பிரச்சினைக்காக மனித உரிமைகள் கண்காணிப்பகத்துக்குச் சென்றிருக்கின்றனர். இதுவரை 1,750 பதிவுகள் குறித்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்களின் நீதி கேட்கும் படலங்கள் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தி உள்ளதால், அதனைத் தீர்ப்பதற்கு அரசு புதிய திட்டங்களை முன்வைத்து வருகின்றது. அதில் ஒன்று, பெறுபேற்றினால் பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 2 ஆயிரம் மாணவர்களுக்கு தனியான பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவது என்பதாகும்.

இலங்கையில் ஏற்கனவே இருக்கின்ற பல்கலைக்கழகங்கள் கடந்த சில மாதங்களாகவே இயங்க முடியாத நிலையை அடைந்திருக்கின்றன. அரச பல்கலைக்கழகங்களை நிர்வகிக்க முடியாத அரசு தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்க ஆர்வம் காட்டி வருகின்றது. இந்த நிலையில் புதிய பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவதும் அதனை வழி நடத்துவதும் இப்போதைக்கு சாத்தியம் அற்ற ஒன்று. அதனை விளங்கிக்கொண்ட அரசும், உயர் கல்வி அமைச்சும் இந்தப் பெறுபேற்றுப் பிரச்சினை சுமுகத் தீர்வை அடையும் வரை பல்கலைக்கழக அனுமதிகள் வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவித்திருக்கின்றது.

முதற்கட்ட பெறுபேற்றில் பாதிக்கப்பட்ட மாணவர்களும், இரண்டாம் கட்ட பெறுபேற்றில் பாதிப்பட்ட மாணவர்களும், இரண்டிலும் தேறி பல்கலைக்கழக கனவை எட்டிய மாணவர்களும் இந்த அறிவிப்பால் புதிய தலையிடியை எதிர்கொண்டு இருக்கின்றனர். இந்த நிலையில் இப்போது நடக்கும் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் எவ்வாறு அமையப் போகிறதோ? 2011 ஆம் ஆண்டு பரீட்சை எழுதியவர்களின் பிரச்சினையே இன்னும் தீர்க்கப்படவில்லை. 2012 ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றிக்கொண்டிருக்கிற மாணவர்களின் எதிர்காலத்தை நினைக்கும் போது தான் நாம் பெற்ற புதிய கவலை இன்னும் மெருகேறுகின்றது.

# கைகளால் எழு! கண்களால் சுடு!!

செந்தூரி

புதுக்குடியிருப்பு- ஆனந்தபுரத்தை அண்மித்ததாக, தமிழீழவிடுதலைப்போராட்டத்தின் தலைசிறந்த இளம் போர் வல்லுநர்களான தளபதிகளை மொத்தமாக, இரசாயன ஆயுதங்களால் பலி வாங்கிய பூமியின் மையத்தில் போர்க் காட்சியகம் ஒன்றை அமைத்து, ''ஒரே தேசத்தின்-எல்லா மக்களையும்'' கூவி அழைத்து சிலிர்த்துக் கொள்கின்றது இலங்கை இராணுவம்.

எவரெவர் பார்வையில் எப்படியமையினும், வந்து போகின்ற கடைக்கோடி தீ தமிழனிடமும் ''பாரடா! உன்னினத்தை பாரறிய வைத்தவர்களின் வீரத்தின் தளும்புகளை'' என்று வெற்றுக் கலங்கள் முணுமுணுக்கும் இடம் அது!

மூன்றுக்கு மூன்று அடிப்பரப்பையுடைய ஆறடி உயர இரும்புக் கூண்டொன்றும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றது. வலிமையான கம்பிகளால், மிகச் சிறிய கதவுடன் ஓர் ஆள் உட்காருவது கூட மிகக் கடினமான செவ்வகத் திண்மக் கம்பிக் கட்டமைப்பின் அருகிலிருக்கும் பலகையில் ''பயங்கரவாதிகளின் தண்டனைக் கூண்டு'' என்று எழுதப்பட்டிருந்தாலும், தனிப் பார்வையில் சொல்வதானால் ஒட்டுமொத்த தமிழின ஒழுக்கத்தின் ''வெளித் தெரியாத வேர்'' அது! விடயமறிந்த ஒருவரின் வாக்கு மூலத்தின் படி, தனிமனித ஒழுக்க மீறலுக்கான ஆகக்குறைந்த தண்டனை அந்தக்கூண்டு வாசத்தின் அறுநாள்களிலிருந்து தொடங்குகின்றதாம். ''எல்லாமே'' அதற்குள் தானாம், வெளிவரும் போது ''மாற்றம்'' மாற்றமில்லையாம்.

கலாசாரச் சீரழிவு, மாணவர்களின் ஒழுக்கமின்மை, குடும்ப வன்முறைகள், வீட்டுக்குள்ளான பெண் கொடுமைகள் போன்ற தலைப்புக்களில் எழுதுவோரெல்லாமே தெரிந்தும் தெரியாமல் போட்டுவிடுகின்ற பிள்ளையார் சுழி ''தமிழீழ விடுதலைப்புலிகளின் வீழ்ச்சியின் பின்னர்'' என்பதுதானே!

கட்டுப்பாடில்லாமல் விட்டால் கால்நடைகளினும் கீழாக தன்மரபுகளை சிதைக்கும் நிறமூர்த்தமொன்று எம் மரபணுக்களில் அரைக் கண்களில் தூங்கிக்கொண்டிருக்கின்றது. சந்தர்ப்பம் கிடைக்கும் வரை யோக்கியர்களாக இருக்கும் அயோக்கியர்கள் எல்லா மனிதர்களுக்குள்ளும் ஒளிந்திருப்பது பேருண்மை. அவ்வப்போது வெளிவரும் இந்த மிருக சிந்தனைகளை முற்றிலும் நிறுத்துவதற்கு 'அவர்கள்' கண்டுபிடித்த பேருபாயம்- பயம்!

குற்றங்களுக்கான தண்டனைகளை மக்களறிய நிறைவேற்றுவதில், மீறப்படும் மனித உரிமைகளைவிட, காக்கப்படும் மனித உரிமைகள் எப்போதும் அதிகம் என்கின்ற கூற்றை வலுவாக ஆமோதித்தே ஆக வேண்டும். இந்தக் கணம் மின்கம்பமொன்றில் கைகள் பிணைக்கப்பட்டு, கண்களில் துணி சுற்றியபடி, கழுத்தில் குற்ற விபரம்எழுதப்பட்ட 'கார்ட்போட்'டை தாங்கிய தலை தொங்கிய உடல் ஒன்று உன் நினைவெழுந்து மறைந்தால், நீயும் தமிழனே!

சுட்டதால்தானே தெரியும் நெருப்பு, குத்தியதால்தானே தெரியும் முள் வலி. பட்டதால்தானே அதன் பெயர் 'பாடு', இந்த வரிசையில் 'பயம்' தானே குற்றங்களின் முதல் எதிரி! இந்த வெருட்டல், யுக்தி வேகமாகப் பலிக்கும் வகைக்குரியதொன்று. காரணங்களின் வகையறாக்களை வரிசைப்படுத்தி நீட்டி முழக்காமல், ஒற்றைச் சொல்லினால் கட்டுப்பாடுகளுக்குள் நெட்டித் தள்ளி வைத்திருக்கும் வியூகம் என்னினத் திடம் இலகுவில் எடுபடக்கூடிய ஒன்று. ஆதிச் சைவத் தமிழர்களிடமிருந்து வந்ததும், இன்றைக்கும் இறுக்கமாக வழக்கத்திலிருப்பதுமான பழக்கமொன்றினை, பிரித்தாய்வதன் மூலம் இந்த வகை யுக்தி எத்துணை பயன்தரும் என்பதைப் பார்க்கலாம்.

நோய்க் கிருமிகளிடமிருந்து பாதுகாப்பு, தொற்று நீக்குதல், வீரியமான நுண்ணங்கிகளிடமிருந்து பரவும் வியாதிகளிலிருந்து முற்காப்புப் பெறுதல், தொற்றுநோய்க்குள்ளானவர்களை தள்ளிவைத்தல், அகச்சூழலை புறச்சூழலிலிருந்து தூயதாகப் பேணுதல் போன்ற பல ஏற்பாடுகளை ஒற்றைச் சொல்லான 'துடக்கு' எனப்படும் தூய தமிழின் 'தீட்டு' என்பதினுள் அடக்கினான் பழஞ்சைவன்.

இறந்த உடலிலிருந்து, தமக்கான வாழ்சூழல் இனிக்கிடைக்காது என்ற நிவாரண நிறுத்தம் பற்றிய அறிவித்தல் கிடைத்த மறுகணமே நுண்ணங்கிகள் வெளியேறத் தொடங்கும். சாதாரண காற்றே இவற்றுக்கான பரவுகை ஊடகமாகத் தொழிற்பட போதுமானதென்பதால், மரணமடைந்தவரின் நெருங்கிய உறவினர்கள், அந்த வீட்டுக்கு அடிக்கடி சென்று வருபவர்களின் உடல்கள் குறித்த நோய்களையும் நுண்ணங்கிகளின் இடைத்தங்கல் முகாம்களாக செயற்படும் வாய்ப்புக்கள் நிச்சயமான ஊகத்திற்குரியதே.

நெருங்கிய உறவினர்களையும், தொடர்புடையவர்களையும், உணவு தொடர்பு கொண்டவர்களையும், முதியவர்கள்- குழந்தைகள்- நலிந்த உடல் எதிர்ப்பு சக்தி உடையவர்கள் நெருக்கமாக ஒன்றுகூடும் ஆலயங்களுக்குள் அனுமதிப்பதனால் குறித்த தொகுதியில் பலர் நோய்த் தொற்றுக்குள்ளாக நேரிடும், என்பதால் சாவு வீடு நிகழ்ந்து முன் முப்பது நாள்களுக்கான முற்பாதுகாப்பு முஸ்தீபுகளில் ஒன்றாக நாம் கண்டெடுத்த ஆழி முத்துக்களில் ஒன்றே இந்த 'தீட்டு' எனப்படும் தனிச்சொல்லினாலான 'பயம்'!

உங்களைப் போலவே, என்னிடம் எழுந்த மஹா கேள்விகளில் ஒன்று! இறப்பு வீட்டுக்கு இந்த 'போர்மியூலா' சரியானதே!, ஆனால் பிறப்பு வீட்டுக்கும் இதே சம நடைமுறை ஏன் வழக்கத்திலிருக்க வேண்டும்? -இங்கே தான் தமிழனின் ''மூடிய மோதகத்தினுள் சர்க்கரைத் துவையல்'' வைப்பது போன்ற ரிவர்ஸ் கியர் அல்லது மாற்றியோசிக்கும் மண்டைக் காய்த்தனத்தை நமக்கு நாமே மெச்சிக்கொள்ள வேண்டும்.

கோயிலில் கூடும் கூட்டத்தினிடையே வீரியம் குறைவாக இலவச விநியோகம் செய்யப்படுகின்ற நுண்கிருமிகளை, கோயிலுக்கு வந்து போகும் மெய்யடியார்கள் மூலம் நேற்றுப் பிறந்த, நோய் எதிர்க்கும் வீரியம் குறைந்த உடற்சக்தியுடைய பச்சைக் குழந்தையிடம் மலிவு விற்பனை செய்துவிடக்கூடாது என்கின்ற நல்லெண்ணமேயாகும்- 'எப்பூடி!'

தென்மராட்சியில் வீட்டுப் படலைகளில் வைத்து வாளித் தண்ணீர் தலையில் ஊற்றிய பின்பே இழவு வீட்டிலிருந்து உள்வருவார்கள்.

இவ்வாறாக விளக்கமுரைத்து விரிவுரைக்காமல் ஒற்றை இழைகளில் சமூகக் கட்டுப்பாடுகளைப் போதுமான நம்பிக்கைகளோடு வேரோடி வைத்திருப்பதே எம் சமூகத்துக்கு எப்பொழுதும் பாதுகாப்பான வழி. தண்டனைகளின் வேகமும், நீதியும் குற்றச் செயல்களைக் குறைக்கும் ஊக்கிகளாகும்போதே பிறழ்வுகளற்ற கலாசாரத்தை தொடர முடியும். வடமராட்சியின் சக்கோட்டையில், வல்லுறவின் பின்னர் சேலையினால் கழுத்தைச் சுற்றி கொடூரக் கொலை செய்யப்பட்ட மாணவியின் இறப்பினை நிகழ்த்திய மிருகம் பிணையில் வெளியிலோ, விளக்கமறியலின் உள்ளேயோ இருப்பது மட்டும் போதுமான தண்டனை என்றால், நெடுந்தீவில் எட்டு வயதுப் பூவை கசக்கி முகர்ந்த பின் கல்லெடுத்து முகம் சிதைத்துக் கொலை செய்யும் துணிச்சல் இன்னொரு விலங்குக்கு எப்படி வந்தது? கொடூரர்களை பிணையில் வெளியே எடுக்க சட்டத்தரணிகள் எவருமே முன்வராதிருப்பது மட்டும் போதுமா, இன்றைக்கு முற்றிப்போன இந்தச் சமூகப் புற்றுநோயைக் குணப்படுத்த?

ஒரு சமூகம் தன்னையே அறியாமல் அதன் ஆழ் மனதில் கொண்டிருக்கும் நம்பிக்கைகள், மதிப்பீடுகளுக்கு 'சமூக நனவிலி மனச் செயற்பாடுகள்' என்று பெயர். இன்றைய தமிழ்ச் சமூகத்தினது மனம், ஆள்மனமாக இப்படியாகத்தான் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது போலும். பெண்களுக்கு எதிரான வயது வேறுபாடுகளின்றிய வன்முறைகளும், அவற்றிற்குப் போதுமான தீர்வளிக்கமுடியாததுமான எமது நம்பிக்கை மதிப்பீடுகளும், அடிமை மரபணுக்களில் அப்படியே உறையத் தொடங்கியிருக்கின்றன. ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் 'அவை', வாய்ப்புக் கிடைக்கும் போது தன் குரூர முகத்தை காட்டிச் சிரிக்கின்றன.

பிரத்தியேக வகுப்பு வாத்தி, பத்தாம் வகுப்புப் பிள்ளையை இழுத்துக்கொண்டோடுவதும், காக்கிச் சட்டை சீருடைப் பட்டாளத்தான் பாடசாலை மாணவியை பதிவுத் திருமணம் செய்து கொண்டதற்கு ''பார்ட்டி எப்ப சேர்?'' என்று சந்தோஷம் கொண்டாடும் அதே ஊர் இளவல்களும் ,வாங்கிக்கொள்வது வேறு வேறாயினும், விற்றது 'சுயமரியாதை' என்கின்ற ஒன்றைத்தானே!

'பள்ளிக்கூடம்' என்கின்ற வார்த்தையைத் தவறாக அர்த்தம் எடுத்துக் கொள்பவர்களுள், படித்தவர்களும் இடம்பெறுகின்றார்கள் என்பது இன்றைய வட சமூகத்தின் ஆரோக்கியமிழந்து செல்லும் எதிர்காலத்துக்கான குறிகாட்டிகளே!

மோதி மிதித்து விடாமலும், முகத்தில் உமிழ்ந்து விடாமலும் பொறுமை காக்குமளவுக்கு, பொறுக்கிகள் ஒன்றும் பூஜைக்குரியவர்களில்லை! எவ்வளவு சொல்லியும் காதில் போட்டுக்கொள்ளாத அசூசை மிகு ஆண் வர்க்கத்தினை சீர்திருத்தும் வல்லமை, சமூகக் கூச்சல்களுக்கு பயந்து ஒதுங்கிவிடாத பெண்களின் முன்வருகையிலேயே பெரிதும் தங்கியிருக்கப் போகின்றது. திருடனாய்ப் பார்த்து திருந்தும் வரை பொறுத்திருப்பதற்கு, கொள்ளை போவது பொன்னோ, மண்ணோவல்ல-பெண்!

''இருபது ஆண் -விடுதலைப் புலிப் போராளிகளோடு, ஒரு இரவு முழுவதும் ஒரே பாசறைக் கூடாரத்தில் தங்கியிருந்தேன். ஒரு நிமிடம் கூட நான் தனித்திருப்பதாகவோ, பாதுகாப்பற்றிருப்பதாகவோ மனதளவிலேனும் உணர்த்தப்படவில்லை. எந்தவொரு கண்ணும் ஓர் நொடி கூட என்மேல் கண்ணியம் தவறிப் பட்டதாகவுமில்லை. தன்னையும், போராளிகளையும்' ஒழுக்கம் மிகுந்தவர்களாக வளர்த்து வைத்திருப்பதில் பிரபாகரனின் ஓர்மம் என்னை மிகவும் கவர்ந்திருந்தது''-பொய்கலவாத வார்த்தைகளில் மெய் சொன்னவர், பாசறைகள் வரை பழகித் திரும்பும் பாக்கியம் வாய்ந்த இந்தியப் பெண் பத்திரிகையாளர் 'அனிதா பிரதாப்'.

என்ன செய்ய? நாம் தொலைத்து விட்ட திரவியங்களின் பெறுமதி இன்னமும் எம் பின்னந் தலைகளில் ஓங்கியறைவது-இனச்சாபமன்றி வேறென்ன? என்னினிய சனத்தின் யாதோவொரு 'அழகிய தமிழ் மகன்' இதன் பிறகு நல்லூரின் வீதிகளில் நாகரிகம் கருதி ஒதுங்கி நடப்பானாகிலும் இந்தப் பந்தியின் அத்தனை வார்த்தைகளும் அடைந்து விடுகின்றன-அதனதன் வெற்றியை!!

# வீதி அகலிப்பும் அவலங்களும்

பஞ்சவர்ணன்

சில ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவ வாகனத் தொடர் அணி செல்வதற்காக வீதிகளில் பொதுமக்களின் வாகனங்கள் நிறுத்தப்பட்டு, வெயிலிலும், மழையிலும் காத்திருக்கச் செய்யப்பட்டன. தற்போதும் அதே போன்ற நினைவுகளை மீட்டுத் தரும் சந்தர்ப்பங்களைப் பயணிகள் எதிர்கொள்கின்றனர்.

**அரைவீதியும் ஒருவழிப் பாதையும்**

பாதை அகலிப்பும், காப்பெற் வீதிகளாக மாற்றும் பணிகளும் வட பகுதிகளில் பரவலாக இடம்பெற்று வருகின்றன. பல வீதிகளில் நீண்ட தூரங்களுக்குப் பாதிப் பாதைகள் செப்பனிடப்படுவதால் ஒற்றை வழிப் பாதைகளாக அவை மாற்றம் கண்டுள்ளன. எனவே அப்படியான வீதிகளின் அந்தங்களில் பச்சை, சிவப்புக் கொடியுடன் நிறுத்தப்பட்டுள்ளவர்களின் சமிக்ஞைக்கு ஏற்ப அந்த வீதிகளைப் பயணிகள் ஒரு வழிப் பாதையாக பயன்படுத்துகின்றனர். அவ்வாறான இடங்களில் வாகனங்கள் நீண்ட நேரம் தரித்து நிற்க வேண்டிய சூழலுக்குள் சிக்கி இருக்கும் போது பழைய நினைவுகள் மீட்கப்படுகின்றன.

இப்படியாக சமிக்ஞைக்காகத் தரித்து நிற்கும் இடங்கள் சிலவற்றில் வடை வியாபாரிகள் அந்தப் புறத்திற்கும், இந்தப் புறத்திற்குமாக ஓடி ஓடி வியாபாரத்தில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. வியாபாரத்துக்கான காத்திருப்புக் காலமும் செயற்கையாகக் கட்டப்படுகிறதா என்ற வினாவும் இந்த இடத்தில் எழுகின்றது

ஏனெனில் சில இடங்களில் சமிக்ஞையுடன் ஊழியர்கள் நிறுத்தப்படுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் நிறுத்தப்பட்ட ஊழியர்கள் காணாமலும் போகிறார்கள். மற்றும் சில சந்தர்ப்பங்களில் சரிவரச் சமிக்ஞைகளைக் காட்டாமலும், தேவையில்லாமல் நீண்டநேரம் வாகனங்களை நிறுத்தி வைத்திருக்கவும் செய்கின்றனர். அவசர தேவைகளுடன் செல்லும் பயணிகளின் நேரங்கள் இப்படியான ஊழியர்களின் தவறான செயற்பாடுகளால் வீணாகிப் போகின்றன.

சரியான சமிக்ஞைகள் இல்லாததால் ஒருவழிப் பாதையில் வாகனங்கள் இரு வழிகளாலும் வந்து தடம்புரண்ட நிகழ்வுகளும், துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் வண்டிகளில் வருபவர்கள் பள்ளங்களில் புரண்ட சம்பவங்களும் பல உண்டு.

**ஒழுங்கற்ற எச்சரிக்கை சமிக்ஞைகள்**


பல வீதிகளில் வீதி திருத்தும் போது போடப்படும் சமிக்ஞைகளும், எச்சரிக்கைப் பதாதைகளும் சரிவரக் காட்சிப்படுத்தப்படுவதில்லை. பாரம் குறைந்த பலகைகளிலும் தகரங்களிலும் இவை ஆக்கப்பட்டு இருப்பதால் வாகனங்களில் மோதுண்டும், வேகமான காற்றுக்கும் இவை புரண்டு விடுகின்றன. விழுந்தவை விழுந்தவையாகவே கிடப்பதால் பள்ளங்கள் தெரியாமல் வந்தவர்கள் விழுந்த சந்தர்ப்பங்களும் அதிகம் உண்டு. இரவு நேரங்களில் எதிரொளிக்கக் கூடிய 3 நிறப் பூச்சுகளில் இவை ஆக்கப்படாமல் இருப்பதாலும் கூட பலர் சிரமங்களுக்கு ஆளாகின்றனர். அண்மையில் பலர் வீதி ஓரங்களில் காயப்பட்டும், இறந்தும் கூட இருப்பது இப்படியான காரணங்களாலோ என சந்தேகம் கொள்ள வைக்கின்றது. சமிக்ஞை நாடாக்கள் சில சந்தர்ப்பங்களில் அறுந்து வீதிக்கு குறுக்கே கிடப்பதால் வீதியால் பயணம் செய்வோர் வீதி மூடப்பட்டுள்ளது என நினைத்து திரும்பிச் சென்றதும் உண்டு.

**பாலங்களின் பாதுகாப்பின்மை**

பாலங்களில் திருத்த வேலைகள் நடைபெறும் போது அவற்றைப் பயன்படுத்துவது ஆபத்தானது. எனவே பாலங்களில் திருத்த வேலைகள் நடைபெறும் போது அவற்றால் பயணம் செய்வது தடுக்கப்பட்டு தற்காலிக மாற்று வழி அமைத்துப் பாவனைக்கு விடுதல் பாதுகாப்பானதாகக் காணப்படும். ஆனால் பல பாலங்களில் இப்படியான தற்காலிக மாற்றுவழிப் பாதைகள் அமைக்கப்படாமல், பாதிப்பாலங்கள் உடைக்கப்பட்டு திருத்தப்படும் போது மிகுதிப் பாதிப்பாலத்தின் மேலாக வாகனங்கள் பயணிக்க அனுமதிக்கப்பட்டுள்ளமை பேராபத்தைத் தரக்கூடியன. பெரிய வாகனங்கள் தடம் புரளக்கூடிய சந்தர்ப்பங்களும், பெரிய வாகனங்கள் கடக்கும் போது இருசக்கர வாகனங்கள் இடறிவிழும் சந்தர்ப்பங்களும் காணப்படுவதை யாரும் கவனிப்பதே இல்லை.

**வீதி ஓரம் உள்ளவர்களின் அவலம்**

வீதி அகலிப்பின் போது வீதி ஓரங்களில் உள்ளவர்கள் பகுதியாகக் காணியை இழந்துள்ளார்கள். இழக்கப்பட்ட காணிகளில் மண் அகழப்பட்டு விசேடமாக மண் இடப்பட்டு இறுக்கி செப்பனிடப்பட்டே "காப்பெற்" வீதி அமைக்கப்படுகிறது. காணி உரிமையாளர்கள் தமது காணியில் உள்ள பள்ளங்களை நிரப்புவதற்காகத் தம்மால் வழங்கப்பட்ட காணிப் பகுதியில் இருந்து அகழப்பட்ட மண்ணைக் கேட்கும் போது வழங்கமறுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவ்வாறு அகழப்பட்ட மண் பின்னர் அகழப்பட்டவர்களால் விற்ற சம்பவங்களும் உண்டு. மண்ணைக் காசு கொடுத்து வாங்கும் கொடுமையை யார் கேட்பார். அதேபோல வீதி அகலிப்பினால் பலர் தமது காணிகளுக்குள் நின்ற மரங்களை இழந்துள்ளனர். அந்த மரங்களும் காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவில்லை.



**நினைவுச் சின்னங்களுக்கு நினைவு திரும்புமா?**

வீதி ஓரங்களில் பஸ்தரிப்பு நிலையங்கள் பல வீதி அகலிப்பின் போது இல்லாமல் போய் உள்ளன. அவை மீள நிர்மாணிக்கப்படாததால் மக்கள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். அத்துடன் சில பஸ்தரிப்பு நிலையங்கள் தனியாரால் அவர்களது உறவினர்களின் ஞாபகார்த்தமாகவும் நிறுவப்பட்டிருந்தன. அப்படியாக அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் பலவும் இல்லாமல் போவது வேதனைக்குரியது. உரியவர்கள் அவற்றை ஏற்றவாறு மீள நிர்மாணிக்க ஆவனசெய்தல் வேண்டும்.

**சேதமும் நிரவப்படுமா?**

அதுமட்டுமல்லாது காப்பெற் வீதிகள் அமைக்கும் போது வீதி ஓரத்தில் உள்ள மக்கள் உடைமைகள் சேதமாகிய சந்தர்ப்பங்களும் உண்டு. உதாரணமாக யாழ். பிரதான வீதியில் காப்பெற் இடும் போது வீதி ஓர வீட்டு மதில்களுக்கும் 'காப்பெற்' இடப்பட்டது வேடிக்கையானது. எனினும் அது புனரமைத்தல் என்ற போர்வையில் அசிங்கப்படுத்தப்பட்டே காணப்படுகின்றது. இவ்வாறான சீர்கேடுகளில் ஊழியர்கள் ஈடுபடுவதில் உரியவர்கள் மேற்பார்வை செய்யாதது ஏன்? வழங்கப்பட்ட ஊதியத்துக்கான உழைப்பை அவர்கள் வழங்க ஏன் பின்னடிக்கிறார்கள். இதனால் தனியார் சொத்துகளும், அரச சொத்துகளும் சேதமாவதை யார்தான் கேட்பாரோ!

வீதி அகலிப்பின் போது மின்கம்பங்கள் இடமாற்றப்படுகின்றன. வீதி அகலிப்பு ஒப்பந்தகாரர்களும், மின்சார சபையினரும் ஓர் இணக்கப்பாட்டிலேயே வேலைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறாக இடமாற்றப்பட்ட மின்மார்க்கத்தின் போது ஏற்படும் சேதங்களுக்கு அவர்களே பொறுப்புக்குரியவர்கள். அதற்காக மக்களிடம் பணம் வசூலிப்பது தவறானது. உதாரணமாக தென்மராட்சிப் பகுதியில் இப்படியாக இடமாற்றப்பட்ட மின்கம்பத்தில் வயர்கள் ஒழுங்கான முறையில் தகுந்த உயரத்தில் நிறுவப்படாமையால் வீதி அகலிப்புப் பணியில் ஈடுபட்ட வாகனத்தின் மேற்பகுதியில் வயர் சிக்குண்டு அறுந்து விட்டது. (அப்போது மின்சாரம் தடைப்பட்டு இருந்ததால் பல உயிர்கள் தப்பியது வேறு கதை) இதனை உரியவர்கள் உடன் சீர்செய்யவில்லை. உரிய வீட்டின் உரிமையாளர் மின்சாரசபைக்குப் பல தடவைகள் அலைந்து திரிந்தார். வீட்டு உரிமையாளரோ, அல்லது குறித்த ஒப்பந்தகாரரோ பணம் கட்டினால்தான் மின் இணைப்பைத் தருவதாக மின்சாரசபையினர் கடுமையாகக் கூறிவிட்டார்கள். வீட்டுக்காரரோ ஒப்பந்தகாரரைப் பிடிப்பதற்கு அலுவலகத்துக்கு 'லீவு' போட்டுவிட்டு அலைந்து திரிந்து, அவர்களைச் சந்தித்து, அவர்களூடாக மின்சாரசபைக்குப் பணம் கட்டிய பின்னரே மின் இணைப்பு வழங்கப்பட்டது. இப்படியான தான்தோன்றித்தனமான போக்கை யார்தான் பார்ப்பார்களோ!

**பணியில் ஈடுபடும் வாகனங்களின் அடாவடி**

வீதி அகலிப்புப் பணியில் ஈடுபடும் பார ஊர்தியின் அடாவடித்தனங்களோ ஒரு தனி. அவை எப்போது எப்படி எங்கு திரும்பும் என்றே சொல்லமுடியாது. அவை சமிக்ஞை விளக்குகளைச் சரிவர பாவிப்பதும் இல்லை. அப்படிப் பாவித்தால் அவை தெரிவதும் இல்லை. ஏனெனில் அவற்றில் படிந்திருக்கும் புழுதியும், சேறும் எச்சரிக்கை விளக்குகளை சரிவர பாவிப்பதும் இல்லை. அப்படிப் பாவித்தால் அவை தெரிவதும் இல்லை. ஏனெனில் அவற்றில் படிந்திருக்கும் புளுதியும், சேறும் எச்சரிக்கை விளக்குகளைப் பல வாகனங்களில் மறைத்து விடுகின்றன. இவை சில சமயங்களில் சிறுவீதிகள், ஒழுங்கைகளுக்குள் பிரவேசிப்பதால் மக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர்.

**புழுதி பறப்பு**

புழுதி பறக்காமல் நீர் தெளிக்க வேண்டிய வேலைகளும் சரிவரச் செய்யாமையால் பயணிகள் புழுதி தோய்ந்து செல்வதும், அருகில் உள்ள வீடுகள் சீர்கெடுவதும், அங்கு வசிப்பவர்கள் சுவாச நோய்களுக்கு முகம் கொடுக்க வேண்டியும் உள்ளனர். தூசிக்கு 'ஒவ்வாமை' நோய் உடையவர்கள் எமது பிரதேசங்களில் கணிசமான அளவினர் காணப்படுவதால், தூசி எழுவதைக் கட்டுப்படுத்தும் நடைமுறை கட்டாயமாகக் கடைப்பிடித்துக் கண்காணிக்கப்படல் வேண்டும். இவ்வாறான நடைமுறையைக் கடைப்பிடிக்காத ஊழியர்கள் அந்தப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தண்டிக்கப்படும் நடவடிக்கையை சுகாதாரத் துறையினர் நடைமுறைக்குக் கொண்டுவருதல் வேண்டும்.

இப்படியாக 'காப்பெற்' வீதி அமைப்பில் ஏற்படும் குறைபாடுகளாலும், உரியவர்களின் அலட்சியப் போக்காலும் மக்கள் அடையும் அவலங்களைக் களைய மக்கள் பிரதிநிதிகள் எனத் தம்மை அடையாளப்படுத்தும் பல்வேறு அமைப்புகள், சங்கங்கள், நிறுவனங்கள் போன்றவற்றைச் சேர்ந்தவர்கள் முன்வர வேண்டும்.

# வைத்தியசாலையை எதிர்பார்க்கும் ஒட்டுசுட்டான் மக்கள்

தனபாலசிங்கம்

ஒட்டுசுட்டான் பிரதேசமானது 22 கிராம அலுவலர் பிரிவுகளையும் 3466 குடும்பங்களையும் சேர்ந்த 13 ஆயிரத்து 864 மக்களைக் கொண்டதுமான பரந்துவிரிந்த பிரதேசமாக உள்ளது. இந்தப் பிரதேசத்துக்கு மிக முக்கியமான அத்தியாவசிய தேவை வைத்தியசாலை ஆகும். இங்கு வாழும் மக்கள் இன்னொரு வைத்தியசாலைக்குச் செல்வதானால் ஒட்டுசுட்டானிலிருந்து 20 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கே செல்லவேண்டிய நிலை உள்ளது. இவர்களுக்கான வைத்தியசாலை தற்போது சேவையில் உள்ள போதும், திருப்திகரமான சேவையை வழங்க முன்வரவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வைத்தியசாலையில் நிரந்தரமாக வைத்தியர்கள் இல்லாத நிலையில் ஒருவர் மட்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுவதும் தொடர்கின்றது. இதனால் நோயாளர்கள் வைத்தியசாலையை நம்பிவந்து ஏமாந்து செல்வதும் உண்டு. தற்போது ஒரு வைத்தியர் மட்டும் நிரந்தரமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தாலும் அதிக எண்ணிக்கையான மக்கள் வாழ்கின்ற இந்தப் பிரதேசத்தில் முக்கியமாக குறைந்தது மூன்று வைத்தியர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டும். ஒரு வைத்தியர் மட்டும் இரவு, பகல் சேவையினை மேற்கொள்வது என்பது மிகக் கடினமானதாகும்.

இந்தப் பிரதேசமானது அதிகஷ்டப் பிரதேசமாக விளங்குகின்றது. இங்கு மிகவும் வறிய மக்களே வாழ்கின்றனர். பெரும்பான்மையானவர்கள் விவசாயத்தையே நம்பியிருக்கின்றனர். வீதிகள் பன்னெடுங்காலமாக மாட்டுவண்டில் கூடச் செல்லமுடியாத நிலையில் காணப்படுகின்றன. அத்துடன் போக்குவரத்து வசதிகள் மிக மிகக் குறைந்த பிரதேசம். இரவிலே பாம்பு தீண்டியோ அல்லது திடீர் நோயினாலோ அவதிப்படுவோரை அவசரமாகக் கொண்டு சென்று முதற் சிகிச்சை பெறவேண்டுமானால் அந்தப் பிரதேசத்தின் வைத்தியசாலை 24 மணி நேரமும் சேவையிலீடுபடுத்தப்பட வேண்டும். அன்றைய காலகட்டங்களில் முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் கர்ப்பிணித் தாய்மார் வாகனங்களிலே பிரசவித்த சம்பவங்களும் உண்டு. மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு அதிக நாள்கள் வைத்தியசாலையில் தங்கமுடியாத நிலையில் இருக்கின்றனர். இருப்பிடங்களின் பாதுகாப்பு சரியாக இல்லை. அத்துடன் மின்சார வசதி கூட இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை. முன்னைய காலங்களில் ஏராளமான வைத்தியர்கள் இருந்தனர். ஆனால் தற்போது அவர்களின் வைத்திய சேவைகள் இல்லாமல் போயுள்ளன. அத்துடன் நகரங்களைப் போன்று தனியார் வைத்தியசாலைகள் இல்லை. இப்படியான நிலையில் இந்த வைத்தியசாலையானது சகல வசதிகளும் கொண்ட வைத்தியசாலையாக மாற்றம்பெற வேண்டும். தற்போது புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு, 50 வீதமான வேலைகள் முடிந்துள்ளன. புதிய கட்டடத்தையாவது பிரசவ விடுதி உட்பட அனைத்து வசதிகளும் கொண்டதாகவும், பல வைத்தியர்களைக் கொண்டதுமாக விளங்கவைக்க வேண்டும். தற்போதுள்ள வைத்தியர் இங்கு வாழும் மக்களின் துன்பதுயரங்களை அறிந்து அதற்கேற்றாற் போல் தமது பணியினை ஆற்றிவருகிறார். இருந்தும் அவரினால் தனித்து மக்களுக்கான முழுமையான சேவையை வழங்க முடியாதுள்ளது. பதில் வைத்தியர் முக்கியமாக தேவைப்படுகிறது. போக்குவரத்துச் சபைகளும் வைத்தியசாலைக்கான சேவையை செய்ய முன்வர வேண்டும். காலையும் மாலையும் என்றாலும் இந்தச் சேவை வழங்கப்படுதல் மிக அவசியம். ஒட்டுசுட்டானிலிருந்து பல கிலோமீற்றர்கள் தொலைவுக்கு அப்பாலுள்ள கிராமங்களான முத்துஐயன்கட்டு, கெருடமடு, கற்சிலைமடு, சாளம்பன், மன்னாகண்டல், கூழாமுறிப்பு போன்ற பகுதிகளிலிருந்து மக்கள் கால்நடையாகவே வைத்தியசாலைக்கு வர வேண்டியுள்ளது. இவர்களுக்கான பஸ் சேவை முக்கியமாக நடத்தப்பட வேண்டும். மாதத்தில் ஒரு தடவையாவது நடமாடும் வைத்திய சேவை வழங்கப்பட்டால் அனைவருமே நன்மையடைவர்.

கிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தின் ஊடாக ஆரம்ப சிகிச்சையாவது பெறக்கூடிய வகையில் அமைந்திருத்தல் அவசியமானது. சாதாரணமான காய்ச்சலுக்குகூட நெடுந்தூரம் அலையவேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர். வயது முதிர்ந்தோர், ஊனமுற்றோர் கூட நெடுந்தூரம் அலைய வேண்டிய நிலையில் இருப்பதால், ஆரம்ப சுகாதார நிலையம் சாதாரண நோயாளிகள் சிகிச்சை பெற பொருத்தமானதாக அமையும். மக்களின் சுகவாழ்வுக்கு இந்த வைத்தியசாலை சகல வசதிகளுடனும் தேவைக்கேற்ற வைத்தியர்களுடனும் இயங்குமேயானால் பண விரயம், உயிரிழப்பு என்பனவற்றைத் தவிர்த்துக்கொள்ளலாம் என்பதுடன், வசதியற்ற வறிய மக்கள் இலகுவாக சிகிச்சைபெற முடியும் என்பதும் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

நல்லூர் கந்தனின் 15ஆம் நாள் வீதியுலாக் காட்சி



நல்லூர் பாம் சென்ரர்

# 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்
யாழ்ப்பாணம்.
(சி/1960)(6-8) தொ.பே : 021 2226944

## உன்னடி சரணம்



நல்லை வலம் வரும்
நாயகா சரணம்
நான்முகனை சிறையடைத்த
வேலவா சரணம்
கலியுக வரதனாம்
கந்தா சரணம்
அடியவரின் குறை போக்கும்
ஆறுமுகா சரணம்
வேண்டுவரமளிக்கும் வேலவா!
கந்தா! கதிர்வேலா!
உன்னடி சரணம்.

**த.விஜிதா, மயிலிட்டி.**

## நம்மினத்தைக் காக்க வழிகாட்டு

(நேரிசை வெண்பா)
தொல்லை வினையகற்றும் நல்லைக் குமரையா
வல்லநலந் தந்தெமைக் காப்பாற்று - எல்லையில்
திட்டங்கள் போட்டுமே தீந்தமிழைத் தேய்க்கவரும்
எட்டப்பர் மாரைவிட்(டு) ஒட்டு
தேனினிய தீந்தமிழின் கோவேயெம் மண்பாராய்
நானெடுத்துச் சொல்லநாக் கூசுதையோ - ஏனிவர்கள்
எம்மினத்தின் வாழ்வகற்ற எண்ணியே நிற்கின்றார்
நம்மவரைக் காக்கவழி காட்டு

**ச.லலீசன், அச்சுவேலி.**

## வேல் கொண்டு வாருமையா!



குன்றிலே குடியிருப்பவனே
குமரனே குகனே
நல்லைப் பதியிலே
வாழ்கின்ற வடிவேலா
அழகுத் தெய்வமே
ஆருயிரும் உனையே
நினைத்துருகி தவிர்க்கிறது
வேலவனே!
வேல் கொண்டு வாருமையா

**வே.வே. அகிலேஸ்வரன்,**
**மருதங்கேணியூர்.**

## எல்லோர்க்கும் இறைவன் நல்லைக்குமரன்


சமணம் பௌத்தம் சண்டையிட்டு
சமரசமாகியது எல்லாள துட்டகை முனுயுத்தம்
இனமதங்கடந்து எல்லோர்க்கும்
இறையாக இருப்பவன் கதிர்காமவேலன்
மனமது மாறி நாயன்மார்களால் அறுவகைச்
சமயமும் ஆரியச் சக்கரவர்த்திகளால் மேன்மையுற
மன்னன்புகனேகபாகு பரம்பரையால்
கட்டப்பெற்றதே நல்லைக்குமரன்!

**இராமஜெயபாலன், கொக்குவில்.**

LG JAFFNA ELECTRICAL
(Abans Dealer Show Room)
No.04, New market, Chavakachchri. T.P. 021 300 8702
141,Power House Road, Jaffna.
T.P: 021 222 4566, 5766.
(C/2163)(2-6-7)

# வளர்ச்சி நோக்கிய பயணத்தில் சிறுவர்கள் பாலர் பாடசாலை

**கர்ணன்**



தும்பளை சிறுமலர்கள் பாலர் பாடசாலை 1980 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 14 ஆம் திகதி தும்பளையிலுள்ள தனியார் வீடொன்றில் மிக அமைதியான முறையில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது ஆஸ்திரேலியாவில் வசித்து வரும் நிர்மலா என்ற ஆசிரியை (காலஞ்சென்ற டொக்ரர் திருநாவுக்கரசுவின் மகள்) ஆசிரியையாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்தப் பாடசாலையில் பிரதீஸ் ரவீந்திரன் (தற்போது லண்டனில் தொழில் புரிந்து வருகின்றார்) என்பவர் முதலாவது மாணவனாக அனுமதி பெற்றார். ஆரம்பத்தில் ஆண், பெண் மாணவர்கள் 14 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

அந்த வேளை இது ஒரு தனிப்பட்ட பாலர் பாடசாலையாகவே ஆரம்பிக்கப்பட்டது. எனினும் தும்பளை கிழக்கு சனசமூக நிலையத்தின் ஊக்குவிப்பும் அனுசரணையும் கிடைத்து வந்தது. 14 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாலர் பாடசாலை நான்கு மாதங்களில் மாணவர் தொகையை 23 ஆகப் அதிகரித்துக் கொண்டது. ஆரம்பத்தில் மாணவர்களிடமிருந்து பெறப்படுகின்ற மாதாந்தக் கட்டணமே ஆசிரியருக்குரிய வேதனமாக அமைந்தது.

அந்தக் காலப்பகுதியில் பாலர் பாடசாலைகள் அதிக முக்கியத்துவம் பெறாததால் பாலர் பாடசாலையை நோக்கி மாணவர்கள் வருவது குறைவாகவே இருந்தது. இருந்த போதும் இந்தப் பாலர் பாடசாலை ஏனைய இடங்களை விட சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. இதற்கு ஆசிரியையின் அர்ப்பணிப்பான சேவையே காரணமாக இருந்தது. இந்தப் பாடசாலையில் மாணவர்கள் உடற்பயிற்சி, கலைப்பயிற்சி போன்றவற்றிலும் ஈடுபட்டார்கள்.

1981ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 14 ஆம் திகதி தும்பளை சிறுமலர்கள் பாலர் பாடசாலையின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி பாலர் பாடசாலையில் சிறிய அளவில் கலை நிகழ்வுகளும், பரிசளிப்பும் நடைபெற்றன.

இந்த கலைவிழாவை பார்வையிட வந்த பலரும் மாணவர்களின் திறமையை வெகுவாக ரசித்து மகிழ்வடைந்து தங்கள் வீட்டு மழலைச் செல்வங்களையும் இந்தப் பாலர் பாடசாலையில் இணைத்துக் கொள்ள வேண்டுமென்று விருப்பங் கொண்டார்கள். இதனால் மாணவர்கள் தொகை படிப்படியாக அதிகரித்து 32 மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையாக மாற்றம் பெற்றன.

மாணவர்கள் தொகை அதிகரிக்கவே ஓர் ஆசிரியையால் தனியே கல்வி கற்பிப்பது இயலாததாக இருந்தது. அத்துடன் பாடசாலையில் இட நெருக்கடியும் ஏற்பட்டது. இந்த வேளையில் இந்தப் பாலர் பாடசாலையின் நிர்வாகத்தையும் கட்டுப்பாட்டையும் தும்பளை கிழக்கு சனசமூக நிலையத்திடம் ஒப்படைப்பதன் மூலம் இந்தப் பாடசாலையை மிகச்சிறந்த ஒரு பாடசாலையாக உருவாக்க முடியுமென பலரும் ஏகோபித்து முடிவு செய்து 1982 ஆம் ஆண்டு ஆனி மாதம் 05 ஆம் திகதி தும்பளை கிழக்கு சனசமூக நிலையம் முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டது.

தும்பளை கிழக்கு சனசமூக நிலையம் பாலர் பாடசாலையைப் பொறுப்பேற்ற போதும், இது ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து நிர்வகித்து வந்த சபா ரவீந்திரனையே சனசமூக நிலையத்தின் சார்பிலும், நிர்வாகத்தைக் கவனித்து வருமாறு கேட்டுக் கொண்டார்கள். இதே காலப்பகுதியில் பாடசாலையின் ஆரம்பகால ஆசிரியையான செல்வி நிர்மலா தனது திருமணம் காரணமாக வெளிநாடு செல்ல வேண்டி ஏற்பட்டதனால் புதிய ஆசிரியையாக செல்வி கலாநிதி ஆனந்தநடராஜா நியமிக்கப்பட்டு, தும்பளை நெல்லண்டை வீதியிலுள்ள மற்றுமோர் தனியார் வீட்டில் பாடசாலை செயற்பாடுகள் நடைபெற்றன. உதவி ஆசிரியையாக செல்வி வசந்தி ஆறுமுகம் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

1983 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் வருடாந்த விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகின்றது. கடந்த 30 வருடங்களாக விளையாட்டுப் போட்டி ஒழுங்காகவும், சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றது.

இந்தப் பாலர் பாடசாலையே தும்பளைப் பகுதியில் ஒரே ஒரு பாடசாலையாக மிக நீண்டகாலமாகச் சேவை செய்து வந்தது. பாலர் பாடசாலையின் முக்கியத்துவம் உணரப்பட்டு, பாலர் கல்வி அவசியமென்ற நிலை ஏற்படவே அயல் கிராமங்களிலும் பாலர் பாடசாலைகள் தோன்றத் தொடங்கியது.

1986 ஆம் ஆண்டு தொடக்கம் நவராத்திரி கலைவிழாவையும் நடத்தி மாணவர்களிடையே பல வகையான போட்டிகளை நடத்தி, கலை நிகழ்வுகளை மேடை ஏற்றி பரிசில்கள் வழங்கும் முறையும் அறிமுகப்படுத்தப் பட்டது. 1987 ஆம் ஆண்டில் தும்பளை வீதியிலுள்ள வல்லிபுரம் தங்கவடிவேல் என்பவருடைய 'சிற்றம்பலம் வீடு' என்ற வசதியான இடத்துக்கு பாலர் பாடசாலை இடமாற்றம் பெற்று வந்தது.

1986 ஆம் ஆண்டு தொடக்கம் நவராத்திரி கலைவிழாவையும் நடத்தி மாணவர்களிடையே பல வகையான போட்டிகளை நடத்தி, கலை நிகழ்வுகளை மேடை ஏற்றி பரிசில்கள் வழங்கும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. 1987 ஆம் ஆண்டில் தும்பளை வீதியிலுள்ள வல்லிபுரம் தங்கவடிவேல் என்பவருடைய ''சிற்றம்பலம் வீடு'' என்ற வசதியான இடத்துக்கு பாலர் பாடசாலை இடமாற்றம் பெற்று வந்தது.

இது பழைய வீடாக இருந்தாலும் பெரிய நிலப்பரப்பைக் கொண்டிருந்தமையால் மாணவர்கள் உடற்பயிற்சி, கலை நிகழ்வுகளிலும் ஈடுபடக்கூடியதாய் இருந்தது. குறித்த வீட்டின் ஒரு பகுதியில் வசித்து வந்த இளைப்பாறிய கிராமசேவகர் சிவஞான சுந்தரமும் அவரது துணைவியாரும் தங்கள் பேரப்பிள்ளைகள் போல் இந்தப் பாடசாலை மாணவர்களை அரவணைத்து வந்தார்கள்.

1989 ஆம் ஆண்டில் அண்மையிலுள்ள வேறு இடங்களுக்கு போட்டி நிகழ்வுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பரிசில்களையும் பெற்றுக் கொள்ளத் தொடங்கினார்கள்.

இந்தப் பாடசாலை மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி, நாடகம், நடனப்போட்டி என்பவற்றில் தேவையான பயிற்சிகளைக் கொடுக்கும் பொறுப்பை தற்போது ஓய்வு பெற்றுள்ள அதிபர் கா.புஸ்பராஜா பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவரது நெறியாள்கையில் மாணவர்கள் பல நாடகங்களை நடித்து பாராட்டுதல்களும் பரிசில்களும் பெற்றுக் கொள்ளத் தொடங்கினார்கள். 1990 ஆம் ஆண்டில் தும்பளை கிழக்கு சனசமூக நிலையத்தின் நிர்வாகம் முழுக்க முழுக்க இளைஞர்களால் பொறுப்பேற்கப்பட்டதும் அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த பாலர் பாடசாலையும் துரித முன்னேற்றத்தை நோக்கி பயணிக்கத் தொடங்கியது. மாணவர்கள் தொகையும் அதிகரிக்கவே உதவி ஆசிரியைகள் இருவர் நியமிக்கப்பட்டார்கள். பொறுப்பாசிரியை செல்வி கலாநிதி (நவம் ரீச்சர்) தன்னை முழுமையாக அர்ப்பணித்து முழு நேரமும் மாணவர்களின் முன்னேற்றத்தில் அக்கறை எடுத்து வந்தார்.

(தொடரும்)

# தமிழரின் தன்மானத்துக்கு கிழக்குத் தேர்தல் சவால்

## கூட்டமைப்பின் வேட்பாளர் கூறுகிறார்

திருகோணமலை,ஓக.8

நடைபெறப்போகும் கிழக்கு மாகாணத் தேர்தல் தமிழரின் தன்மானத்துக்கு சவாலான தேர்தலாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாவட்ட வேட்பாளர் ஜெவிந்தன் கருணா கரம் (ஜனா) தெரிவித்தார்.

மட்டக்களப்பு, ஆறுமுகத்தான்குடியிருப்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணசபையின் காலம் முடிவதற்கு முன்பாகவே அதனைக் கலைத்து தேர்தலொன்றைக் கொண்டுவந்து தமது கபட நாடகத்தை அரங்கேற்ற நினைக்கும் இந்த அரசை தமிழ் மக்கள் தமது வாக்குப் பலத்தின் மூலம் மண் கவ்வ வைக்கவேண்டும்.

இந்தத் தேர்தல் தொடர்பில் இன்று சர்வதேசம் மிகுந்த உன்னிப்புடன் உள்ளது. அண்மையில் அமெரிக்கா, கனடா, பிரிட்டன் அரசுகள் விடுத்த அறிக்கைகள் இதற்குச் சான்றாகும்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் என்ன செய்யவேண்டும் என்பதை சிந்திக்க வேண்டும். நாங்கள் கடந்த கால்த்தில் இடம்பெற்ற அல்லது அதுதொடர்பிலான சம்பவங்களை நினைத்துக்கொண்டிருந்தால் அது அரசின் வெற்றிக்கே வழி வகுக்கும். இந்தத் தேர்தலில் அனைவரும் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று தமது வாக்குகளை பிரயோகிக்க வேண்டும்.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் போரை மூலதனமாகக்கொண்டு வெற்றி பெறலாம் என்று எண்ணிய அரசு அதனை கிழக்கு மாகாணத்திலும் பயன்படுத்தலாம் எனக் கனவு காண்கின்றது. அதற்கு தமிழ் மக்கள் தகுந்த பாடத்தை தேர்தலில் புகட்டுவார்கள் என்ற நம்பிக்கையுள்ளது.

கடந்த காலங்களில் ஆயுதப்போராட்டத்துக்கு அமோக ஆதரவளித்த மக்கள் அண்மைய தேர்தல்களில் ஜனநாயக வழிமூலம் வாக்களிக்கும் தன்மை குறைவாகவே உள்ளது. இதற்கு எமது மக்கள் காரணமல்ல என அனைவருக்கும் தெரியும். ஜனநாயகம் என்னும் போர்வையில் சிலர் மேற்கொண்ட அடாவடித்தனங்களின் காரணமாகவே மக்கள் அதில் இருந்து ஒதுங்கியிருந்தனர். இன்று எமது தமிழினம் நரகத்துக்கு ஒப்பான இடத்திலேயே நிற்கின்றது. சரியான பாதை, சரியான புரிதல், சரியான தெரிவு, சரியான தீர்மானம் என்பனவற்றை எடுக்க வேண்டிய மிக முக்கிய கட்டத்தில் தமிழ் மக்கள் இருக்கின்றனர். இதற்கு உங்கள் அனைவரது பங்களிப்பும் மிகவும் அவசியம். அதுதான் எமது ஒற்றுமை, எமது உரிமைக்குரலை வெளிக் காட்டும்.

இந்தத் தேர்தலில் நாங்கள் வாக்களிக்காமல் விடுவோமானால் அது நமக்கு நாமே குழிதோண்டுவதற்கு சமனாவதுடன் பேரினவாதிகளுக்கும் அதன் கைக்கூலிகளுக்கும் பெரும் வரப்பிரசாதமாகிவிடும்.

இந்தத் தேர்தலானது தமிழினத்தின் தன்மானத்துக்கு பேரினவாதத்தால்விடுக்கப்பட்ட சவால் என்பதை புரிந்துகொண்டு தமது வாக்குரிமையயைப் பயன்படுத்த வேண்டும் - என்றார். (ச)

## 24 மாடுகள் மீட்பு

நுவரெலியா,ஓக.8

நுவரெலியாவில் அனுமதிப் பத்திரமின்றி 24 மாடுகளை நானுஓயா நகருக்கு ஏற்றி வந்த லொறியையும் குறித்த மாடுகளையும் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மீபிலிமான பகுதியில் வைத்து நேற்று செவ்வாய்க் கிழமை விசேட அதிரடிப் படையினர் லொறி ஒன்றை சோதனையிட்டபோதே குறித்த மாடுகள் மீட்கப்பட்டுள்ளன.

நானுஓயா நகரிலுள்ள இறைச்சிக் கடைக்கு 24 மாடுகளும் ஒரே லொறியில் அடைத்துக் கொண்டுவரப்பட்டன என்றும், குறித்த மாடுகளில் ஒன்று உயிரிழந்த நிலையில் காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ச)

# வடக்கு, கிழக்கில் மண்ணுக்குப் போராட்டம் மலையகத்தில் சம்பளத்துக்குப் போராட்டம்

## மலையக மாமன்றத் தலைவர் தெரிவிப்பு

நுவரெலியா,ஓக.8

வடக்கு,கிழக்கில் மக்கள் தமது மண்ணுரிமைக்காகப் போராடி வருகின்றார்கள். ஆனால், மலையக மக்கள் 200 வருடகாலமாக சம்பளத்துக்காகப் போராடும் நிலையை மலையக அரசியல்வாதிகள் உருவாக்கியுள்ளனர் என்று ஐக்கிய மலையக மாமன்றத்தின் தலைவர் ஏ.பி.சுரேஸ் தெரிவித்தார்.

ஐக்கிய மலையக-மாமன்றத்தின் கல்விக்கென ஒரு வேலைத் திட்டம் லபுக்கலை தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையக மக்களிடையே மேடைகளில் பொய் வாக்குறுதிகளை அளித்து அரசியல் பிழைப்பு நடத்திவரும் அரசியல்வாதிகளுக்கு தேர்தல் காலங்களில் பாடம் புகட்டவேண்டும்.

> மலையக மக்களிடையே மேடைகளில் பொய் வாக்குறுதிகளை அளித்து அரசியல் பிழைப்பு நடத்தி வரும் அரசியல் வாதிகளுக்கு தேர்தல் காலங்களில் பாடம் புகட்டவேண்டும்.

மலையக மக்களிடையே வாசிக்கும், சிந்திக்கும் அறிவாற்றல் வளரவேண்டும். பாமர மக்கள் என்று தோட்டத் தொழிலாளர்கள் விமர்சிப்பதற்கும் இவர்களை ஏமாற்றுபவர்களுக்கும்ஐக்கிய மலையக மாமன்றம் சரியான பாடத்தைக் கற்பிக்கும்

பொருளாதார ரீதியில் மலையக மக்கள் பின்தங்கியிருப்பதற்கு மலையக அரசியல்வாதிகளே காரணம். மக்களுடைய வாக்குரிமைச் சக்தியைப் பெற்று தமது சொந்த நலன்களைப் பேணி வருகின்றவர்களால் மக்களுக்காகக் கிடைக்கப் பெறவேண்டிய பொருளாதார ரீதியிலான உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன .

தோட்டங்களில் படித்த இளைஞர்களையும், யுவதிகளையும் அரசியலில் ஈடுபடுத்தி அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்துச் செல்ல உதவிக்கரம் நீட்டவேண்டும்.

மலையகப் பெண்களுக்கு சம உரிமை, அரசியலில் உண்டென்று உதட்டளவில் பேசப் பட்டுவருகின்றது.

எனவே இந்த நிலைமை மாற்றப்பட்டு தோட்டத்திலுள்ள பெண்க ளும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், நாடாளுமன்றத் தேர்தல்கள் போன்றவை களில் போட்டியிட வேண்டும்- என்றார். (ச)

## விபத்தில் சிக்கியது பௌஸர் பள்ளத்தில் பாய்ந்தது கொள்கலன்

### 15 ஆயிரம் லீற்றர் டீசல் கசிவு



நுவரெலியா,ஓக.8

கொழும்பில் இருந்து கொட்ட கலைக்கு டீசல் ஏற்றிச் சென்ற பௌஸர் ஒன்று நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தையடுத்து டீசல் கசிவு ஏற்பட்டு அது மகாவலி கங் கையில் கலக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த பௌஸர் கொள்கலன் என்ஜினில் இருந்து விலகி பள்ளத்தில் வீழ்ந்துள்ளது. 33,000 லீற்றர் டீசலை ஏற்றிச் சென்ற கொள்கலனில் இருந்து 15000 லீற்றர் டீசல் கசிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கசிந்த டீசலை மகாவலி கங்கையில் கலக்கவிடாது தடுக்க இராணுவத்தினர், பொலிஸார், பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச)

## கணவனை இழந்த குடும்பங்களுக்கு உலர் உணவு

அம்பாறை,ஓக.8

அம்பாறையில் கணவனை இழந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள், பெருநாளுக்கான ஆடைகள் என்பன வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட் கிழமை சம்மாந்துறை அல் உஸ்வா பகல் பராமரிப்பு நிலைய தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

புனித ரம்ழானை முன்னிட்டு சவூதி அரேபியாவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஜம் இய்யதுல் சபாப் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மௌலவி ஐ.எல்.எம். முஸ்தபா தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில், ஜம் இய்யதுல் சபாப் அமைப்பின் பணிப்பாளர் மௌலவி எம். எஸ்.எம்.றஷகட் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.(ச)



வளமான மண்ணிலிருந்து நாட்டின் அபிவிருத்தி எனும் தொனிப்பொருளில் விவசாயிகள் இடையே சேதனப் பசளைப் பாவனையை வலுவூட்டும் வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காரைதீவு கமநலசேவை மத்திய நிலையத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

## லஞ்சம் பெற்ற பொலிஸ்காரர் வசமாக மாட்டினார்

1000 ரூபா லஞ்சம் பெற்ற பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரை இறைச்சிக்கடை உரிமையாளர் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை மகளிர் பாடசாலைக்கு அண்மையில் உள்ள இறைச்சிக் கடைக்கு நேற்றுக் காலை 6 மணிக்கு ஓட்டோவில் இறைச் சியை எடுத்துச் சென்றபோது குறித்த பாடசாலையில் ஜி. சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு காவல் கடமையில் இருந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் இவ்வாறு இறைச்சியை எடுத்து வரமுடியாது என்று குறித்த நபரிடம் பயமுறுத்தி 10 ஆயிரம் ரூபா லஞ்சமாகக் கேட்டுள்ளார். இதனால் இறைச்சியை எடுத்துச் சென்றவர் ஆயிரம் ரூபாவை லஞ்சமாக வழங்கியுள்ளார்.

இதனையடுத்து இறைச்சிக்கடைக்கு இறைச்சியை குறித்த நேரத்துக்குப் பின்னர் அவர் எடுத்துச்சென்றுள்ள போது இறைச்சி விற்பனைக் கடை முதலாளி , தாமதமாக வந்த காரணத்தைக் கேட்ட போது பொலிஸ் லஞ்சம் வாங்கிய சம்பவத்தை கூறியதையடுத்து இறைச்சி விற்பனைக் கடை உரிமையாளர் உடனடியாக பாடசாலைக்குச் சென்று லஞ்சம் வாங்கிய பொலிஸ் கொன்ஸ்டபிளை மடக்கிப்பிடித்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தார்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணை களை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** என்னதான் பொறுப்போடு செயற்பட்டாலும், ஏதாவது ஒரு வகையில் பிரச்சினைகள் உருவாகும். பண விடயங்கள் தொடர்பாக, சிலருடன் வாக்குவாதம் செய்வீர்கள். நீண்ட நாள்களாக, உங்களின் வீட்டுக்கு வராத சிலர் வரலாம். பயணங்கள் உற்சாகம் தருவதாக அமையும்.

**இடபம்:** வழக்கமான பணிகள், உடற் பயிற்சிகள் செய்வதைப் பிற்போட்டு வைப்பீர்கள். குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்க, பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். வீண், விவகாரங்களில் இருந்து விடுபடுவீர்கள். மறதியால் அவதியுண்டு.

**மிதுனம்:** நண்பர்கள் வட்டம் விரிவடையும். குடும்ப உறுப்பினர்கள் உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். ஓய்வின்றி சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். கடந்தகால இழப்பு ஒன்றை ஈடுசெய்யும் வாய்ப்பு உருவாகும்.

**கடகம்:** எதிர்காலத் திட்டம் ஒன்றுக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். ஒரு வேலையை முடிக்க, ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் அலைய வேண்டி இருக்கும். கோபத்தை குறைக்க் வேண்டும். வெளியூரில் வசிக்கும் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு விடயம் ஒன்றை பகிர்ந்து கொள்வார்.

**சிங்கம்:** தொல்லை கொடுத்தவர்களே, தோள் கொடுக்க முன்வருவர். வேண்டிய பணத்தைப் புரட்டிக் கொள்ள வாய்ப்பு கிட்டும். வெறுப்பாகச் செயற்பட்ட சொந்த பந்தங்கள் அன்பாக, அனுசரணையாக நடந்து கொள்வர்.

**கன்னி:** எதையும் ஒன்றுக்கு பலமுறை யோசித்து, புத்திசாலித்தனமாகச் செயற்படுவீர்கள். முக்கியஸ்தர் ஒருவருக்காக, நீங்கள் சில பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். காலதாமதமாகச் சில வேலைகளை ஆரம்பித்தாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள்.

**நாளை**

ஆடி 25 வியாழக்கிழமை 09 .08.2012
திதி: சப்தமி ந.ப. 12.36 வரை
நட்சத்திரம்: பரணி முழுவதும்
சுபநேரம்: 07.34 - 09.04 வரை
ராகு காலம்: 01.34-03.04 வரை

**துலாம்:** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். திடீரென, நிகழும் மாற்றங்களால் அதிகம் யோசிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உடன்பிறப்புகள் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். திடீர் பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். உதவி செய்வதாகச் சொன்ன சிலர் ஏமாற்றலாம். தீவிர யோசனைகள், அலைக்கழிப்புகளுக்கு ஆளாகலாம். பெண் நண்பர் ஒருவரால் உதவிகள் கிடைக்கப்பெறும்.

**தனுசு:** உறவு, பகை பாராமல் உதவி செய்வீர்கள். பண ஆதாயம் தரும், சில வேலைகளை அக்கறையோடு செய்வீர்கள். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். வெளியூர் பயணங்களுக்கு உதவுவீர்கள்.

**மகரம்:** பரபரப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சக ஊழியர்களால் கோபம் உண்டாகலாம். அயலவர் மதிக்கும் வகையிலான காரியங்களைச் செய்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**கும்பம்:** புகழ், கௌரவத்துக்குப் பாதிப்பு ஏற்படாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளால், சிரமங்களைச் சந்திக்கலாம். மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ளலாம். உடல் நிலையில் சில தொந்தரவுகள் ஏற்படும்.

**மீனம்:** உறவினர்கள் சிலர் உங்களை நம்பி வேலைகளை ஒப்படைப்பார்கள். குடும்ப உறுப்பினர்களை குறை கூறுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த காரியம் ஒன்று, இன்று எதிர்பாராதவிதமாக முடியும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 7 | 2 | | 4 | | | |
| | 9 | 3 | | | | 6 | | 2 |
| 4 | | 6 | | | | | | |
| | | | 8 | 2 | | 1 | | 3 |
| | 5 | 8 | 6 | | 1 | 9 | 2 | |
| 6 | | 2 | | 7 | 3 | | | |
| | | | | | | 7 | | 6 |
| 8 | | 1 | | | | 2 | 3 | |
| | | | 1 | | 6 | 5 | | 9 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 2 | 6 | 4 | 1 | 7 | 8 | 9 |
| 1 | 6 | 4 | 8 | 7 | 9 | 5 | 2 | 3 |
| 8 | 7 | 9 | 5 | 3 | 2 | 1 | 6 | 4 |
| 7 | 2 | 5 | 4 | 8 | 6 | 3 | 9 | 1 |
| 3 | 9 | 1 | 7 | 2 | 5 | 8 | 4 | 6 |
| 6 | 4 | 8 | 9 | 1 | 3 | 2 | 5 | 7 |
| 2 | 8 | 7 | 1 | 9 | 4 | 6 | 3 | 5 |
| 9 | 1 | 6 | 3 | 5 | 8 | 4 | 7 | 2 |
| 4 | 5 | 3 | 2 | 6 | 7 | 9 | 1 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்



## சின்னராஜா அன்ரன் அரியரட்ணம்

### (சின்னத்தம்பி- மேக்கானிக்)

19/1, ஈச்சமோட்டை பீச் றோட், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராஜா அன்ரன் அரியரட்ணம்(சின்னத்தம்பி- மெக்கானிக்) நேற்றுமுன்தினம் (06.08.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னராஜா-மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற ஜோசப் ராசேந்திரம் மற்றும் ராசேந்திரம் செப மாலை அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும். அமலோற்பவத்தின்(மலர்) அன்புக்கணவரும், ராணி (திருகோணமலை), காலஞ்சென்ற நிர்மலா(கனடா) மற்றும் புஸ்பம் (இந்தியா), அன்ரன் செல்வரட்ணம் (பெரியண்ணை-மெக் கானிக்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரதீபன், பிரஷாந்தன், பிரஷாந்தினி (கனடா),பிரஷோபினி, பிரதீப்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் றேனுகா ஜெனிபர்,றேனுகாஷாலினி, எட்வேட்ராஜ்குமார்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், ஷரோன்,றெவின், ரலூனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.08.2012) புதன்கிழமை பி.ப.3.00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கானான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19/1,ஈச்சமோட்டை பீச் றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(21455)(5-6-7)

## அனுமதியின்றிப் போக்குவரத்து; ஈடுபடும் பஸ்கள் அரசுடைமை

கொழும்பு, ஓக.8

அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பஸ்களிடமிருந்து இரண்டு லட்சம் ரூபா அபராதம் அறவிடப்படும். குறித்த பஸ்ஸை அரசுடைமையாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தனியார் போக்குவரத்து அமைச்சர் சி. பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அமைச்சரவை பத்திரமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதோடு, அடுத்தவாரம் இந்தப் பிரேரணைக்கு அனுமதி கிடைக்கும் என்று அவர் கூறினார். சாரதிகளுக்கு மக்களின் உயிருடன் விளையாட இடமளிக்க முடியாது. அத்தகைய சாரதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## துமிந்த நாடு திரும்பவில்லை

### அவரது சட்டத்தரணி கூறுகிறார்

கொழும்பு,ஓக.8

ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாரதலக்ஷ்மன் பிரேமசந்திரவின் படுகொலைச் சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா இதுவரை நாடு திரும்பவில்லை என்று அவர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

பாரதலக்ஷ்மனின்கொலைச் சந்தேகநபரான துமிந்த சில்வாவை கைது செய்யுமாறு தான் ஏற்கனவே விடுத்த உத்தரவு நடைமுறையில் உள்ளது என்று கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன அல்விஸ் கூறினார்.

**பாரத லக்ஷ்மனின் கொலைச் சந்தேகநபரான துமிந்த சில்வாவை கைது செய்யுமாறு ஏற்கனவே விடுத்த உத்தரவு நடைமுறையில் உள்ளது.**



இந்தநிலையில், நீதிமன்றில் முன்னிலையாகிய இரகசியப் பொலிஸார், குறித்த கொலை தொடர்பில் துமிந்த சில்வாவிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தை சட்டமா அதிபருக்கு அனுப்ப ஆலோசனை கோரப்பட்டதாகக் குறிப்பிட்டனர்.

இதேவேளை, பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் மகள், நீதிமன்றத்தை அவமதித்தார் என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கூறுவதற்கு தனக்கு அதிகாரம் இல்லை என்று குறிப்பிட்ட நீதிவான், இது தொடர்பில் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்று கூறினார். (ச)

## மூன்று ஆங்கில எழுத்தில் வாகன இலக்கத் தகடுகள்

கொழும்பு,ஓக.8

மூன்று ஆங்கில எழுத்துக்களுடன் கூடிய இலக்கத் தகடுகளை வாகனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கை மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் எஸ்.எச்.ஹரிஸ் சந்திர தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இத்திட்டம் இலங்கையில் முதற்கட்டமாக ஓட்டோவுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இரண்டு ஆங்கில எழுத்து இலக்கத் தகடுகள் முடிவடைந்தவுடன் ஏனைய வாகனங்களுக்கும் மூன்றெழுத்து இலக்கத் தகடுகள் வழங்கப்படவுள்ளன.

முன்னர் ஸ்ரீ எழுத்து கொண்ட இலக்கத் தகட்டை அறிமுகப்படுத்தியது. பின்னர் இரு ஆங்கில எழுத்துக்கள் கொண்ட இலக்கத்தகடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன

புதிய மூன்று ஆங்கில எழுத்து இலக்கத் தகடு திட்டத்தின் மூலம் 6.4 மில்லியன் வாகனங்களைப் பதிவு செய்ய முடியும்- என்றார்.

## இசற் சர்ச்சையை தீர்க்காவிடின் மாணவர் நம்பிக்கை தகர்ந்துவிடும்

### பிரதம நீதியரசர் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.8

இசற் புள்ளி சர்ச்சைக்கு உரிய தீர்வுவழங்கப்படாவிட்டால் நாட்டின் எதிர்காலப் பரீட்சை முறைமை தொடர்பில் மாணவர்கள் நம்பிக்கை இழக்கக் கூடும் என்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இசற் புள்ளி மீள் மதிப்பீட்டின் மூலம் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மாணவர்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த மனு தொடர்பான விசாரணைகளின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


இசற் புள்ளி சர்ச்சைக்கு உடனடியாக காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் உத்தரவிட்டுள்ளார்.

இசற புள்ளிப் பெறுபேறு தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உரிய முறையில் பின்பற்றவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

**சர்ச்சையுடன் தொடர்புடைய சகல தரப்பினரையும் இணைத்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வு எட்ட முயற்சிக்கப்படும்.**

இதேவேளை, சர்ச்சைக்குத் தீர்வு காண போதியளவு கால அவகாசம் தேவைப்படுவதாக சட்ட மா அதிபர் பாலித பெர்னாண்டோ நீதிமன்றில் கோரியுள்ளார்.

சர்ச்சையுடன் தொடர்புடைய சகல தரப்பினரையும் இணைத்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு எட்ட முயற்சிக்கப்படும் என சட்ட மா அதிபர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)




சிரியா மீது நடத்தப்படும் குண்டுத் தாக்குதலை நிறுத்துமாறு நேட்டோவை வலியுறுத்தி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்னால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மக்கள் போராட்ட இயக்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## உரிய பாடசாலைக்கு திரும்பாவிட்டால் ஆசிரியர் சம்பளம் ரத்து

கொழும்பு,ஓக.8

பாடசாலைகள் பெயர் குறிக்கப்பட்டு புதிதாக நியமனம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் உரிய பாடசாலைகளுக்குக் கடமைக்குச் செல்லத் தவறினால் அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பதுளை மாவட்ட விசேட அபிவிருத்திக் கூட்டம் நேற்று முன்தினம் ஊவா மாகாண சபை கேட்போர் கூடத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. இதன்போது ஊவா மாகாணத்தின் பல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதற்குப் பதிலளித்த போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய மற்றும் மாகாண சபைகளுக்கிடையில் ஆசிரியர்கள் முறையாகப் பகிரப்பட்டு ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்திய ஜனாதிபதி, இந்தச் செயற்பாட்டுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

உரிய பாடசாலைக ளுக்குக் கடமைக்குச் செல்லத் தவறும் ஆசிரியர்கள் விடயத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார். (ச)

# தமிழருக்கான தீர்வை வழங்குவது கட்டாயம்

### ஐ.நாவுடன் பேச வேண்டும் என்கிறார் வாசுதேவ

கொழும்பு,ஓக.8

தமிழ் மக்களுக்கு முழுமையான அரசியல் தீர்வை வழங்க வேண்டிய கட்டாயம் எமக்கு உள்ளது என்று அரசின் பங்காளிக் கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணத்தையும் ஏகாதிபத்திய வாதத்தையும் இணைத்துக் கணிப்பிடுவது முட்டாள்தனமாகும்.

ஐ.நா. மனித உரிமைச் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருவதை வரவேற்கின்றேன். இதன் மூலம் இதுகால வரை இலங்கை தொடர்பாக அவர் மனதிலிருந்த சந்தேகங்களுக்கும் விடை கிடைக்கும்.


போருக்குப் பின் தமிழ் மக்களின் நிலைமை என்ன? அரசு அவர்களுக்குச் செய்துள்ள உதவிகள் என்ன? மீள் குடியேற்றம் எவ்வாறு இடம் பெறுகின்றது என்பது தொடர்பிலான உண்மைகளை நேரில் கண்டறியலாம்.

இதேவேளை, தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகிடைத்துவிட்டது என்று கூற முனையவில்லை. பல்வேறு குறைகள் இருக்கின்றன. இவை தொடர்பில் இங்கு வரும் ஐ.நா. குழுவினருடன் பேச்சு நடத்தி நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளைக் காண முடியும். ஐ.நாவின் உதவிகளையும் பெற முடியும். இதனை நாம் நிராகரிக்க முடியாது.

ஏனென்றால் இலங்கை ஐ.நாவில் உறுப்புரிமை பெற்ற நாடு.

போருக்கு முகம் கொடுத்த நாடு என்ற ரீதியில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் எஞ்சியிருக்கத்தான் செய்யும். எனவே ஐ.நாவுடன் பேச வேண்டியது கட்டாயமாகும். இதை விடுத்து நவநீதம்பிள்ளையின் வருகைக்கும் ஏகாதிபத்திய வாதத்துக்கும் முடிச்சுப் போட முனைவது முட்டாள் தனமாகும்.

**இந்தியாவுடன் பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்புக்கான உடன்படிக்கையை செய்து கொள்வதன் மூலம் ஆரம்பத்தில் இலங்கைக்கு பயன்கள் கிடைப்பது அரிதாக இருக்கும்.**



இந்தியாவுடன் பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்புக்கான உடன்படிக்கையை செய்து கொள்வதன் மூலம் ஆரம்பத்தில் இலங்கைக்கு பயன்கள் கிடைப்பது அரிதாக இருக்கும். ஆனால் காலம் போக இந்தியாவில் எமக்கு சந்தை வாய்ப்புக்கள் அதிகரிக்கும். இதனை அரசியல் மயமாக்காது தூர நோக்குடன் சிந்தித்துப் பார்க்க வேண்டும்- என்றார். (ச)

# டீசல் கொள்வனவு நட்டத்தை மக்களிடம் திணிக்கிறது அரசு

### திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.8

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் தரக்குறைவான டீசல் கொள்வனவின் மூலம் ஏற்பட்டுள்ள நட்டத்தை அரசு பொதுமக்கள் தலையில் சுமத்தியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



1994 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாட்டுக்கு லாபம் பெற்றுத் தரும் பிரதான நிறுவனங்களில் ஒன்றாக இருந்தது. அதன் பின்னர் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடைந்து மோசடி, ஊழல் நிறைந்த நிறுவனமாக மாறியுள்ளது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தரக்குறைவான பெற்றோல், தரக்குறைவான கல்வி, தரக்குறைவான பரீட்சை என வழங்கி வந்த அரசு தற்போது தரக்குறைவான டீசலை வழங்கி நாட்டின் முழுப் பொருளாதாரத்தையும் தரக்குறைவானதாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

தரக்குறைவான டீசல் இறக்குமதி செய்யப்பட்டதை ஏற்றுக் கொண்டுள்ள அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, டீசல் இறக்குமதிக்கும் தனக்கும் தொடர்பில்லை எனக்கூறி முன்னாள் அதிகாரிகள் தலையில் அதனை சுமத்த முயற்சிப்பதாக அவர்தெரிவித்தார்.(ச)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட “ A ‘ தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர் #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர் கனகபுரம் வீதி, கிளிநொச்சி தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர் வட்டுக்கோட்டை தொ.பே : 077 8996085

(21061) (7.)

## 2 மாடிக் கடை வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் - கன்னாதிட்டி வீதியில் 27 அடி நீளமும் 11 அடி அகலமும் கொண்ட இரண்டு மாடியுடன் கூடிய கடை உடன் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 407 9078, 077 526 9182 (21466) (6.7.45)

## மலிவு விற்பனைக்குண்டு

கட்டடத் தொழிலுக்குரிய, தச்சுச் தொழிலுக்குரிய, Tiles வேலைக்குரிய பழைய, புதிய Electrical Tools, தையல் இயந்திரங்கள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 077 052 9384, 021 321 6096 (21437) (6.2)

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் அ.யூட்தேயுஸ் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி அருளானந்தம் விக்டோரியா**

அவர்களின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பிரதேச செயலக நலன்புரிசங்கம், யாழ்ப்பாணம். (21428)(6.2)

## மகோற்சவகால தற்காலிக கடைகள்

துர்க்காதேவி ஆலய மகோற்சவ காலப்பகுதியில் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக் காணியின் முன் பகுதியில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான விலைக்கோரல் 12.08.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் நடைபெறும்.

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைச்சங்கம், தெல்லிப்பழை (21458)(6-7-8)

சு. கணேசமூர்த்தி
தலைவர்


## மரண அறிவித்தல்

### இராஜேந்திரம் அந்தோணிமுத்து

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வவுனியா, பண்டாரிக் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரம் அந்தோணி முத்து 06.08.2012 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் மேரி ஜெயராணியின்(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், விபுலானந்தாக் கல்லூரி, வவுனியா) அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான இராசேந்திரம்-பிரான்சிஸ்கா தம்பதியரின் அன்பு மகனும்,காலஞ்சென்றவர்களான அல்பிரட்- செபஸ்தியானா தம்பதியரின் மருமகனும், ஆன் ஜொவிற்றா(கனடா), டேவிற் எக்வின் (RDA-வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்ரனி யோதீஸ்வரன்(கனடா), விக்ரோ அமலினி(ஆசிரியை, வவுனியா பெரிய கோமரசன்குளம், ம.வி.) ஆகியோரின் அன்பு மாமனாரும், தருணிகா, தனுசிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற டேவிற் மற்றும் அஞ்சலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நேசம் மற்றும் மனோ (லண்டன்), ராணி, மணி (லண்டன்), இராசகுமாரன் (லண்டன்),வதி(லண்டன்), றஞ்சினிகுமாரி, இராயப்பு லீனஸ் (நீர்கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், நீக்ளஸ், ஜீன் எட்மன்,நெவில், வசந்தி, தேவதாஸ் காலஞ்சென்ற வலன்ரைன் ஜோச் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று(08.08.2012) புதன்கிழமை பி.ப.3.00மணிக்கு அன்னாரது இல்லத்தில் இருந்து புனித அந்தோனியார் ஆலயத்திற்கு இரங்கல் திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டாரிக்குளம்,
வவுனியா. (16932)(5-6)

தகவல்:
டேவிற் எக்வின்(மகன்)


# சுவையான, ஊட்டச்சத்துள்ள புதிய உணவு வகைகளைக் கண்டறியும் ஆராய்ச்சி

# மாபெரும் சமையல் போட்டி

**யாழ்.**போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையம் சுவையான சத்துள்ள உணவு வகைகளைக் கண்டறியும் ஆராய்ச்சி ஒன்றை ஆரம்பித்துள்ளது. இதற்கு பொதுமக்களின் ஆதரவை நாடி நிற்கின்றது. சமையல் நிபுணர்களே! சமையற்கலை ஆர்வலர்களே!! புதிய உணவைக் கண்டறியும் ஆராய்ச்சியை உங்கள் சமையலறையில் இன்றே ஆரம்பியுங்கள். வரும் ஒரு மாத காலத்திற்குள் அவ்வாறான உணவு ஒன்றை நீங்கள் கண்டுபிடிக்கும் பட்சத்தில் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். நீரிழிவு சிகிச்சை நிலையமானது நடத்தவுள்ள மாபெரும் சமையற்போட்டியில் கலந்து கொள்ளுங்கள். நீங்களும் ஒரு வெற்றியாளராக இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!

இந்தப் போட்டியில் ஆறுவகைகளில் உணவுகள் தயாரிக்கப்படவுள்ளன. பிரதான உணவு (சைவம்), பிரதான உணவு (அசைவம்), சிற்றுண்டிகள் (சைவம்), சிற்றுண்டிகள் (அசைவம்), உலர்உணவுகள் (சைவம்), பானங் கள் (சைவம்) என்பனவாகும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு மொத்தமாக ஒரு லட்சத்து எண்பதினாயிரம் ரூபா பெறுமதியான பணப்பரிசில் காத்திருக்கின்றது.மேலும் பங்குபற்றும் அனைவருக்கும் இரண்டாயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்.ஒவ்வொரு பிரிவிலும் முதல் ஆறு இடங்களைப் பெறும் சமையற் குறிப்புகள் புத்தகமாக அச்சிட்டு வெளியிடப்படும்.

இந்தப் போட்டியின் வெற்றியாளர்களைத் தெரிவு செய்த மத்தியஸ்தர் குழுவினதும்,உங்கள் உணவைச் சுவைத்த பொதுமக்களினதும் புள்ளிகள் தீர்மானிக்கும். உணவின் சுவைக்கு 20 புள்ளிகள், உணவின் தோற்றத்துக்கு 20 புள்ளிகள்,போசனைப்பெறுமானத்துக்கு 20 புள்ளிகள், மலிவு விலைக்கு 15 புள்ளிகள், தயாரிக்கும் பொருள்களின் கிடைக்கும் தன்மைக்கு 15புள்ளிகள், இலகு செய்முறைக்கு 10 புள்ளிகள் என்ற அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

போட்டி விதிமுறைகளாவன பின்வருமாறு-

பருப்புவகைகள், அவரையினங்களில் பயறு,கௌபி, உழுந்து என்பன, சகல வகையான மரக்கறிகள், மரவள்ளிக்கிழங்கு தவிர்ந்த கிழங்கு வகைகள், இலை வகைகள் யாவும், பலாப்பழம், மாம்பழம், பேரீச்சம்பழம் நீங்கலாக ஏனைய பழவகைகள்,சோயாமீற்,சோயாஅவரை, பால், தயிர், மோர், பன்னீர்,முட்டை,கோழி இறைச்சி என்பன,கடல் உணவுகளில் மீன், இறால், சுறா, கருவாடு போன்றன, வாசனைத்திரவியங்கள் உதாரணமாக, கடுகு, மிளகு, வெந்தயம், சீரகம்,ஏலக்காய், கராம்பு,கறிவேப்பிலை போன்றன மற்றும் நிறமூட்டிகள்,செயற்கைச் சுவையூட்டிகள், உள்ளி, வெங்காயம், மிளகாய், மிளகாய்த்தூள், புளி, எலுமிச்சைப்பழச்சாறு என்பனவற்றையும் தாராளமாகச் சேர்க்கலாம்.

சீனி, சர்க்கரை, பனங்கட்டி, பழப்பாகு, ரின்பால், ஐசிங்சீனி போன்ற இனிப்புப் பதார்த்தங்கள், நண்டு, கணவாய் போன்றன, அரிசி வகைகள் யாவும், மா வுகைகளில் அரிசிமா,ஆட்டாமா, குரக்கன் மா, கோதுமைமா, பட்டர், மாஜரின், நெய், சீஸ் என்பன, ரவை, சவ்வரிசி, நூடில்ஸ் மற்றும் கச்சான், கஜு, பாண்(றஸ்க்தூள் நீங்கலாக) என்பனவற்றை முற்றாகத் தவிர்க்கவேண்டும்.

எண்ணெய் வகைகளில், நல்லெண்ணெய்,சூரியகாந்தி எண்ணெய், தவிட்டு எண்ணெய்(Rice brand oil), Canola oil, ஒலிவ் எண்ணெய் போன்றவற்றை குழைப்பதற்கோ அல்லது tost செய்வதற்கோ பாவிக்கலாம் (பொரிப்பதற்குஅல்ல) தேங்காய்ப்பூ மிகச்சிறியளவில் சேர்க்கலாம்.

இந்தப் போட்டியில் நீங்கள் பங்குபற்ற விரும்பின், நீங்கள் தயாரிக்கும் உணவு மேற்கூறப்பட்ட ஆறு பிரிவுகளில் எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்பதையும்,அதற்கு நீங்கள் சூட்டியுள்ள பெயரையும் குறிப்பிட்டு,தேவையான பொருள்களை பட்டியலிட்டு,உங்களது பெயர்,முகவரி,தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் என்பவற்றை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவம் ஒன்றைத் தயாரித்து எமக்கு அனுப்பிவையுங்கள். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
**“சமையற் போட்டி”**
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
அனுப்ப வேண்டிய முடிவு திகதி-20.08.2012.


நேரில் வருகை தந்து விண்ணப்பிக்க விரும்புவோர் கிழமை நாள்களில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணி வரையும் திறந்திருக்கும் எமது நிலையத்துக்கு வந்து விண்ணப்பிக்கலாம்.

இது தொடர்பான சந்தேகங்கள் இருப்பின் 021-2220179 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் அனுப்பும் விண்ணப்பப் படிவங்கள் பரிசீலிக்கப்பட்டு போட்டி தொடர்பான மேலதிக விவரங்கள் தங்களுக்கு அறியத்தரப்படும்.

ஊடக அனுசரணை:-

உதயன்

(சி/2167)(2-8)



5 மாவட்டங்களிலும் பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# திருவடி நிலை தீர்த்தத்தை புனித இடமாக்குக

சுழிபுரம்,ஓக. 8

சுழிபுரம் திருவடிநிலை வாகை வைரவர் கோயிலடிக் கடற்கரை பொன்னாலை வரத ராஜப் பெருமாள், சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர், முருகன் ஆகிய ஆலயங்களின் தீர்த்தம், ஆடிஅமாவாசைத் தீர்த்தம், பிதிர் கடன் செய்தல் என புனித தீர்த்தக் கரையாக இந்த இடம் பிரசித்தி பெற்று இருந்தது.

இடப்பெயர்வுக்குப் பின்னர் இந்த இடத் தில் கடற்றொழில் செய்பவர்கள் கடலுக்குச் செல்லும் கட்டுமரம் மற்றும் உபகரணங்கள் யாவற்றையும் அங்கு விட்டிருப்பதால் அந்த இடத்தில் தீர்த்தமாடுவதற்கு பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கேட்கின்றனர்.

முன்னர் சுழிபுரம் மக்களின் சுடுகாடு, அத்தியேட்டி மடம் என்பவற்றுக்கு அப்பா லேயே கடற்றொழிலாளர்கள் கடல் தொழில் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (3-28)

# ஆஸ்திரேலியா சென்ற 26 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த மேலும் 26 பேர் நேற்றுமுன்தினம் இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - வாழைச் சேனையில் இருந்து 10-15 கடல் மைல் தூரத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப் பட்டனர் என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா செல்ல பயன்படுத்தப்பட்ட 2 படகு களையும் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் கள் திருகோணமலை பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளனர். (3)

## ஆலய வீதி முகப்பு அலங்கார வளைவு

தொல்புரம் முத்துமாரி அம் பாள் ஆலய முன் வெளிவீதி முகப்பு அலங்கார வளைவு வேலைகள் பூர்த்தியாக்கப் பட்டுள்ளன. அம்பாள், பிள்ளை யார், முருகன் உருவச் சிலை கள்வைக்கப்பட்டுஅழகியமைப் பூச்சுகள் செய்யப்பட்டுள்ளன. ஆலயம் முன்பாகவுள்ள தொல் புரம் வீதிக்கு அருகில் இந்த வளைவு அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (3-28)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு 'கானகதா வாரிதி' பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தி யானந்த சர்மா நிகழ்த்தும் கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் 'காவேரி விநாயகர்' இடம்பெற வுள்ளது. (3)

* * *

துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும் தெய்வீக இசை யரங்கில் பதினாறாம் திருவிழாவான இன்று மாலை 6.30 மணிக்கு யசோதா ஸ்ரீகுமரன், கவிதா தில்லைராசாவின் பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது. பக்கவாத்தியங்களாக வயலின் - கயல்விழி ரகுநாதன், மிருதங்கம்- என். சதீஸ் குமார், கடம்- எ.செல்வரத்தினம். (3-14-86)

* * *

நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு சைவப்புலவர் கா.கமலநாதன் ''கிரியை வழிபாடு'' என்ற கருப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (3)

* * *

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சைவப்புலவர் கமலநாதன் 'கிரியைகளின் பயன்' என்னும் கருப்பொருளில் சொற் பொழிவு நிகழ்த்துவார். தொடர்ந்து சங்கானை மாவடி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை. சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலய அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (3-7-86)

# கிராம அபிவிருத்திச் சங்கம் செயற்பட நடவடிக்கை தேவை

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட குடமியன் கிராம சேவையா ளர் பகுதியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கம் மூன்று வருடங்களாகச் செயற்படா மல் உள்ளது.

கிராம அபிவிருத்திச் சங் கம் செயற்படாமல் உள்ள காரணத்தினால் குடமியன் கிராமசேவையாளர் பிரிவில் எந்தவிதமான அபிவிருத்திபணி களும் நடைபெறவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரி களிடம் எடுத்துக் கூறியும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் மேற் கொள் ளப்படவில்லை.

எனவே இந்தக் கிராம அபிவிருத்திச் சங்கம் இயங் குவதற்கு சம்பந்தப்பட்டவர் கள்பெரிதும்நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (3)

# சமய சந்நிதிகளில்

தொல்புரம் மடத்தடி பிள்ளையார் சுப்பிர மணிய சுவாமி கோயில் வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், 22 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் சங்காபிஷேகமும் நடைபெறவுள் ளன. தினமும் பகல் திருவிழா காலை 9 மணிக் கும் இரவுத் திருவிழா மாலை 6 மணிக்கும் நடை பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (3-28)

* * *

வடமராட்சி வடக்கு கற்கோவளம் அருள் மிகு ஸ்ரீ கும்பி முருகன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார பெருந்திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 16 ஆம் திகதி திருவிளக்கு பூசையும், 20 ஆம் திகதி திங்கட் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (3-253)

# மரண அறிவித்தல்

## திருமதி விக்ரோறியா அருளானந்தம்

(இளைப்பாறிய ஆசிரியை சென்றோக் பாடசாலை, புனித அந்தோனியார் பாடசாலை பாஷையூர்)



திருமதி விக்ரோறியா அருளானந்தம் அவர்கள் 06.08.2012 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் க. அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி யூடித் கிறிஸ்ரி எல்மன் (முன் பள்ளி ஆசிரியை.தி.கு.க.மடம்) அ.யூட் (R.D.O. பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் க.கிறிஸ்ரி எல்மன், திருமதி பிறேமிலா யூட் (முன்பள்ளி ஆசிரியை, கியூ மெடிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆன் சிறோமி, ஜீன்தியோஜினி, வளன் பிரசாத், ஆன் நொயிலின், ஆன்கரோலின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ் சென்றவர்களான திருமதி மேரி மாகிறற் யோசவ், திருமதி கெலன் சூசைப் பிள்ளை மற்றும் அருட் சகோதரி மேரி எல்சி(தி.கு.க.சபை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைத் திருப்பலி இன்று (08.08.2012) புதன் கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ் புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18 ஏ, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

(21467)(5-6-7)




# பழமர நாற்று உற்பத்தியாளருக்கு பயிற்சி வகுப்பும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஓக.8

யாழ். மாவட்ட பழமர உற்பத்தியாளர் களுக்கான நாற்றுமேடை பதிவு செய்தல் தொடர்பான விளக்கமும் பயிற்சி வகுப்பும் விசேட கலந்துரையாடலும் பேராதனை விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை உத்தி யோகத்தர்களால் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 3 மணி வரை திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலை யத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பழமர நாற்று உற்பத்தியா ளர்களும், புதிதாக பழமர நாற்று உற்பத்தியை ஆரம்பிக்க உள்ள நாற்றுமேடையாளர்களும் கலந்து பயன்பெறுமாறு யாழ்.மாவட்ட விதைஅத்தாட்சிப்படுத்தும் சேவையின் நிலையப் பொறுப்பதிகாரி அ.ரமணிதரன் அறிவித்துள்ளார். 2003 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க விதிச் சட்டத்தின் படி பதிவு செய்யப் படாத நாற்று உற்பத்தியை மேற்கொள்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

# அறிவித்தல்

*1929.08.26 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் கந்தப்பர் முத்துக்குமாரு அவர்களால் விந்தாரிக்கப்பட்ட 2066 ஆம் இலக்க உறுதிப்படி யாழ்ப்பாண மாவட்டம், பருத்தித்துறைக் கோயிற்பற்று, தும்பளை இறை ''இலட்சுமாந்தோட்டம்'' நிலப்பரப்பு 26 ½ விஸ்தீர ணம் கொண்ட காணிக்குத் திக்கெல்லை கிழக்கு பிள்ளையார் கோயில், வடக்கு கோயில், வடக்கு கோயில் வீதி, மேற்கு கோயில் வீதி, தெற்கு கோயில் வீதி, அடக்கியுள்ளது. மேற்படி காணி அடைக்குள் சொரியற்பங்கு உள்ளவர்கள், நெல்லண்டை வீதி, தும்பளை, பருத்தித்துறை என்ற முகவரியில் வசிக்கும் சட்டத்தரணி பாலசிங்கம் சுப்பிரமணியம் அவர்களிடம் நேரில், தமது உரிமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் படி வேண்டுகிறேன். பிதாவழி முதுசப்படி எனக்கு மேற்படி ஆதனத்தில் சொரியற்பங்கு உண்டு. எனக்குச் சேரவேண்டிய பங்கில் அபிவிருத்தி செய்யும் நோக்கம் உண்டு. பத்திரிகை விளம்பரத் திகதியிலிருந்து முப்பது நாள் களுக்குள் உரிமை கோரப்படவேண்டு மென்பதை யும் இத்தால் அறியத்தருகிறேன்.*

காளிகோயிலடி,
மாதனை, பருத்தித்துறை.

க. மயில்வாகனம்

*(21461) (6.7.45)*

# நீங்கா நினைவுகளில் ஏழாவது ஆண்டு



*மண்மகிழ*
*02★ 02★ 1977*

*கண்நெகிழ*
*08★ 08★ 2005*

## எமது அன்பு நண்பன் ஆனந்தன்

அறிவுச் சுடர் கொளுத்தும்
ஆங்கில ஆசானாய் இருந்து
அகிலமெங்கும் புகழ் சேர்ப்பான் என்றிருந்த வேளையிலே;
இடியென அச் செய்தி வந்து எம் இதயங்களில் தீமூட்டி
ஏழாண்டு ஆயிற்று; ஆனாலும் அந்த எரிதழலோ தணியவில்லை

சோகக் கடலில் மூழ்கி சோபை இழந்துள்ளோம்
நீதி நிலைக்குமடா; அமரர்களுடன் இருந்து
அறிவாய் நீ அத்தனையும் - சான்றோனே!
ஆண்டாண்டு தோறும் அல்ல - உனை
நாம் மாண்டுபோகும் வரை
மறக்காமல் நினைத்திருப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இடைக்காடு
நண்பர்கள்.

*(21419 (2-7-6)*

# வரணி ம.விக்கு சைக்கிள் பாதுகாப்பு தரிப்பிடம்

வரணி,ஓக .8

வரணி மகா வித்தியாலயத்தில் மாணவர்க ளுக்கான சைக்கிள் பாதுகாப்புத் தரிப்பிடம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. பிரபல சமூக சேவையாளரும்; முன்னாள் வரணி மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கச் செயலாளருமான அமரர் சின்னர் ஆறுமுகம் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகள் மேற்படி சைக்கிள் பாதுகாப்புத் தரிப்பிடத்தை அமைத்துக் கொடுத்துள்ளனர். சுமார் 4 லட்சம் ரூபா செலவில் இந்தத்தரிப்பிடம் அமைக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-122)

# தேவை காஞ்சிர வித்து

காஞ்சிர வித்து (எட்டிக்கொட்டை) காய்ந்து மண்ணில் வீழ்ந்து வீணாகும் காஞ்சிர வித்துக் களை சேகரித்து பயனும், பணமும் பெறலாம்.

மேலும் விவரத்துக்கு:
E.K & Co ஸ்ரீ மகிந்த தர்ம மாவத்தை,
கொழும்பு-09, Tel: 011-2677077

(6.7.10)

# வாகனம் விற்பனைக்கு

**Toyota Hiace (Dolpin) Van, NP GK xxxx**
வருடம் 1996
**More Details** - மனுவகியர் ருவல் ஏசி, கட்டைமொடல், கஸ்ரம் சீற், எவலோவீல்
**தொடர்பு : 077 9908062,**
**077 6652664**

(18173)(6-8)

## பூந்தமல்லி சிறப்பு முகாமில் ஈழத்தமிழ் அகதி பட்டினிப் போராட்டம்



பூந்தமல்லி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழர்களை விடுவிக்க வேண்டும் என்று கோரி ஈழத்தமிழரான செந்தூரன் என்பவர் மேற்படி அகதி முகாமில் காலவரையற்ற உண்ணா நிலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஈழத்தமிழரான செந்தூரன் இதற்கு முன்பு செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தார். அங்கும் உண்ணா நிலை போராட்டத்தில் ஈடுபட்டார். அரசு அவர்களை விடுதலை செய்வதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு முகாமில் உள்ள யாரையும் இதுவரை விடுதலை செய்யவில்லை.

ஒரு மாதத்திற்கு முன்பு கியூ பிரிவுப் பொலிஸ், நான்கு பேரை விடுதலை செய்துவிட்டு மீண்டும் வேறு நான்கு பேரை கைது செய்து முகாமில் அடைத்தது.

செந்தூரன் மிகக் கடுமையாகப் போராடியதால் அவர் பூந்த மல்லி முகாமுக்கு மாற்றப்பட்டார். இந்த முகாமின் தரை சிமெந்தால் பூசப்பட்டுள்ளது. கூரை முழுவதும் கம்பிகளால் அடைக்கப்பட்டுள்ளது. எட்டு பேர்கள் மட்டுமே அடைக்கப்பட்டுள்ள இந்த சிறப்பு முகாமிற்கு 120 பொலிஸார் இரண்டு அடுக்குகளாக காவல் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

சிறைச்சாலையை விட கொடுமையாகப் பராமரிக்கப்படுகிறது இந்த பூந்தமல்லி சிறப்பு முகாம். மரங்கள் பக்கம் கூட இவர்களால் போக முடியாது. கட்டடத்துக்கு உள்ளேயே அடைபட்டு இருக்க வேண்டும். மிருங்கங்கள் கூட இங்கு பல நாள்கள் தங்காது. இதனால் மனம் உடைந்த செந்தூரன், தன்னையும் தன்னோடு முகாமில் உள்ள அனைத்துத் தமிழர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என கால வரையற்ற உண்ணா நிலைப் போராட்டத்தில் இறங்கி உள்ளார்.

தமிழக மக்களும் தமிழக அரசியல் கட்சித் தலைவர்களும் இவருக்கு இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று செந்தூரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)

# ஈழப்பெண்களுக்கு எதிரான கொடுமைகள் குறித்த விவாதம் இன்று சென்னையில்

இலங்கையில் தமிழ் ஈழப் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் பற்றி விவாதிக்க இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் 19ஆவது அகில இந்திய மாநாடு சென்னையில் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 4 தினங்கள் நடைபெறவுள்ளன.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் ஆனிராஜா தெரிவித்ததாவது:-

பெண்களுக்கு எதிரான கொடுமைகள், சமூகத்தில் பெண்களுக்குக் கிடைக்கப் பெற வேண்டிய உரிமைகள் பறிப்பு, பாலியல் குற்றங்கள் உள்ளிட்டவற்றை எதிர்த்து பல்வேறு போராட்டங்களை ஏராளமான இயக்கங்கள் மூலமாக இந்திய மாதர் தேசிய சம்மேளனம் நடத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் 19 ஆவது அகில இந்திய மாநாட்டை சென்னையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மாநாடு சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள பத்மாராவ் மஹாலில் நடைபெறவுள்ளது. மாநாட்டை எங்கள் அமைப்பின் அகில இந்தியத் தலைவர் அருணா ராய் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த மாநாடு இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 11 ஆம் திகதி வரை 4 தினங்கள் நடைபெறவுள்ளது. இதில் 26 மாநிலங்களைச் சேர்ந்த 800 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

பெண்களுக்கு எதிரான் வன்கொடுமைகள் தினமும் அதிகரித்து வருகிறது. உணவுக்கு உத்தரவாதச் சட்டம் கொண்டு வரவேண்டும். பொது நவீன பொருளாதார கொள்கை, கல்வி, சுகாதாரம், தொழில் ஆகியவற்றில் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் மாநாட்டில் விரிவான விவாதம் நடத்தப்படும்.

இது அனைத்து மாநில பிரதிநிதிகள் மூலம் அந்தந்த மாநிலங்களை சென்றடையும்.

மாநாட்டின் ஒரு பகுதியாக நாளை வியாழக்கிழமை ஒரு முக்கிய கருத்தரங்கம் நடைபெற உள்ளது. இதில், இலங்கையில் நடைபெற்ற போர்க் கொடுமையில் ஈழப் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகள், பாலியல் துன்புறுத்தல்கள் பற்றி விவாதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது. இந்தப் பிரச்சினை பற்றி பிரேசிலில் நடைபெற்ற மாதர் தேசிய சம்மேளனக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது-என்றார். (வ)

## தீவுப் பகுதியில் குடிதண்ணீரின்றி அலையும் கட்டாக்காலி கால்நடைகள்

தீவுப் பகுதியில் கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகள் குடிப்பதற்குத் தண்ணீர் இன்றி அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் கடும் வறட்சியால் குளங்கள் மற்றும் நீர் நிலைகளில் தண்ணீர் முழுமையாக வற்றியுள்ளது.

இதனால் அநேகமான கால்நடைகள் குடிதண்ணீர் இன்றி நோய்த் தாக்கத்திற்கும் இலக்காகிக் காணப்படுகின்றன.

அதேபோன்று காரை நகர் பிரதேசத்திலும் கட்டாக்காலியாக நடமாடும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் குடிதண்ணீர் இன்றி மிகுந்த சிரமத்துக்குள்ளாகியுள்ளன.

குடாநாட்டில் கால்நடை வளர்ப்பு அருகிச் செல்லும் இந்தநிலையில் தீவுப் பகுதியில் நடமாடும் கட்டாக்காலி கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் முன்வர வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-17)

## தேருநர் இடாப்புக்களின் திருத்தம் - 2012

1980இன் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய தேருநர் இடாப்புக்களின் திருத்தம் தொடர்பாக, 2012ஆம் ஆண்டில் தேருநர்களைக் கணக்கெடுப்பதற்காக கிராம அலுவலர்கள்/விசேட கணக்கெடுப்பு அலுவலர்கள் மூலமாக அதற்கான தகவல்களை சேகரித்தும் படிவங்கள் வதிவுடன் கூடிய சகல வீடுகளுக்கும் விநியோகிக்கும் பணிகள் 2012 ஜூன் மாதம் 01ஆம் திகதி ஆரம்பமானது. அதற்கிணங்க வதிவுடன் கூடிய அனைத்து வீடுகளுக்கும் தேருநர்களைக் கணக்கெடுக்கும் படிவங்கள் ஏற்கனவே கிடைக்கப்பெற்றிருத்தல் வேண்டும்.

2. 2012ஆம் ஆண்டிற்காக தேருநர்களைக் கணக்கெடுக்கும் படிவமொன்று 2012 ஜூலை மாதம் 30ஆம் திகதி வரையிலும் எவரேனும் ஒரு வாக்காளரின் வீட்டிற்கு கிடைக்கவில்லையாயின் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென தயவன்புடன் அறிவித்துக்கொள்கின்றேன்.

I. கொழும்பு நகரத்திற்கு வெளிப்பிரதேசங்களில் வதியும் பிரதான குடியிருப்பாளர்கள் அவர்களது வீடு அமைந்துள்ள பிரிவின் கிராம அலுவலரை விசாரித்தல் வேண்டும்.கொழும்பு நகரில் வதிகின்றவர்கள் அது தொடர்பாக உதவிப் பதிவு அலுவலர், கொழும்பு மாநகர தேர்தல்கள் அலுவலகம், 395, பழைய கோட்டே வீதி, இராஜகிரியவிற்கு அறிவித்தல் வேண்டும்.

II. கிராம அலுவலரை விசாரித்தும் படிவமொன்று கிடைக்கவில்லையாயின் அது தொடர்பாக அந்தந்த மாவட்டத்தின் உதவிப் பதிவு அலுவலர் தேர்தல்கள் அலுவலகம்............ மாவட்டம், இற்கு தனது முகவரியுடன் கூடிய முழுத் தகவல்களையும் கடிதமொன்றின் மூலமாகவோ தொலைபேசி மூலமாகவோ அறிவித்தல் வேண்டும். இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேர்தல்கள் திணைக்கள இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

III. தேர்தல்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக 'Tell Commissioner' துரித ஈமெயில் சேவைக்கும் உங்கள் கோரிக்கையை/அறிவித்தலை முன் வைக்க முடியும்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2012 ஜூலை மாதம் 30ஆம் திகதி.

தொலைபேசி இலக்கம்: 011-2868441, 42 43
ஈமெயில்: info@slelections.gov.lk
இணைத்தளம்: www.slelections.gov.lk

மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கம்-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு மாநகர பிரதேசம் | 011-2872248 | மாத்தறை | 041-2222305 | குருநாகல் | 037-2222369 |
| கொழும்பு மாவட்டம் | 011-2867471 | அம்பாந்தோட்டை | 047-2220248 | புத்தளம் | 032-2265246 |
| கம்பஹா | 033-2222047 | யாழ்ப்பாணம்/கிளிநொச்சி | 021-2222655 | அநுராதபுரம் | 025-2222551 |
| களுத்துறை | 034-2222266 | மன்னார் | 023-2222289 | பொலன்னறுவை | 027-2222012 |
| கண்டி | 081-2233187 | வவுனியா/முல்லைத்தீவு | 024-2222311 | பதுளை | 055-2222424 |
| மாத்தளை | 066-2222422 | மட்டக்களப்பு | 065-2224312 | மொனராகலை | 055-2276315 |
| நுவரெலியா | 052-2222325 | அம்பாறை | 063-2224342 | இரத்தினபுரி | 045-2222023 |
| காலி | 091-2234028 | திருகோணமலை | 026-2222304 | கேகாலை | 035-2221561 |

(சி/1898)(5-6)

இரண்டாவது பிறந்த தினமும் 45 ஆம் நாள் நினைவு தினமும்

2010.08.08.



2012.06.25.

திருச்செல்வம் கோபிஷா

உணர்வுகள் ஊமையாய் ஊருகின்றன
எங்கள் நினைவுகள் கோபிஷா உங்களை சுற்றியே நித்தமும்
சிறகடிக்கின்றன கோபிஷா உங்கள் சுவடுகள் இந்த மண்ணில்
அழிந்து போனாலும் எங்கள் உயிர் உள்ளவரை கோபிஷா உங்களது
நினைவுகள் எங்களது மூச்சோடு என்றும் கலந்து இருக்கும் உங்கள்
ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கரந்தாய்,
பளை.
அப்பா (திருச்செல்வம், திரு - சாரதி)
அம்மா (மஞ்சுளா) மற்றும் பிரிவால் துயருறும் உறவுகள்
(சி/2171)(6,8)

IELTS
BRITISH COUNCIL

IELTS FOR UK
STUDENT VISA APPLICANTS




சர்வதேச தரம் வாய்ந்த கல்வி
விரிவுரையாளர்கள் IELTS - Teachers Training முடித்து British Council சான்றிதழ்கள் பெற்றவர்கள்
கடந்த பரீட்சைகளில் எமது கல்லூரியிற் படித்துப் பரீட்சை எழுதியவர்கள் Band- 8 வரை பெற்றுள்ளனர்
Grammar & Vocabulary Development முக்கியமாக எமது பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நாங்கள் விசேட கவனம் செலுத்தி மாணவர்கள் நல்ல அறிவு பெற்றுப்பரீட்சை எழுத ஆவன செய்வோம்
Materials approved by British Council which are quite new including Cambridge 8
40 practice test
Free IELTS pack & Mock Exams

27.10.2012
IELTS இல் யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள் நடைபெறும்.
அதற்கு ஆயத்தப்படுத்தும் வகுப்பு



நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து பரீட்சை எடுக்க முடியும்.
IELTS Registration Centre For British Council

| | | |
|---|---|---|
| Course Schedule | Sat & Sun | வகுப்புக்கள் ஆரம்பம் |
| Duration | 10 Weeks | 11.08.2012 |
| Time | 8.30 to 11.30 | |

For registration and further details contact

CITY COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road, Thirunevely.
T.P :- 021 2220381 - 077 8803887,
எமது புதிய கிளை
பலாலி வீதி, உரும்பிராய்.
[உரும்பிராய் பெற்றோல் நிலையத்திற்கு முன்பாக]
(21411)

# 2,262 ஏக். காணியை 'விழுங்கியது' ராணுவம்

## முல்லை. கேப்பாபுலவைச் சேர்ந்த 1,000 குடும்பங்கள் நிர்க்கதி

முல்லைத்தீவு, ஓக. 8

முல்லைத்தீவு, கேப்பாபுலவுப் பகுதியில் பொதுமக்களுக்கு சொந்தமான சுமார் 2ஆயிரத்து 262 ஏக்கர் நிலப்பகுதியை இராணுவம் ஆக்கிரமித்துள்ளமையால் அப்பகுதி மக்கள் மீளக்குடியமர முடியாத நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கேப்பாபுலவு கிராமத்தில் சுமார் ஆயிரம் வரையான குடும்பங்களுக்கு சொந்தமான குடியிருப்புக் காணிகள் மற்றும் விவசாய நிலங்கள் பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலையம் வணக்கத் தலங்கள் என்பன அடங்கலாக உள்ளன.

இந்த நிலப்பரப்பை இலங்கை இராணுவத்தின் 591 ஆவது படைப்பிரிவு முழுமையாக ஆக்கிரமித்துள்ளது.

குறித்த நிலப்பகுதிகளை தமக்கு வழங்குமாறும், அப்பகுதி மக்களுக்கு வேறு இடங்களில் மாற்றுக் காணிகளை வழங்குமாறும் அரச அதிகாரிகளை இராணுவத்தினர் கோரி வருகின்றனர்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் கேம்பாவில், திம்பிலிவில் நலன்புரி நிலையம், மனிக்பாம் நலன்புரி நிலையம் மற்றும் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மக்களின் மீள்குடியமர்வு விடயத்தில் எந்த விதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அரசு இருப்பதால் அந்தப் பகுதி மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

போரினால் அனுபவித்த துன்பங்களை விட பெரும் வாழ்க்கைப் பிரச்சினைக்குள் முகம் கொடுத்திருப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களின் சொந்த நிலங்களை விடுவித்து அந்த பகுதியில் மீள்குடியமர்வை ஏற்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தில் முக்கிய பங்கு அரசு வகிக்குமா என்று எதிர்பார்த்து இருக்கின்றனர்.

போர்முடிவடைந்து 3ஆண்டுகள்கடந்தநிலையில்நிலத்தை அபகரித்துக் கொண்டு இராணுவத்தினர் அந்த மக்களின் சொந்த நிலம் தொடர்பாக எந்தவிதமான சிந்தனையும் இன்றி அரச அதிகாரிகளிடம் மாற்றுக் காணிகளை வழங்குமாறு கூறிவருவதால் அந்தக் காணி தமக்குக் கிடைக்குமா என்ற சந்தேகத்துடன் மக்கள் இருக்கின்றனர்.

இவர்களின் காணி விடயத்தில் இராணுவத்தரப்பும் அரச அதிகாரிகளும் சேர்ந்து ஒரு முடிவு எடுத்து அதே நிலத்தில் தம்மை மீளக்குடியமர்த்துவர்களா என்று கேட்கின்றனர் அந்த மக்கள். (எ-6)

## புதுக்குடியிருப்புப் பகுதியில் 380 குடும்பங்கள் மீள்குடியமர்வு

### ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும்

முல்லைத்தீவு, ஓக. 8

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் 380 குடும்பங்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மற்றும் எதிர்வரும் திங்கட்கிழமைகளில் மீள்குடியேற்றப்படவுள்ளனர்.

இதன் பிரகாரம் நலன்புரி நிலையங்களில் வசிக்கும் 206 குடும்பங்களைச் சேர்ந்த 635பேர் நாளை மறுதினம் புதுக்குடியிருப்பு கிழக்குப் பகுதியிலும், 174 குடும்பங்களைச் சேர்ந்த 569பேர் எதிர்வரும் திங்கட்கிழமை மல்லிகைத் தீவிலும் மீள்குடியேற்றப்படவுள்ளனர்.

மேற்படி மீள்குடியேற்றப்படவுள்ள மக்களுக்கான பதிவுகள் குறித்த தினங்களில் கைவேலி கணேசா வித்தியாலயத்தில் நடைபெற்று பின்னர் அங்கிருந்து அவர்களது சொந்தக் கிராமங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

மேற்படி குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆரினால் தலா இருபதாயிரம் ரூபா பணம் மற்றும் உணவு நிவாரணப் பொருள்களும் வழங்கி வைக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட புனர்வாழ்வுப் பணிப்பாளர் திருமதி. ஏ. கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (16-400)

## முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல்

யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

உலக உணவுத் திட்டத்தின் கீழான பொருள்கள் விநியோகம் மற்றும் பொருள்களின் விலைகள் குறித்த பட்டியலை இந்தக் கலந்துரையாடலில் சமர்ப்பிக்குமாறும் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் கேட்டுள்ளார். (த-17)



அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு கொழும்பு பொது நூலகத்தில் நேற்று நடத்திய நிகழ்வின் போது.

## விபத்தில் காயமடைந்த இளைஞன் மரணம்

வவுனியா ஓக. 8

வவுனியாவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சை பயனின்றி நேற்று மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் ஸ்ரீராமபுரம், மகாறம்பைக் குளத்தைச் சேர்ந்த கந்தசாமி - மதுசன் (வயது-20) என்ற இளைஞனே மரணமானவர் ஆவார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கடந்த ஞாயிற்றுக்கிழமை மோட்டார்சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞன் காமினி மகாவித்தியாலய பகுதியில் உள்ள மின்கம்பத்துடன் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இவர் சிகிச்சை பயனின்றி நேற்று இறந்துள்ளார். (16-400)

## வாள் வெட்டுக்கு இலக்கான தாயும் மகனும் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஓக. 8

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் தாயும் மகனும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் சுழிபுரம் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுழிபுரம் பத்திரகாளி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவரஞ்சன் (வயது -32) மற்றும் அவரின் தாயாரான சுப்பிரமணியம் நாகரத்தினம் (வயது-62) என்ற இருவரும் தலை மற்றும் கைகளில் வெட்டுப்பட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

குறித்த குடும்பஸ்தர் காதல் திருமணம் செய்து வாழ்ந்து வருவதாகவும் கடந்த சனிக்கிழமை இரவு வீட்டுக்குள் புகுந்த இவரது உறவினர் ஒருவரே கூரிய ஆயுதத்தால் தன்னையும், தனது தாயாரையும் வெட்டிக் காயப்படுத்தியதாக அவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16)

## வவுனியா பாதயாத்திரைக் குழு சனி புறப்படுகிறது நல்லூருக்கு

நெளுக்குளம் , ஓக. 8

நல்லூர்க் கந்தனை நாடி வவுனியாவில் இருந்து வருகின்றனர் பாதயாத்திரைக் குழுவினர் .

நல்லூர் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வவுனியா வேப்பங்குளம் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இருந்து எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து யாத்திரை ஆரம்பமாகும் என்று ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர்.

வவுனியா வேப்பங்குளம் காளியம்பன் சாமியம்மா அறநெறிச்செல்வி கு. ஜெயராணி தலைமையில் பக்தர்களின் வேல் தாங்கிய யாத்திரைப் பவனி ஏ 9 வீதியை அடைந்து நான்கு நாள்கள் பயணித்து 15 ஆம் திகதி நல்லூர் ஆலயத்தைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

**பக்தர்களின் வேல் தாங்கிய யாத்திரைப் பவனி ஏ 9 வீதியை அடைந்து நான்கு நாள்கள் பயணித்து 15 ஆம் திகதி நல்லூர் ஆலயத்தைச் சென்றடையும்**

வவுனியாவில் இருந்து பாதயாத்திரை செல்லும் குழுவினர் வழியிலுள்ள ஆலயங்களைத் தரிசித்தவாறு பயணத்தைத் தொடர்வர்.

இந்தப் பாதயாத்திரையில் கலந்து கொள்வோர், வேப்பங்குளம் பத்திரகாளி அம்மன் ஆலயநிர்வாகத்தினரை அணுகுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-402)

## 'வாகனங்களைப் பார்வையிடலாம்'

முல்லைத்தீவு, ஓக. 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் போர் நடவடிக்கைகளின் போது கைவிடப்பட்ட வாகனங்களைப் பார்வையிட வேண்டிய உரிமையாளர்கள் மற்றும் பார்வையிட்டு அந்த வாகனங்கள் இருப்பதாக உறுதிப்படுத்திக் கொண்ட உரிமையாளர்கள் வாகனத்துக்கான ஆவணங்களை பொலிஸ் அறிக்கையுடன் மாவட்ட செயலகத்தில் சமர்ப்பித்து வாகனங்களை பார்வையிடல் மற்றும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இதன்படி இன்று தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதி வரை மாவட்ட செயலகத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளார். (எ)

## துணுக்காயில் 20 கி.சே. பிரிவுகளில் 3,521 குடும்பங்கள் மீளக் குடியமர்வு

வவுனியா , ஓக. 8

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 20 கிராம சேவையாளர் பிரிவில் 3 ஆயிரத்து 052 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 955 பேர் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இறுதிக் கட்டப் போரினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கி இருந்தவர்களே கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை மீளக்குடியமர்த்தப்பட்டனர் என்று முல்லைத்தீவு மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

துணுக்காயில் 189 குடும்பங்களைச் சேர்ந்த 521 பேரும், மல்லாவியில் 267 குடும்பங்களைச் சேர்ந்த 888 பேரும், கல்விளானில் 190 குடும்பங்களைச் சேர்ந்த 618 பேரும், உயிலங்குளம் பகுதியில் 91 குடும்பங்களைச் சேர்ந்த 276 பேரும், யோகபுரம் மேற்கில் 146 குடும்பங்களைச் சேர்ந்த 421 பேரும், யோகபுரம் மத்தியில் 191 குடும்பங்களைச் சேர்ந்த 569 பேரும், திருநகரில் 181 குடும்பங்களைச் சேர்ந்த 495 பேரும், புத்து வெட்டுவானில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 250 பேரும் அமைதிபுரத்தில் 107 குடும்பங்களைச் சேர்ந்த 377 பேரும், அம்பலப்பெருமாள் பகுதியில் 92 குடும்பங்களைச் சேர்ந்த 302 பேரும் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

மேலும் ஆலங்குளத்தில் 185 குடும்பங்களைச் சேர்ந்த 545 பேரும், தேறாங்கண்டலில் 236 குடும்பங்களைச் சேர்ந்த 829 பேரும், யேகபுரத்தில் 120 குடும்பங்களைச் சேர்ந்த 404 பேரும், புகழேந்தி நகரில் 162 குடும்பங்களைச் சேர்ந்த 474 பேரும், பாரதி நகரில் 222 குடும்பங்களைச் சேர்ந்த 648 பேரும், அனிச்சாம குளத்தில் 584 குடும்பங்களைச் சேர்ந்த 1719 பேரும், தென்னியன்குளத்தில் 114 குடும்பங்களைச் சேர்ந்த 385 பேரும், பழைய முறிகண்டியில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 146 பேரும், ஐயன்கன் குளத்தில் 209 குடும்பங்களைச் சேர்ந்த 703 பேரும் கோட்டைகட்டிய குளத்தில் 110 குடும்பங்களைச் சேர்ந்த 385 பேரும் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். (எ- 400)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.8

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வருடந் தோறும் நடத்தும் விளையாட்டு விழாவில், ஓர் அங்கமான யாழ். மாவட்டத்தின் முன்னணி நட்சத்திர விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் லீக் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு -

பிற்பகல் 3.30 மணி

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழகம்

பிற்பகல் 4.30 மணி

வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் மணற்காடு ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்.

(ஙு-23)

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 4 மணி

மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் மைக்கல் விளையாட்டுக் கழகம்.

* * *

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் எதிர் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் எதிர் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம்.

* * *

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 3.30 மணி

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக ''பி'' அணி எதிர் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம்.

பி.ப 4.30 மணி

நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக ''ஏ'' அணி எதிர் மயிலங்காடு ஞானமுருகன் ''பி'' அணி. (ஙு-23)




வடமாகாண விளையாட்டுத்திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய வலைப்பந்தாட்டப் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கிளிநொச்சி மாவட்ட வீராங்கனைகளுடன் வட மாகாண விளையாட்டுத்திணைக்களப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர் சதானந்தன் மற்றும் பயிற்றுவிப்பாளர். (ஙு-86)

# நாமகள் வெற்றிக்கிண்ண ஆட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக.8

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய தினங்களில் நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு-

ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் ''பி'' அணி மோதிக் கொண்டது. இதில் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் ''பி''அணியை எதிர்த்து குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக ''பி'' 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

திங்கட்கிழமை இடம் பெறவிருந்த ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் ''ஏ'' அணியும், காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக் கழகமும் மோதவிருந்தன. எனினும் போட்டி நேரத்தில் காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக்கழக வீரர்கள் மைதானத்துக்கு சமுகம் தராமையினால் மயிலங்காடு ''ஏ '' அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. தொடந்து இடம் பெறவிருந்த இளவாலை யங்ஹென்றிஸ் அணிக்கும் காக்கைதீவு ஆதவன் ''ஏ'' அணிக்கும் இடையிலான ஆட்ட நேரத்தின் போதும், காக்கைதீவு ஆதவன் ''ஏ'' அணி மைதானத்துக்கு சமுகம் தராமையினால் இளவாலை யங்ஹென்றிஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

(ஙு-23)

## மைக்கல் வி.க. உதைபந்து
# வதிரி டைமன்ஸ் கோல் மழை

யாழ்ப்பாணம், ஓக.8

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் நடத்தும் விளையாட்டு விழாவில், ஓர் அங்கமான யாழ். மாவட்டத்தின் முன்னணி நட்சத்திர விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு-

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்துமணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்மோதிக்கொண்டது. இதில் அபாரமாக ஆடிய வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் கோல் மழை பொழிந்தது. ஆட்ட நிறைவில் அந்த அணி 9:4 என்ற கோல்கணக்கில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தியது.

இரண்டாவதாக இடம் பெற்றஆட்டத்தில்நவிண்டில் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழககம் மோதிக் கொண்டது . இரண்டு அணியினரும்ஆட்டநேர முடிவில்தலா 3 கோல்களைப் பெற்றதினால்ஆட்டம்சமநிலையில் முடிவடைந்தது. (ஙு-23)

# வெண்றன ஸ்ரார், இந்து அணிகள்


கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாணத்துக்குட்பட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றியீட்டிய அணிகளின் விவரம் வருமாறு-

முதலாவது ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதிக்கொண்டது.

3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 25:16, 25:19 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றது.

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகத்துக்கும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெறவிருந்த ஆட்டத்தின்போது நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மைதானத்துக்கு சமுகம் தராமையினால் ஆவரங்கால் இந்து இளைஞர் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ஙு-23)

# தேசிய கூடைப்பந்தாட்டப் போட்டி ஆரம்பம்



தேசியமட்டக் கூடைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் இடம்பெறவுள்ளன.

தேசிய மட்டப் போட்டிகளில் ஆண், பெண் இருபாலருக்குமான பிரிவுகளில் வடமாகாண அணி சார்பாக யாழ். மாவட்ட அணி பங்குபற்றவுள்ளது. ( ஙு-23)



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுப்பிரிவு பெண்களுக்கான சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டிய உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகள் வடமாகாண உதவிக்கல்விப்பணிப்பாளர் கே. சத்தியபாலன், ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுநர்களுடன். (ஙு-253)

# ஒற்றுமை, ஐக்கியம் கொலின்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.8


பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித்தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு -

முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியும், தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழக அணியும் மோதிக்கொண்டன. இந்த ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுகழக அணி அபாரமாக ஆடி 8:0 என்ற ரீதியில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்துள்ளது.

இரண்டாவதாகஇடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியும், நியூட்டன் விளையாட்டுக் கழக அணியும் சந்தித்துக் கொண்டன.பரபரப்பான இந்த ஆட்டத்தில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோல்களினைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் 5:3 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம் பெற்ற ஆட்டத்தில் கலட்டி ஐக்கியம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது. இதில் கலட்டி ஐக்கியம் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ஙு-23)

# நான் ஜாம்பவான் அல்லன்




நான் இன்னமும் ஒலிம்பிக் ஜாம்பவான் என்ற நிலையை அடைந்துவிடவில்லை. 200 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் நான் வெற்றிபெற்றாலே என்னால் அந்த நிலையை அடைந்துகொள்ள முடியும் என்று உலக சாதனையாளர் உசைன் போல்ட் தெரிவித்துள்ளார்.


நேற்று அதிகாலை நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டத்தில் ஒலிம்பிக் சாதனை படைத்து முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட உசைன் போல்ட், 9.63 செக்கன்களில் அதை ஓடி முடித்திருந்தார்.

அண்மைக்காலமாக தனது முழுமையான திறனை உசைன் போல்ட் வெளிப்படுத்தியிருக்காத நிலையில் அவர் மீது சந்தேகங்கள் காணப்பட்டிருந்தன. அவரை விட அவருக்கு அண்மைக் காலமாக அதிக அழுத்தத்தை வழங்கி அவரைத் தோற்கடித்துமிருந்த சக ஜமைக்கரான யோஹன் பிளேக்கிற்கு அதிக வாய்ப்புக்கள் இருப்பதாக சில கருத்துக்கள் எழுந்திருந்தன.

ஆனால் 100 மீற்றர் போட்டியில் இலகுவாக வெற்றிபெற்ற உசைன் போல்ட், இந்தப் போட்டியில் நான் வெற்றிபெற்றதன் மூலம் ஒலிம்பிக் ஜாம்பவான் என்ற நிலைக்கு அண்மித்துள்ளதாகவும், எனினும் 200 மீற்றர் இன்னமும் உள்ள நிலையில் அதில் வென்று காட்ட வேண்டியுள்ளதாக உசைன் போல்ட் தெரிவித்தார்.

தனது போட்டியாளரான யோஹன் பிளேக்கிற்கும் 200 மீற்றர் குறித்துக் கருத்துக்களைத் தெரிவித்ததாகத் தெரிவித்த உசைன் போல்ட், 200 மீற்றர் போட்டிகள் தனது செல்லப் போட்டிகள் எனவும், அதில் தன்னைத் தோற்கடிக்க யோஹன் பிளேக்கை விடப்போவதில்லை என்று அவருக்குத் தெரிவித்ததாகவும் கூறினார். (5)

## அள்ளிச் செல்கிறது சீனா



லண்டன் ஒலிம்பிக்கில் மகளிருக்கான 3 மீற்றர் 'ஸ்பிரிங் போர்ட்' பல்டியில் சீன வீராங்கனைகள் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக்கில் 3 மீற்றர் 'ஸ்பிரிங் போர்ட்' பல்டியின் இறுதிப் போட்டி அக்குவாடிக் சென்டரில் நடைபெற்றது.

இதில் சீன வீராங்கனையான வு மின்க்சியா உள்நோக்கி பல்டி அடித்து 414 புள்ளிகள் பெற்று தங்கப் பதக்கம் வென்றார். மற்றொரு சீன வீராங்கனையான ஹெ ஜி 379 .20 புள்ளிகள் பெற்று வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

மெக்ஸிகோவின் லாரா சான்செஸ் 362 .40 புள்ளிகள் எடுத்து வெண்கலப் பதக்கத்தை பெற்றார். (5)

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

07.08.2012

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 33 | 20 | 14 | 67 |
| அமெரிக்கா | 29 | 15 | 20 | 64 |
| பிரிட்டன் | 19 | 12 | 12 | 43 |
| தென்.கொரியா | 11 | 5 | 6 | 22 |
| பிரான்ஸ் | 8 | 9 | 10 | 27 |
| ரஷ்யா | 7 | 17 | 18 | 42 |
| இத்தாலி | 7 | 6 | 4 | 17 |
| கஜகஸ்தான் | 6 | 0 | 1 | 7 |
| ஜேர்மனி | 5 | 11 | 7 | 23 |
| நெதர்லாந்து | 4 | 3 | 4 | 11 |



## தடை தாண்டியது கென்யா

லண்டன் ஒலிம்பிக் தடைதாண்டி ஓடும் போட்டியில் 3000 மீற்றர் பிரிவில் கென்ய வீரர்கள் தங்கம் மற்றும் வெண்கலப்பதக்கங்களை வென்றனர்.

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான 3000 மீற்றர் தடைதாண்டி ஓடும் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கென்யா வீரர் இசக்கியேல் கெம்போய் 8.18.56 நிமிடங்களில் குறிப்பிட்ட தூரத்தைக் கடந்து முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றார்.

அவரை தொடர்ந்து வந்த பிரான்ஸ் வீரர் மகிஎன்டைன் 8.19.8 நிமிடங்களில் பந்தய தூரத்தை கடந்து வெள்ளிப் பதக்கத்தையும், கென்யாவின் மற்றொரு வீரரான கிப்ராப் முட்டாய் 8.19.73 நிமிடங்களில் கடந்து வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர். (5)

# 'ரி-20' இந்தியா வெற்றி


ஆட்டநாயகனாக ஹோக்லி தெரிவானார்.

இந்திய அணி இலங்கையுடனான 'ரி-20' ஆட்டத்தையும் விட்டு வைக்காது வெற்றி கொண்டது. சகலதுறை ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய அணி 39 ஓட்டங்களால் இலங்கை அணியை வெற்றி கொண்டது. இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி ஒரு நாள் தொடரை வெற்றி கொண்டுள்ள நிலையில், நேற்றைய 'ரி-20' ஆட்டத்தில் விளையாடியது. பள்ளேகலவில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

கம்பீர், ரஹானே ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கியது. இரண்டாவது பந்துப் பரிமாற்றத்தை வீசிய எரங்க 'ரி-20' அரங்கில் தனது முதலாவது பந்துப் பரிமாற்றதிலேயே முதலாவது இலக்கையும் சரித்தார். கம்பீரை 6 ஓட்டங்களுடன் பவிலியனுக்கு அனுப்பியதன் மூலம் தனது முதலாவது சர்வதேச இலக்கைக் கைப்பற்றினார்.

இலங்கை அணி ஆரம்பத்திலேயே இந்திய அணியின் இலக்கை கைப்பற்றிய நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்குள் வில்லங்கம் ஹோக்லி வடிவில் நுழைந்தது. பவர்பிளே பந்து வீச்சை பதம் பார்த்த ஹோக்லி தனது அதிரடி வேட்டையை நேற்றைய தினமும் தொடர்ந்தார். இலங்கையின் பந்து வீச்சு வியூகங்கள் தகர்த்தெறியப்பட்டு ஓட்டங்கள் தொடர்ச்சியாக வேகமாகக் குவிக்கப்பட்டது,

ஹோக்லி 32 பந்துகளில் தனது முதலாவது 'ரி-20' அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். மறுமுனையில் துடுப்பெடுத்தாடிய ரஹானே இலங்கையின் சுழலில் சற்றுத் தடுமாறி வீழ்ந்தார். ஜுவன்மெண்டிஸின் பந்து வீச்சில் ரஹானே 21 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். தொடர்ந்து ரெய்னா களமிறங்கினார். இலங்கையின் சுழல் பந்து வீச்சாளர்களால் நீண்ட நேரத்துக்கு இந்திய அணியின் ஓட்ட வேகத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

ரெய்னாவும் அதிரடியாக துடுப்பெடுத்தாட இந்திய அணி வலுவான நிலையை நோக்கிச் சென்றது.

17 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் ஹோக்லி 48 பந்துகளில் 68 ஓட்டங்களுடன் எரங்கவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து இந்திய அணியின் ஓட்ட வேகம் இலங்கை அணியால் கட்டுப்படுத்தப்பட்டது. டோனியாலும் இறுதியில் அதிரடியாக துடுப்பெடுத்தாட முடியாது இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 155 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. ரெய்னா 25 பந்துகளில் 34 ஓட்டங்களையும், டோனி 14 பந்துகளில் 16 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் இலங்கை சார்பில் எரங்க 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

156 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு இலங்கை அணி களமிறங்கியது. மஹேல - டில்ஷான் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கியது. பதான் வீசிய முதலாவது பந்திலேயே மஹேல பவுண்டரியுடன் கணக்கை தொடங்கிய போதும் ஐந்தாவது பந்தில் டில்ஷான் டக் அவுட்டாகி வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த தரங்கவும் 5 ஓட்டங்களுடன் பதானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேற இலங்கை அணி ஆரம்பத்திலேயே ஆட்டம் கண்டது.

இருப்பினும் மஹேல ஜெயவர்தன அதிரடியில் போட்டுத் தாக்கினார். நீண்ட நேரத்துக்கு மஹேலவின் ஆட்டமும் நீடிக்கவில்லை. பதானின் மூன்றாவது பந்துப் பரிமாற்றத்தில் மஹேல 19 பந்துகளில் 26 ஓட்டங்களுடன் சர்சைக்குரிய எல்.பி.டபிள்யூவில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் திரிமன்னே, மத்தியூஸ் ஜோடி இணைந்து துடுப்பெடுத்தாடியது. இருவரும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி இலங்கை அணியின் ஆரம்ப இழப்புக்களை சரிக்கட்டினர்.

நான்காவது இலக்குக்காக 33 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் திரிமன்னே 20 ஓட்டங்களுடன் அஸ்வினின் சுழலில் ஆட்டமிழந்தார். 9.1 பந்து வீச்சுக்களில் இலங்கை 68 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறியது.

தொடர்ந்து நுழைந்த ஜுவன் மெண்டிஸ் மத்தியூஸுடன் இணைந்து ஆட இலங்கை அணி மீண்டும் சிறப்பாக முன்னேறியது. சீரான வேகத்தில் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது. இருப்பினும் 13 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 96 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 5 ஆவது இலக்கு வீழ்த்தப்பட்டது. மத்தியூஸ் 31 ஓட்டங்களுடன் டின்டாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஜுவன் மெண்டிஸும் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 100 ஓட்டங்களுக்கு இலக்குகளை இழந்தது. இலங்கையின் இறுதி நம்பிக்கை அதிரடி நட்சத்திரமான பெரேரா ஓர் ஓட்டத்துடன் ரன் அவுட்டாக இலங்கையின் வெற்றி வாய்ப்பு தகர்ந்தது. சந்திமால் 7, அறிமுக வீரர் எரங்க 6, மலிங்க 0 ஓட்டங்களுடன் வெளியேற இலங்கை அணி 18 பந்துப் பரிமாற்றங்களில் 116 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் டின்டா 4, பதான் 3 இலக்குகளையும் கைப்பற்றினர். (5)

## தேவை

யாழ் நகரில் உள்ள பிரபலமான நிறுவனத்திற்கு Clerk (எழுது வினைஞர்) தேவை. O/L சித்தி, யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

0778418344

(பி.ப. 6 மணிக்கு முன்)

(21418) (15-08)

## Galaxy Cabs

Call us 021-3201201

சுற்றுலா திருமண மற்றும் நாளாந்த தேவைகளுக்கும் AC, NonAC Van,Car சேவைகள் Km மற்றும் மணித்தியால அடிப்படையில் Airport trit 35/= Per Km.

## சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் தேவை

மாத ஊதியம் : Rs. 20,000

ஊக்குவிப்பு : 10%

இன்று அல்லது நாளை காலை 10.00 மணிக்கு சுயவிபர கோவையுடன் நேரில் வரவும்

MyWay. 180, Stanley Rd, Jaffna

077 520 2747 (21436)

## வாடகைக்கு



ஆசிர்வாதம் கட்டடத் தொடர், கடை வியாபாரம் செய்வதற்கும் குடியிருப்பதற்கும் பொருத்தமான சகல வசதிகளுடன் கூடிய அடித்தளத்திலும் மாடியிலும் கட்டடங்கள், வீடுகள் முல்லைத்தீவில் உண்டு.

தொடர்புகளுக்கு:- பிறிட்ஜெற் சசி அன்ரன் T.P. 0770212385 / 021 2290106. அன்ரன் – 0770397627. Email:- bridget.anton@gmail.com


# உபாதையால் சகிப் 'அவுட்'



பங்களாதேஷ் அணியின் நட்சத்திர சகலதுறை வீரர் சகிப் அல் ஹசன் இந்த ஆண்டுக்கான ஸ்ரீலங்கா பிரீமியர் லீக் போட்டிகளில் பங்குபற்ற மாட்டார் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அவருக்கு ஏற்பட்டுள்ள முழங்கால் உபாதை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அவரது இடது முழங்காலில் உபாதை ஏற்பட்டுள்ளதன் காரணமாக அது குணமாகும் வரை போட்டிகளில் பங்குபற்ற வேண்டாம் என்று அணியின் உடற்கூற்று நிபுணர் அறிவித்துள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் ஊடக முகாமையாளர் ரபீட் இமாம் தெரிவித்தார். அவருக்கு சிகிச்சையும், ஓய்வும் தேவைப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பிரீமியர் லீக் தொடரில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உத்துர ருட்ராஸ் அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்ற சகிப் அல் ஹசன் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இந்த அணியின் தலைவராக முத்தையா முரளிதரன் செயற்படவுள்ள போதிலும், சகிப் அல் ஹசனின் தலைமைத்துவமும் அந்த அணிக்கு முக்கியமாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சியாக இரண்டாண்டுகளாகக் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றிவந்த சகிப் அல் ஹசன், இந்த ஆண்டு இடம் பெற்ற ஐ.பி.எல். போட்டியிலும் பங்குப்பற்றியிருந்தார். இந்த ஆண்டு சம்பியன் பட்டம் வென்றிருந்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் சார்பாகப் போட்டியில் பங்குபற்றியிருந்த அவர், கிடைக்கப் பெற்ற வாய்ப்புக்களில் மிகச்சிறப்பாகப் பிரகாசித்திருந்தார்.

பங்களாதேஷ் அணி சார்பாக சகலதுறைப் பெறுபேறுகளை வெளிப்படுத்துவதில் வல்லவரானசகிப் அல் ஹசன், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான சகலதுறை வீரர்களின் தரப்படுத்தலில் முதலிலிடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(5)


## S.L.A.S (திறந்த) நேர்முக பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

August 14ல் நடைபெறவுள்ள S.L.A.S (திறந்த) நேர்முக பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் Aug-11 பொரளை Y.M.C.E மண்டபத்தில் 9A.M-3P.M வரை சிங்கள மொழிமூல விரிவுரையாளர்களால் தமிழ்மொழி மூல விளக்கங்களுடன் நடைபெறவுள்ளது.

தொடர்புகளுக்கு P.உமாசங்கர் T.P-0718130390

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் T.P-021 2226693, 021 222 1637, 077 650 5036.

(அ2175)(6.7.9)





"கல்வியே உண்மையான செல்வம்"

## "ஏ + அக்கடெமி"

### ஆசிர்வாதம் கட்டடத்தொடர்

(யூதா கோவில் முன்பாக, செல்வபுரம், கடற்கரை வீதி, கோவில் குடியிருப்பு)

முல்லைத்தீவு

## புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

கணினி, தமிழ், சிங்கள, ஆங்கில வகுப்புக்கள், சிறுவர்களுக்கான, பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புக்களும், தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படவுள்ளது. இலகுவான முறையில் சிறப்பாக கற்றுக்கொள்ளக்கூடியதாக பாடக் கையேடுகள் தயாரித்துக் கொடுக்கப்படும்.

வகுப்புக்கள் அனைத்தும் கடந்த 01.08.2012 அன்று முற்பகல் 11.00 மணிக்கு ஆரம்பமாகியுள்ளன. கற்றுப் பயன்பெறவிரும்பும் மாணவர்கள் வருகைதந்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-

பிறிட்ஜெற் சசி அன்ரன். 0770212385/ 021-2290106

| | |
|---|---|
| K.அன்ரன் | 0770397627 |
| K.J.பவானி | 0773440540 |
| J.றாஜா | 0772670375 |
| S.அருணன் | 0772661496 |
| A.ஆனந்த் | 0773287547 |

Email:-bridget.anton@gmail.com

(21341)(2-6-7)

## சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

A1-Exam திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்களுக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சை எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும். Rs. 6000 only

City & Guilds ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

B1-Exam Student Visa மூலம் London செல்வதற்கான ஆங்கில பரீட்சை. City & Guilds

IELTS 50% off on Total Course fee

veta Spoken English

SMS Your Name & Address get Scholar ship - 777 577333

(அ/2139)

## DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403 |
| நெல்லியடி | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.: 021-2262470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, (HNB அருகில்) Tel.: 021-2270243 |
| சுன்னாகம் | K. K. S வீதி. NSB வங்கி அருகில். Tel.: 021-224 1970 |

## உடனடி வேலைவாய்ப்பு

பிரபல நிறுவனமொன்றின் பொதுமுகாமையாளரின் செயலாளராக கடமையாற்றக்கூடிய தகுதியும், திறமையும், முன் அனுபவமுள்ள பின்வரும் தகைமையுடைய பெண் எழுதுனர் பதவிக்கு பொருத்த மானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கல்வி- O/L, A/L சித்தி, ஆங்கில அறிவு
- கணினி அறிவு- INTERNET, E.mail; ஆங்கிலத்திலும் தமிழிலும் கணினியில் வேலைசெய்யத்தெரிந்திருத்தல்
- போட்டோக்கொப்பி இயந்திரம், பக்ஸ் மெசின் ஆகியவை கையாளத் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தகுதியுடையோர் இன்று (08.08.2012) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பின்வரும் விலாசத்தில் நேர்முகப்பரீட்சைக்கு உரிய ஆவணங்களுடன் சமுகம் தரவும்.

பொது முகாமையாளர்
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(அ/2165) (15-08)

## வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்கான செய்முறைப் பயிற்சி வகுப்புக்கள்

(SLMC - External Pharmacist Practical Classes)

இவ்வாண்டு நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் எமது நிறுவனத்தில் நடைபெறவுள்ளதால் இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளவிரும்பும் மாணவர்கள் உடன் எமது நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

குறிப்பு :இப் பயிற்சி வகுப்பில் வேறு நிறுவனங்களில் கற்றுக் கொண்டிருப்போரும் இணைந்து கொள்ளலாம். இத்துறையில் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும். (அ)

Contact :- UNI - ICT CAMPUS
No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 321 6433 / 0777 110 862

## SPOKEN ENGLISH

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர், A/L எடுத்த மாணவர், இளைஞர், யுவதிகளுக்கு

### புதிய பிரிவு ஆரம்பம்

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 08.08.2012

| | |
|---|---|
| பிரிவு 1 : காலை 9 – 10 | பிரிவு 2 : காலை 10 – 11 |
| பிரிவு 3 : மாலை 3 – 4 | பிரிவு 4 : மாலை 5 – 6 |

(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)

கட்டணம் : ரூபா 3000 காலம் : 1 – 3 மாதம்

பயிற்சியின்போது 40 புத்தகங்கள் மற்றும் 1 DVD உம் பயிற்சி முடிவில் 50 மணிநேர DVD உம் இலவசம்

முதல் நாள் வகுப்புக்கு அனுமதி, பயிற்சி புத்தகம், DVD மற்றும் சான்றிதழ் முற்றிலும் இலவசம்

(21424)

MyWay 182, Stanley Rd, Jaffna 077 520 2747

## நியூசிலாந்து குடும்ப விசா தற்போது இலகுவான நிபந்தனைகளுடன் சாத்தியமாகிறது ஆசிரியர்களுக்கும் ஏற்புடையது.

சர்வதேச விசா ஆலோசனை விற்பன்னர்களுடன் வியாபார ரீதியான சகவாசம் நாம் வைத்துள்ளமையால் இது சாத்தியமாகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து மூளைசாலிகள் வெளியேற்றம் சமூக நோக்கில் பாரதூரமானதென்பதால் ஆசிரியர்கள் குறைந்தளவே இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

- கணவன் அல்லது மனைவி பட்டதாரிகள் அல்லது டிப்ளோமாதாரிகள்
- எந்த துறையிலும் ஆங்கில மூலம் பட்டப்படிப்பை மேற்கொண்டு இருந்தால் IELTS தேவை இல்லை அல்லது 6.0 புள்ளிகள் IELTS அவசியம்
- ஆசிரியர்களுக்கு கட்டயமாக IELTS 6 புள்ளிகள்
- வங்கி உத்தரவாதம் 10 லட்சம் போதுமானது
- தாம் கற்றதுறையில் மூன்று வருட தனியார்துறை தொழில் அனுபவம்
- சட்டரீதியான விசா ஆலோசனைக்கு விரைந்து வாருங்கள்

(21421)(6.8)

காலை 7 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

### திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி : 021 221 9016




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புயலும்
அமைதியும்
அமைந்ததே
வாழ்க்கை
-சுதர்சன்-

# புதன் பொய்கை A

உதயன் 08 ஒகஸ்ட் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# ஆபத்து நெருங்குகிறது...



துன்னாலைச் செல்வம்

சர்வதேசத்திடம் சிக்குண்ட இலங்கைக்கு அதில் இருந்து தப்பிக்க வழிதெரியாமல் வீரம் பேசுகின்றது. எதிர் எதிராக இருக்கும் ஒவ்வொரு நாட்டுடனும் நட்புக்கொண்டு தனது இராஜதந்திர நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என பகல் கனவு காணுகிறது இலங்கை அரசு. விடுதலைப் புலிகளினுடனான போரை விட பெரும் ஆபத்தான வலையில் சிக்கிக் கொண்டுள்ளது. அதில் இருந்து விடுவிக்க முடியாமல் வழி தெரியாமல் இருந்தும் வெளியே காட்டாமல் வீர வசனம் பேசுகின்றது. விடுதலைப் புலிகளை அழிக்க உதவி செய்த நாடுகளே இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் போது தவறுகளை மூடி மறைப்பதற்கு எடுத்த முயற்சிகள் பயன் இன்றி அதன் செயற்பாடுகளின் கனம் குறைவடைந்து செல்கிறது.

ஈழப் போராட்டம் மூன்று தசாப்த காலம் இடம்பெற்றுள்ளது. இந்தப் போராட்டத்தில் பங்கு கொண்டு ஆயுதம் தூக்கி போராடியவர்கள் விதையானார்கள் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்ட போது தான் ஒரு இனம் மறு இனத்தை அழித்த வரலாறு இலங்கையில் நடந்துள்ளது. இதனால் தான் இலங்கை அரசு ஆயுதப் போரில் வென்றாலும் ஜனநாயகப் போரில் வெல்ல முடியாமல் போனது. ஆயுதம் தூக்கிய போரை விட இந்தப் போரினை தாக்குப் பிடிக்க முடியாமல் இலங்கை அரசு தட்டுத் தடுமாறுகிறது. இதனைக் காரணம் காட்டி சர்வதேச நாடுகள் இலங்கையை நெருங்குகின்றன.

இந்துமா சமுத்திரத்தில் ஒரு காலம் இந்தியா ஆதிக்கம் செலுத்தி வந்தது. மறுகாலம் கடற்புலிகள் ஆதிக்கம் செலுத் தினர். இப்பொழுது சீனாவின் ஆதிக்கம் மேலோங்கத் தொடங்கிவிட்டது. இதனால் இந்தியா, இலங்கை மீதான உறவை பலப்படுத்த முயற்சிக்கிறது. இலங்கையில் அதிகரித்து வரும் சீனா வின் தலையீடு இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கப்போகிறது.

தனுஷ்கோடிக்கு அருகே உள்ள தீவு ஒன்றை ஒட்டியதாக சீனக் கடற்படையின் உதவியுடன் தற்காலிக முகாம் ஒன்றை அமைக்கும் பணியில் இலங்கை கடற்படை ஈடுபட்டுள்ளது. என தமிழக பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்துமா கடற்பிராந்தியத்தில் தனக்குரிய பாரம்பரிய பகுதிகளுக்கு அப்பாலும் தனது ஆளுமையை விஸ்தரித்துக்கொள்ள சீனாவானது எத்தனித்துக் கொண்டிருக்கும் நிலையில் இந்தப் பிரதேசத்தில் வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டிகளுக்குள் சிக்கிக் கொள்ள வேண்டிய சட்டயம் ஒன்று இலங்கைக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கப் போகிறது. எனவே இந்துமா கடல்பிரதேசத்தில் சீனாவின் பிரசன்னத்தை தவிர்ப்பதற்கு எந்த அளவில் அமெரிக்காவுடன் இணைந்து போக முடியும் என்பதை இலங்கை தீர்மானிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறது.

இந்தியாவை விட சீனா இந்துமா சமுத்திரத்தில் பலம் வாய்ந்த நாடாக இருப்பதால் இந்தியாவை விட்டு அமெரிக்காவுடன் இணைந்து போகும் கட்டத்தில் இலங்கை இருக்கிறது. விசேடபுவிசார் அரசியல் பிரதேசத்தில் இலங்கை நிலைகொண்டிருப்பதால் சீனக் கடற்படையானது இந்தப் பிரதேசத்தில் அதிக ஈடுபாடும் ஆக்கிரமிப்புத் தன்மையும் கொண்டு செயற்படுமாயின் அமெரிக்காவுடன் அதிக ஒத்துழைப்புடன் செயற்படும் படியாக இலங்கை கோரப்படலாம். போர்க்குற்றச்சாட்டிலிருந்து தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக அமெரிக்காவின் கோரலுக்கு இணங்கி செயற்படவும் இலங்கை பின்நிற்காது.


சீனக் குடியரசானது பெரும் கடல் பிரதேசத்தில் கப்பல் பயணங்களில் சவால்களை ஏற்படுத்துமானால் அல்லது எந்த வகையிலாவது வர்த்தகத்துக்கு தடங்கலாக இருக்குமானால் அல்லது குடாக்கடல் பகுதியில் இருந்து வரும் எண்ணெய் விநியோகத்தில் தலையிட முயலுமானால் நிச்சயமாக அமெரிக்கா தனது வல்லமைகளைப் பிரயோகிக்காமல் இருக்கமாட்டாது. இலங்கை கொள்கை வகுப்பாளர்கள் இதில் தமது தெரிவை தீர்மானிக்கவேண்டும். எந்த அளவுக்கு அமெரிக்காவுடன் இணைந்து போவது அல்லது ஒதுக்கி விடுவது என்பது குறித்து இலங்கை அரசு தனது உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு சீனாவிடம் அதிகமாக சாய்ந்து போவது அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் உலக ஆதிக்கத்தை எதிர்க்கக்கூடிய நாடாக சீனாவே காணப்படுவதால் தென்னாசிய விடயத்தில் அமெரிக்கா தனது மூலவளங்களையும் கவனத்தையும் திருப்புவதுடன் இந்தியாவுடனான உறவுகளையும் பலப்படுத்திக் கொள்ள விரும்புகிறது.

இதன் அடிப்படையில் இந்திய கடற்படைக்காக அமெரிக்காவின் போயிங் நிறுவனம் இரண்டாவது அதி நவீன பி 8-1 ரக போர் விமானத்தை தயாரித்துள்ளது. இந்தியாவின் கடலோரப்பகுதி 7500 கிலோ மீற்றர் நீளத்துக்கு பரந்துள்ளது . இதைப் பாதுகாக்கும் , கண்காணிக்கும் பணிகளை மேற்கொள்ளவும் இந்திய கடற்படைக்கு அதி நவீன போர் விமானங்கள் தேவைப்படுகின்றன. எனவே அமெரிக்கக் கடற்படையில் உள்ள பி8-ஏ போன்ற 8 அதிநவீன போர் விமானங்களைத் தயாரித்து வழங்கும் படி அந்த நாட்டைச் சேர்ந்த போயிங் நிறுவனத்துடன் இந்தியா 2009 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்து கொண்டது. 11 ஆயிரம் கோடி ரூபா மதிப்பிலான இந்த விமானங்களைப் பெறுவதன் மூலம் இந்திய பெருங்கடல் உள்ளிட்ட கடற் பகுதிகளில் தல்லியமான முறையில் கண்காணிப்ப் பணிகளை மேற்கொள்ள முடியும். அதன்படி முதலாவது பி8-1 ரக போர் விமானத்தை போயிங் நிறுவனம் ஏற்கனவே தயாரித்து ஓடியும் பார்த்திருக்கிறது.

தற்போது இதே ரகத்தைச் சேர்ந்த இரண்டாவது விமானத்தை அந்த நிறுவனம் தயாரித்துள்ளது. அமெரிக்கக் கடற்படையில் உள்ளது போன்ற இந்த வகை விமானத்தை வாங்கும் முதல் நாடு இந்தியா. இதில் இந்தியக் கொடியும் அரக்கோணத்தில் அமைந்துள்ள ஐ.என்.எஸ். ராஜாளி கடற்படை விமானத்தளத்தின் சின்னமும் பொறிக்கப்பட்டிருக்கும். இந்த விமானம் விரைவில் சோதிக்கப்பட்டு வெள்ளோட்டம் விடப்படவுள்ளன. மூன்றாவது விமானமும் தயாரிக்கப்பட்டு சோதித்து பார்க்கப்பட்ட பின் முதற்கட்டமாக அடுத்த ஆண்டில் இந்தியாவுக்கு அனுப்பப்படவுள்ளது. அவற்றை அரக்கோணம் கடற்படை விமானப்படைத் தளத்தில் இந்தியா பணியில் ஈடுபடுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

இதற்கிடையில் இலங்கைக் கடற் படையினர் வடக்கில் மேலும் இரண்டு கடற்படைப் பிரிவுத் தளங்களை அமைத்துள்ளனர். வடக்கு கடலில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் அதிகரிக்கும் நோக்குடன் இந்தத் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இந்தக் கடற்படைப் பிரிவுத் தளங்கள் கடந்த முதலாம் திகதி இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திஸநாயக்கவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. பூநகரிக்கு அண்மையில் உள்ள கல்முனையிலும் சுண்டிக்குளத்திலும் இந்தப் புதிய தளங்கள் அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சீனாவின் வல்லாதிக்கம் இப்போது வடக்கு இலங்கையில் வட பகுதி முனைவரையிலும் கூட நெருக்கமாக முன்னேறி இந்தியாவுக்கு பெரும் அச்சுறுத்தலாகி வருகிறது. இந்தியாவின் தென்கோடி முனையில் இருந்து இருபதுக்கும் குறைவான கடல் மைல் தொலைவில் உள்ள ஒரு சிறிய தீவில் சீனா தளம் அமைக்க இடம் அளித்தால் அதைப் போல பேராபத்து இந்தியாவுக்கு இன்றைய நிலையில் வேறு எதுவுமாக இருக்க முடியாது. போரினால் பாதிக்கப்பட்ட வடக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்ற பெயரில் இந்தியாவையும் மீறி பல்லாயிரம் கோடி ரூபாய் பெறுமதியான பல்வேறு திட்டங்கள் சீன நிறுவனங்களிடம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டு விட்டன. இந்தத் திட்டங்களில் பணியாற்றுவதற்காக ஏற்கனவே தென்னிலங்கையில் சீனர்கள் குவிந்து கிடக்கின்றனர்.




இந்தியாவின் தென்கோடி முனை எல்லையில் இருந்து சில கடல்மைல் தொலைவில் உள்ள இந்தத் தீவில் சீன நுழைவுக்கு இடம் அளிப்பது இந்தியாவின் ஸ்திரப்பாட்டுக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதை உணர்ந்துள்ள இந்திய அதிகார வர்க்கம் இதனை முளையிலே கிள்ள துடியாய் துடித்து நிற்கிறது. கச்சதீவு மீதான ஆதிக்கத்தை இந்தியா இழந்தால் இலங்கையில் அரசியல் பிரச்சினைக்கான தீர்விலும், சர்வதேச மட்டத்தில் இராணுவ உறுதிப்பாட்டுக்கான வாய்ப்பையும் இழந்து நிற்கும்.


தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்ட அச்சுறுத்தல் என்ற பெரும் தலைவலியை இலங்கை அரசுக்குக் கொடுக்கும் நோக்கோடு வகுக்கப்பட்ட டில்லியின் அரசியல் இராஜதந்திர நகர்வு, பாரதத்தின் தென்கோடி முனையிலும் சீன அச்சுறுத்தல் என்ற நிரந்தர தலையிடியாக உருமாற்றம் கொண்டிருப்பது டில்லியின் வெளிவிவகாரக் கொள்கை வகுப்பின் வியூகத்தில் இடம்பெற்ற குளறுபடித்தனத்துக்கு கிடைத்த பெரும் தோல்வியன்றி வேறில்லை. விடுதலைப்புலிகள் மீதான போர் வெற்றி என்ற மமதையில் மார்தட்டி அதன் மூலம் நாட்டின் பெரும்பான்மையினரான சிங்கள, பௌத்த மக்களிடையே பேரினவாத மேலாண்மைச் சிந்தனையைத் தூண்டி விட்டு அதன் பெறுபேறாக தன்னை அரசியல் ரீதியாகவும் இந்தப் பிராந்தியத்தில் மிகப் பலமான அரசாக மாற்றிக் கொண்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகம் இப்போது புதுடில்லிக்குச் சவால் விடும் வகையில் இராஜதந்திர காய் நகர்த்தல்களை முன்னெடுக்கத் தொடங்கி இருப்பது வெளிப்படையானது.

அடங்க மறுக்கும் மன்னர் போல சீன பூதத்தைக் காட்டி துள்ளிக் குதிக்கும் இலங்கை அரசை சமாளித்து வழிக்குக் கொண்டுவர வழி தெரியாமல் திணறுகிறது இந்திய அரசு. ஈழத்தமிழரின் வலிமையைப் புரிந்து கொண்டுள்ள புதுடில்லி நிர்வாகம் இப்போது சீனப்பூச்சாண்டியைக் காட்டி எகிறும் ராஜபக்ஷவின் ஆட்சிப்பீடத்தை தனது வழிக்கு கொண்டுவர இவர்களை நோக்கி தனது கடைக்கண் பார்வையைத் திருப்பி ஈழத்தமிழர்கள் மீது நேசக்கரம் நீட்ட எத்தனிக்கிறது. அதாவது ஈழத்தமிழர்களுக்கு நேரடியாக உதவி வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கைத் தீவில் சீனாவின் நிரந்தர ஆதிக்கத்துக்கு இடம் அளிக்கும் விதத்தில் நடந்து கொள்ளும் இலங்கையின் மிதப்பு போக்குக்கு ஆப்பு வைக்கும் பாரதக் கனவு பலிக்குமா ? மேற்கு நாடுகளின் புலம்பெயர் தமிழர்களைத் தனது வலைக்குள் வளைத்துப் போடுவதற்கு தற்போது இந்தியாவின் உளவுப் பிரிவு ஆரம்பித்திருக்கும் காய் நகர்த்தல்களின் வெற்றிகளில் தான் இதற்கான பதில் தங்கியுள்ளது. இந்தியா தொலைநோக்கு பார்வை மற்றும் ராஜதந்திரத்தில் இருந்து விலகியதால்தான் இது போன்ற இக்கட்டான சூழ்நிலையை சந்திக்க நேரிட்டுள்ளது. இனிமேலாவது இந்திய அரசு இலங்கை விவகாரத்தில் தனது வெளியுறவுக் கொள்கையில் விழித்துக்கொள்ளா விட்டால் இந்திய பாதுகாப்பிற்கும் பேராபத்தாகும்.


# கண்ணாடியால் அமைக்கப்பட்ட வீடு





ஆதிகால மண்வீடுகள் முதல் நவீன காலத்து கல்வீடுகள் வரை பல வகையான வீடுகளைப் பார்த்திருப்போம். ஆனால் முழுவதும் கண்ணாடியினால் அமைக்கப்பட்ட வீட்டைப் பார்த்திருக்கின்றீர்களா? இத்தாலியில் மென்மையான நீலநிறக் கண்ணாடிகளால் உருவாக்கப்பட்ட வீடுகள் காணப்படுகின்றன.

# படிக்கட்டுகளிலும் ஓவியங்கள்





சன்பிரான் · ஸிஸ்கோ நாட்டின் பிரபல்யமான இடம் ஒன்றில் அமைக்கப்பட்டுள்ள படிக்கட்டுக்களில் பல வகையான வர்ணங்களைப் பயன்படுத்தி கண்கவர் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

# காட்டினுள் காணப்படும் விடுதி




சுற்றுலாப்பயணிகள் தங்குவதற்கும், அவர்களை அதிகமாக கவரும் விதத்திலும் பல்வேறு இடங்களில் தங்கு விடுதிகள் அமைக்கப்படும். அதற்கிணங்க ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று பிரமாண்டமான விடுதியினை வடிவமைத்து மழைவீழ்ச்சி அதிகம் காணப்படும் அடர்ந்த காட்டுப்பகுதி ஒன்றினுள் நிர்மாணித்திருக்கின்றது. இந்த விடுதிக்கு சூரியப் படலம் மூலம் மின்சார விநியோகமும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.


# பார்வையாளர்களைக் கவர்ந்த கடல் சிங்கத்தின் நடனம்



# அழகிய பாலம்



ஈரான் நாட்டில் மிகவும் நேர்த்தியான முறையில் வெகு சிறப்பாகக் கட்டப்பட்டுள்ள பாலம் அனைவரினதும் மனதைக் கொள்ளை கொண்டு மிகுந்த அழகுடன் காணப்படுகிறது. இந்தப் பாலம் பழைய பாலம் ஒன்றின் மேல் அத்திபாரம் போடப்பட்டு கட்டப்பட்டு உள்ளது. இந்தப் பாலம் 23 வளைவுகள் கொண்டது. 105 மீற்றர் நீளமும் 14 மீற்றர் அகலமும் கொண்டது.



# ஏழு வெற்றிப்படிகள்

* கோபத்திலும் பொறுமை வேண்டும்
* செல்வத்திலும் எழ்மை வேண்டும்
* எழ்மையிலும் நேர்மை வேண்டும்
* தோல்வியிலும் விடா முயற்சி வேண்டும்
* இளமையிலும் அடக்கம் வேண்டும்
* பதவியிலும் பணிவு வேண்டும்

சி.ஸ்ரீஞயா,
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி. (A/L)

# உங்கள் கைரேகைகளின் பலன்கள்

27




### பாசம் அல்லது ஐக்கிய ரேகைகள் (தொடர்ச்சி)

சனி ஆதிக்கருக்கு இளமையில் விவாகமாகாது. தக்க வயதில் தன்னிஷ்டம் போல் விவாகம் செய்து கொள்வர். சனி ஆதிக்கர் நெருங்கின் பந்துக்களில் காதல் செய்யார். இத்தகையோர் இருபத்தைந்து வயதுக்குமேல் விவாகம் செய்வர். சனி மாறுபட்டிருந்தால் அதிசீக்கிரம் விவாகமாகலாம். சனி ஆதிக்கருக்குக் காதலுக்கான ஆசாபாசம் சீக்கிரம் உண்டாவதில்லை. காலங்கடந்து கலியாணமாவதற்கு இது காரணமாகும். சனி ஆதிக்கருக்குச் சுக்கிர ஆதிக்கமுமிருந்தால் வேறு வழியில் காதலைத் தணித்துக் கொள்வர். சூரிய ஆதிக்கர் அதி சீக்கிரம் விவாகம் செய்து கொள்வர். ஆனால் வாழ்க்கையில் சேர்ந்து வாழ மாட்டார்கள். ஆதிக்கர்களுக்கு மனத்துக்கிசைந்தவாறு இல்லக் கிழத்தி அமைவது அபூர்வம். புதன் ஆதிக்கர் தங்களுக்கிஷ்டமான காதலியைத் தேடிக் கொள்வர். இவர்கள் இளமையில் விவாகம் செய்து கொள்வர். புதன் ஆதிக்கர் காதல் கனிந்தவிடத்து விவாகத்தை எதிர்பார்ப்பர். நெறி தவறார். செவ்வாய் ஆதிக்கர் மனம் போல வாழ்வர். சந்திர ஆதிக்கர்களில் ஏற்றத்தாழ்வுண்டு. அவர் மிகுந்த மோகங் கொண்டவராதலால் தர்மத்துக்குக் கட்டுப்படார். தன்னிலும் வயது அதிகமானவரையும் காதலித்து வாழ்வர். இத்தகையோரின் ஐக்கிய ரேகை கவனிக்கத்தக்கது. அது நன்கு ஆழப் பதிந்திருக்கும். சுக்கிர ஆதிக்கர் தனித்திருக்க இச்சைப்படார். இத்தகையோர் வனப்புமிக்க சுந்தரமாய் விளங்குபவராதலால், பெண்களும் தேடி வருவர். இவர்களுக்கு ஐக்கிய ரேகை பதிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. மெல்லிய சிறு ரேகையானாலும் பலனுடையதாயிக்கும்.

புதன் மேட்டிலிருக்கும் ரேகைகளைக் கொண்டு மனைவி மக்களைக் குறிப்பிட்டுச் சொல்லும் போது பெரும்பாலும் தவறு நேருகின்றன. சாஸ்திரமும் பொய்யோ எனச் சந்தேகிக்க வேண்டியதாகிறது. நூற்றிலொருவர் அல்லது இருவருக்கே சரிவரக் கணிக்கக் கூடியதாயிருக்கிறது. ஒருவர் கையைப் பார்த்ததும் மனைவி மக்களை அவசரப்பட்டு வர்ணிப்பது நல்லதல்ல. உள்ளதைச் சொல்ல முடியாத போது எதிர்காலத்தை எப்படிச் சொல்லக் கூடும்.

1.புதன் மேட்டில் பல ரேகைகள் காணப்படில் அது பற்றற்றதும் நிலையானதுமான நிலைமையைக் குறிக்கும். ஒரு தனி ரேகை நன்றாகப் பதிந்து தோன்றினால் எதிர்ப்பாலாரை உள்ளன்போடு நேசிப்பதை வெளியாக்கும்.

2.பாச ரேகை உற்பத்தியில் இரண்டு கிளையோடிருந்தால் இருவரை மனத்திலெண்ணி முடிவில் ஒருவரையே காதலித்து வருவதைக் குறிக்கும்.


3.பாச ரேகை எவ்வளவுக்கு நீளமாயிக்கிறதோ அவ்வளவுக்கு நீண்ட கால வாழ்க்கையைக் குறிக்கும் சமத்துவமான இரண்டு ரேகைகளிருந்தால், இரட்டைக் காதலைக் குறிக்கும். நீண்ட




பாச ரேகைக்கு அடியில் எத்தனை மெல்லிய ரேகைகள் சிறியதாயிந்தாலும் பலனற்றதாகும்.

4.பாசத்தின் முதல் ரேகைக்குப் பின் அதேமாதிரியாயும், சமமாயும் நன்கு பதிந்த ரேகை காணப்படில் இரண்டாம் முறை பணத்துக்காக அல்லது வேறு காரணங்கொண்டு விவாகம் செய்து கொள்வதைக் குறிக்கும்.

பாசரேகை அகன்று விசாலித்து அல்லது சங்கிலி போலிருந்தால் காதலில் அலட்சியத்தைக் குறிக்கும். அம்மாதிரி சில பெண்களின் கையில் காணப்படுகிறது. இது உண்மையில் பாசமற்ற தன்மையைக் குறிக்கும். பின்னப்பட்ட ரேகை பாசமில்லாவிடினும் தன்னலம், பொறாமை, கொடுமை




முதலிய துர்க்குணங்களிருக்கும் ரேகை சிவந்து காணப்படில் மேற்கண்ட துர்க்குணங்கள் ஊர்சிதமாகும்.

5.பாச ரேகை உற்பத்தியில் மெலிந்து பிறகு படிப்படியாய் நன்கு பதிந்தும் காணப்படில் படிப்படியாய் காதல் முற்றி வருவதைக் குறிக்கும்.

பாச ரேகையில் தீவு காணப்படில் அது வாழ்வில் சில துன்பத்தைக் குறிக்கும். பாச ரேகையில் அதிக தீவுகள் காணப்படில் விவாகமாகியும் ஒருவர்க்கொருவர் பாசமற்றவராயிருப்பர்.

6.பாச ரேகையில் ஒரு புள்ளடி காணப்படில் கணவன் மனைவிக்கிடையில் பெருந்தடையைக் குறிக்கும் பாசரேகையில் நட்சத்திரக் குறி காணப்படில் வாழ்க்கைத் துணை திடீரெனக் காலமானதைக் குறிக்கும்.

(தொடரும்)

## ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி

வடக்கில் போரின் பின்னர் பல மாற்றங்கள் அரங்கேறி வருகின்றன. சில மாற்றங்கள் தமிழ் மக்களுக்கு அவசியம் தேவையானதாகவும் பல மாற்றங்கள் தமிழ் மக்களின் இருப்பையே கேள்விக் குறியாக்கும் வகையிலும் நடந்தேறி வருகின்றன.

சிவில் சமூக கட்டமைப்புக்கள் உடைக்கப்பட்டதன் விளைவால், தமிழ் சமூகம் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அதிகரிக்கும் சிறுவர் துஷ்பிரயோகங்கள், கலாசார பிறழ்வுகள் என்பன தமிழ் சமூகத்தின் அடிப்படை பண்பாட்டையே மாற்றியமைக்கின்றன.

அதிகரித்த மதுப்பாவனையும் இவற்றிற்கு அடிநாதமாகின்றது. புள்ளி விவரங்களும் யாழ்ப்பாண மக்களின் பெருங்குடித்தனத்தை எடுத்துக் காட்டுகின்றன. மதுப்பாவனையை உயர்ந்த மட்டத்தில் உள்ளவர்கள் முக்கிய நிகழ்வுகளில் பரிமாறுகின்றனர். அவ்வாறு பரிமாறப்படுவது சரியானதா ? கௌரவம் கருதி அந்த இடங்களில் மது அருந்துவதும் சரியானதொன்றா ?




அண்மையில் இங்குள்ள உயர் கல்விப்பீடம் ஆய்வு மாநாடொன்றை நடத்தியிருந்தது. அன்றைய தினம் இரவு யாழ். நகரிலுள்ள தனியார் விடுதியில் விருந்துபசாரம் நடைபெற்றது. இதில் எங்களது 'தியேட்டர்காரரும்' கலந்து கொண்டிருந்தார்.

அங்கே 'தண்ணியடியை' தியேட்டர்காரர் ஆரம்பித்து வைத்திருந்தார். இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அனைவருமே கல்வித் துறையின் பெரும் புள்ளிகள். கல்விச் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள். இவ்வாறானவர்கள் ஒரு கௌரவத்துக்காக மது அருந்துவதாக தெரிவிக்கின்றனர். அதே கற்றறிந்த சமூகம்தான் மதுப்பாவனையால் எமது சமூகத்தில் பிரள்வுகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

'ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி கண்ணே' என்ற பாணியிலேயே இவர்களது செயற்பாடுகள் இருக்கின்றன. மது அருந்தாததால் ஒன்றும் உங்களது கௌரவம் குறையப்போவதில்லை. மக்களை நல்வழிப்படுத்த வேண்டிய, சிவில் சமூகக் கட்டமைப்பின் முக்கிய தரப்பினராக கல்விச் சமூகத்தினரின் மாற்றமே எங்கள் சமூகத்தை நல்வழிப்படுத்த முடியும்.

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

தினந்தோறும் பூத்துக் குலுங்கும் புன்னகை உதயனே ! நீ மடி தாங்கி வரும் அனைத்து விடயங்களுமே என் மனதை கொள்ளை கொண்டுள்ளன.

மாணவர்களின் திறனை வெளிப்படுத்தும் வகையிலும், அவர்களின் ஆளுமையை வெளிப்படுத்தும் நோக்கிலும் நீ சுமந்து வரும் அனைத்துப் பக்கங்களும் ஆழமாக எனது மனதில் இடம்பிடித்துள்ளது. இளவல்கள் வட்டப்பகுதியை வாரமிருமுறை பிரசுரிப்பதோடு அதன் பக்க எண்ணிக்கையை அதிகரிக்க முடியுமா? அத்துடன் மாணவர்களுக்காக இதைப் போல வேறு பல பகுதிகளையும் உன்னால் உன்மடியில் சுமந்து வர முடியுமா? உன்சேவை மேலும் வளர்ந்து இதே போன்று முன்னிலையில் இருக்க வாழ்த்துவதோடு உன் திருமுகம் காண தினமும் உன் வாசகியாய் இருப்பேன்.

எஸ். அபி, மாணவி

★ ★ ★

இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் விசேடமாக யாழ்.குடாநாட்டு மக்கள் மத்தியில் 'உதயன்' பத்திரிகைத்துறையில் மிக்க அபிமானம் ஈட்டியுள்ள, பிரபல்யம் பெற்றுள்ள ஒருவனாகத் திகழ்கிறான் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமே கிடையாது. உதயனின் பிரபல்யத்தை விரும்பாத மாற்றுக்கருத்துடைய தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் உண்மை இது. யதார்த்தமும் அதுவே.

உதயனின் ஆரம்பகாலம் முதல் வாசகி என்ற வகையில் அண்மைக்காலமாக பத்திரிகையில் நாளாந்தம் காணப்படும் குறைபாடொன்றை இப்பத்தியினூடாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதயனின் செய்திகளில், கட்டுரைகளில், ஏனைய நானாவித அம்சங்களில், ஏன் விளம்பரங்களில் கூட எழுத்துப் பிழை, சொற்பிழை அடிக்கடி இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.

எழுத்துக்கோர்த்து அச்சேற்றி வெளியிட்ட முன்னைய காலங்களில் இத்தகைய தவறுகள் அரிதாகவே இடம்பெற்றமை வரலாறு.

எனவே தயவு செய்து இந்த விடயத்தில் கவனம் செலுத்தி எழுத்துப் பிழை, சொற்பிழை ஏற்படாது உதயன் பூரணமான விதத்தில் வெளிவர ஆவன செய்வீர்களா?

உரும்பிராய் வசந்தா

★ ★ ★

காலங்கள் கடந்தோடலாம். நேரங்கள் மறையலாம். ஆனால் சூரியன் காலையில் ஒரே மாதிரி வருவது போல் கொள்கையில் மாற்றமில்லாமல் உதயன் வெளிவருவது பாராட்டுக்குரியது.

அதேவேளை மக்களின் நிகழ்வுப் படங்கள் குறைவாக வெளிவருவது ஏன் என்று தெரியவில்லை. இனிவரும் நாள்களில் நிகழ்வுப் படங்களை பிரசுரிப்பீர்களா?

கேதுஜன், இணுவில்

# உன்னை அறிந்தால்



இணையவன்

கடலின் ஆழத்தை அறிந்தாலும், மனத்தின் ஆழத்தை அறிய முடியாது என்பார்கள். அது எத்தனை உண்மை! மற்றவர்களின் மனத்தை அறிய முற்படும் நாம், முதலில் நம் மனத்தைப் பற்றித் தெரிந்திருத்தல் வேண்டும். ஒருவரது மனத்தைக் கணிப்பது என்பது, எளிதான காரியம் அல்ல. ஆயினும் அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்றும், உள்ளத்தின் நிறைவால் வாய் பேசும் என்றும் கூறுகிறோம். காரணம் நம் மனம் பல வழிகளில் நமது உணர்வுகளை வெளிப்படுத்துகிறது! எண்ணம், சிந்தனை இவற்றை நமது செய்கைகள், நடத்தைகள் காட்டி விடுகின்றன. இந்த உள் மனத்தின் பிரதிபலிப்புத்தான் நமது வெளிப்புற நடத்தைகள். ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால், பார்த்ததுமே நெற்றியை சுழித்து கொள்ளுதல் என்பது உள் மனத்தின் பிரதிபலிப்பு. உள்ளத்துக்கு பல மொழிகள் உண்டு. அவைகளில் சில:

கண்களால் பேசுவது (இரக்கம், பரிவு, கோபம், ஆச்சரியம், அழுகை). கை, கால்களால் - சைகை செய்வது. ஓசைகளினால் உணர்த்துவது (பாடல், கவிதை, பொருள்களை தூக்கி எறிதல்).

இவை அனைத்துமே உள்ளத்தை வெளிப்படுத்த பயன்படும் உடல் மொழிகளாகும்.

உடலின் அசைவு, உட்காரும் விதம், - நாற்காலியின் நுனியில் உட்காருதல், காலை ஆட்டிக் கொண்டே இருத்தல், நாற்காலியை முன் பக்கமாகச் சாய்த்து அமர்தல், கால் மீது கால் போடுதல் போன்றவையும் உள்ளம் வெளிப்படுத்தும் குறியீடுகளே! தோற்றத்தின் அடிப்படையிலும் உள்ளம் வெளிப்படுவதுண்டு. (சாதுவான முகம், கோப முகம், விரோத குரோத முகம், அழுமூஞ்சி, சிடுமூஞ்சி, சிரித்த முகம் இப்படி பல.)

காது கேட்காத, கண் தெரியாத குழந்தைகள் கூட இயல்பாகவே சிரித்துக் கொண்டிருக்கின்றனர் என்கிறார் ஜேர்மன் நாட்டு விஞ்ஞானி ஒருவர்.

மேலும் முழு உருவத்தை வைத்தும் உள்ளம் வெளிப்படுவது உண்டு. பயந்த உருவம், தைரியமான உருவம், வெட்கப்படும் உருவம், சுத்தமான உருவம், அசுத்தமான உருவம் என்று பலவித உருவ அமைப்புகள் உள்ளதாக ஜெர்மன் நாட்டு மருத்துவ மாமேதை டாக்டர் சாமுவேல் ஹானிமன் கூறுகிறார். இதனால் மருத்துவம் செய்யும் போதும் கூட உள்ளத்தை அறிய முற்படுதல், வியாதியை முழுமையாகக் குணப்படுத்த வழிவகுக்கிறது என்கிறார். உள்ளத்தைப் பற்றி விரிவாக விளக்கும் ரோஜர் என்ற மனோதத்துவ நிபுணர், கண்ணாடியைப் போன்றது நமது உள்ளமும் செய்கைகளும் என்று கூறியுள்ளார்.

சிக்மண்ட் ப்ராய்ட் என்ற மருத்துவ, மனோதத்துவ நிபுணர், உள்ளத்துக்குள்ளே ஒளிந்திருப்பது ஒன்றல்ல எனக் கூறுகிறார். ஒரு மனிதன் சமுதாயத்தில் நடந்து கொள்வது வேறு! நிஜ வாழ்க்கையில் நடந்து கொள்வது வேறு. மனிதனுக்கு நன்றாகவே நடிக்கத் தெரியும் - சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில், தன்னையும் அறியாது செய்யும் செயல்கள் தன் ஆழ் மனத்தின் அழகை, படம் பிடித்துக் காட்டிவிடுகிறது என்கிறார். உள்ளத்துக்குள்ளே சில உண்மைகள் ஒளிந்து கொண்டுதான் இருக்கின்றன. சில வெளியே சொல்லக் கூடியவை. சில சொல்லக் கூடாதவை, மறைக்கப்பட்டவை, மறுக்கப்பட்டவை. சில விஷயங்கள் சந்தோஷத்தைத் தரக்கூடிய கதைகளாக இருக்கலாம். அவற்றினால், .ஒருவர் மேலும், மேலும் சக்தியூட்டப்படுகிறார்.

சில விஷயங்கள் மறுக்கப்பட்டவை. சில குழந்தைகள் 3 வயதாக இருக்கும் போது, தாய் தன்னை வெறுத்த நிகழ்ச்சி போன்றவை மனதின் ஆழத்தில் பதிந்து, பின்பு வளர வளர, பெண்ணைக் கண்டால் வெறுப்பு, பாசமின்மை, பற்றற்று வாழுதல், மற்றவர்களுடன் சேர்ந்து வாழ விரும்பாமல் தனித்து இருத்தல் போன்றவை உருவாகின்றன. சில விஷயங்கள் மறைக்கப்பட்டவை. டீன் ஏஜ் குழந்தைகள் படும்பாடுகளில் இது ஒன்று எனலாம். டீன் ஏஜ் என்கிற பருவம் - இரண்டும் கெட்டான் வயது. தன் தாயோ அல்லது தந்தையோ கொள்ளும் தகாத உறவு முறைகளைக் கண்டால், அவை அவர்களின் உள்ளங்களில் மறைக்கப்பட்டு, பெற்றோர்களை வெறுத்து, வீட்டை விட்டு வெளியேறுதல், குற்றக்கும்பலில் சேர்ந்துவிடுதல் போன்றவை நடக்கின்றன. இவர்கள் உள்மனத்தில் இருந்து இக் காரணங்களை வெளியே கொண்டு வருவது மிக, மிக அரிதாகிறது.

சமயம், சந்தர்ப்பம் போன்றவை ஒருவரை பயில வைக்கிறது. இன்று பிறந்த குழந்தையும் கூட தாய்ப்பால் குடிக்கிறதே! பால் போதுமென்றால், முகத்தை ஒரு பக்கமாகத் திருப்பி, போதும் எனத் தெரிவிக்கிறதே!

டீன் ஏஜ் வரும் போது உடலில் ஏற்படும் மாறுபாடான உடல் வளர்ச்சி - உள்ளத்தின், எண்ணத்தின், மன ஆழத்தின் வளர்ச்சியைப் பொறுத்தது! உள்ளம் கெடும்போது, உடலும் கெடுகிறது.

உள்ளம் சரியாக, சமநிலையில் இருந்தால் தான் உடல் நலமும் சரியாக, சமநிலையில் இயங்கும். இதனால்தான் நோய் கண்ட மனிதரை அணுகும் போது, நோயை மட்டும் பார்க்காதே! நோய் கண்ட மனிதனின் மனத்தையும் சேர்த்துப் பார்த்தால் தான் தனி மனிதனின் ஒட்டுமொத்த நோய்களையும் பூரணமாக வேரற்றுப் போகச் செய்ய முடியும் என ஜேர்மன் வைத்திய முறையான ஹோமியோபதி கூறுகிறது. இது எக்காலத்திலும் மாறாத ஒன்று.

தன்னைத் தானே எடை (உள்ள எடை) போட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்குத் துல்லியமான அளவுகோல் என்று எதுவும் கிடையாது. தன்னைக் குறைவாக எடைபோட்டுக் கொள்பவர்கள், தாழ்வு மனப்பான்மை உடையவர்களாகின்றனர். மிக அதிகமாக எடைபோட்டுக் கொள்பவர்கள், மிகையான மனப்பான்மை உடையவர்களாகின்றனர். இதில் இரண்டுமே தவறுதான்.

வயதானவர்களுக்குத் தரவேண்டியது மரியாதையும், அன்பும், கனிவான பேச்சும் மட்டுமே! உணவு என்பது சிறிதளவு இருந்தாலும் போதும்! இவை இல்லாத போதுதான் வயதானவர்கள் வீட்டை விட்டு வெளியேறுதல், காணவில்லை என்ற செய்தி, மனநலம் குன்றியவர் என்ற பட்டப் பெயர், முதியோர் இல்லங்கள் பொங்கி வழிதல் போன்றவை நிகழ்கின்றன.

கணவன் - மனைவி இடையே பிளவு என்பது வேறொரு பக்கம். தாகம் எடுக்கும் போது தண்ணீர் குடிக்க வேண்டும். மோகம் ஏற்படும் போது வாழ்க்கைத் துணையுடன் தணித்துக் கொள்ள வேண்டும்.

திரும்பும் பக்கமெல்லாம் தவறு காணும் கண்ணோட்டம் எந்தச் சமுதாயத்திலும் மாற வேண்டும். நாடு வளர, வீடு மலர, தனி மனிதன் தன் தரம் உணர்தல், தன்னை அறிதல், தன்னை எடை போடுதல் மிக, மிக அவசியம். மற்றவர்களைக் குறைகாணும் முன், தன்னைத் திருத்திக் கொள்வது நல்லது.

குழந்தைகளின் திறனைத் தெரிந்து கொண்டு, அதற்கு ஏற்ப எதிர்காலப் படிப்பைப் பெற்றோர் நிர்ணயம் செய்தல் வேண்டும். அளவுக்கு மீறி, குழந்தைகளிடம் எதிர்பார்த்தல் இழப்பையும் தோல்வியையும் கொடுக்கும். தோல்வியைத் தவிர்க்கவும், தொடர்ந்து வெற்றியடையவும், நாட்டில் - வீட்டில் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் நிலைநாட்டவும் நம்மை நாமே அறிதல், தன்னைத் தானே நம்புதல் மிக மிக அவசியம்.

# மனோசக்தியே பெரும் சக்தி

மகிழ்ச்சியைப் பெறுதல் மட்டுமே மனித வாழ்க்கையில் செயல்பாடுகளின் இரகசியமாக இருக்கிறது. இது மாறாத உண்மை, எத்தனையோ வழிமுறைகளைப் பின்பற்றினாலும் மனிதர்கள் நினைத்ததை நினைத்தவாறே அடைகிற போதுதான் இந்த ஆனந்தம் உண்டாகிறது.

நினைத்ததை நினைத்தவாறே அடைவதற்கு முயற்சி, உழைப்பு, செயல் என்பதையே வழிமுறைகளாக உலகம் உபதேசித்து வருகின்றது. ஏனென்றால் இந்தப் பிரபஞ்சத்தின் இயற்கை நியதி அல்லது. விதி. ''செயல்-விளைவு'', கர்மம்-பலன்''

செயல் அல்லாமல் விளைவுகள் இல்லை என்பதைப் பாமரனும் கூட ஏற்றுக்கொள்ளுவான். இதனால்தான் இதுவரை 'கடின உழைப்புக்கு ஈடு இணை ஏதுமில்லை'' என்கின்ற வாசகத்தைத் தலைமுறை தலைமுறையாக வழங்கி வருகிறார்கள். ஏனென்றால் உழைப்பு என்பது செயல், செயல் இருந்தாலும் நிச்சயம் விளைவு உண்டு. விளைவு இல்லாத செயலே இல்லை. ஒரு வேளை விளைவுகள் செயலின் தன்மையைப் பொறுத்துத் தாமதமாகக் கிடைக்கலாம்.

இந்தப் பேருண்மையை அடிப்படையாகக் கொண்டதனால் தான் பகவத்கீதையைப் படைத்த பகவான் வியாசரும் கீதையின் போதனையாக செயலைச் செய்-பலனை எதிர்பாராதே என்றார் போலும். நீங்கள் பலனை எதிர் பார்க்காமல் இருந்தாலும் பிரபஞ்ச நியதிப்படி பலன் நிச்சயம் கிடைத்தே தீரும். இந்த உண்மையோடு கூட இதனோடு இணைந்த மற்றொரு நுட்பத்தைப் பார்க்கவும் தவறிவிடுகிறார்கள் பெரும்பான்மையானவர்கள்.

பலன் என்பது செயலை செய்துவிட்டபின் எதிர்காலத்தில் விளையப் போகிறபயன். செயலைச் செய்யக்கூடிய நிகழ்காலத்தில் உன் நினைவுகளில் கவனத்தை குவிக்காமல் எதிர்காலப் பலனில் உன் சிந்தனையைச் செலுத்தினால் நிகழ்காலச்செயல் செம்மையாக இல்லாதொழியும். செயல் செம்மையாக இல்லையென்றால் செயலுக்கேற்ற விளைவும் சரியானதாக, நிறைவைத் தரக்கூடியதாக இருக்காதல்லவா? நிகழ்காலத்தில் நினைப்பைக் குவியுங்கள். நிகழ்காலத்தில் வாழப் பழகுங்கள்.

மற்றுமொரு நுட்பம். செயலைச் செய்தவர்கள் பலனைப் பாராதிருந்தாலும் பலன் அவர்களுக்கல்லாமல் வேறொருவருக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. ஒரு வேளை உலகியல் செயல்பாடுகளில் அதர்மத்தைப் கைக்கொள்ளுபவர்கள். நியாயத்தைப் புறக்கணிப்பவர்கள் வேண்டுமானால் ஒருவருக்குக் கிடைக்க வேண்டிய பலனைத் தட்டிப்பறித்துச் செல்லுகிற செயலைச் செய்யலாம். அங்கேயும் அந்த மனிதர்கள் நியாயமற்ற தட்டிப்பறித்த செயலுக்கான விளைவை அனுபவிக்கவேண்டி வரும்.

பெரும்பாலும் எல்லா மனிதர்களுமே உலகுக்குத் தெரிகிற வகையில் உடல் என்கின்ற கருவியைப் பயன்படுத்திச் செய்கின்ற செயலைத்தான் செயல் என்று எண்ணிக்கொண்டு மன மயக்கத்திலிருக்கிறார்கள். இதனால்தான் மனிதர்கள் தங்களின் வெளிப்புற நடவடிக்கைகளைப் பார்ப்பதற்குக் குறையில்லாத, யோக்கியமான, போற்றத் தகுந்த நியாயமான செயற்பாடுகளாக அமைத்துக்கொள்ளுகின்றார்கள். அதற்கான பலனை நல்லதாக அனுபவிக்கின்றார்கள். ஆனால் மனித உடலில் மனமும் ஒரு கருவியே. மனம் செய்கிறசெயல் சிந்தித்தல், சிந்திக்கிற, நினைக்கிற, எண்ணுகிற செயலுக்கேற்ற விளைவுகளை அந்தந்த மனிதர்கள் நிச்சயமாகப் பெற்றே தீரவேண்டும். ஆகவே புறச் செயல்களை விட அக எண்ணம் மிக முக்கியமானது.

புற உலகில் நல்லவர்களாகக் காணப்படுகிறவர்கள் கூட துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவிப்பதுக்கு இதுவே, முழு முதல் காரணம். ஆனால் இந்த உலகம் இதைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்காமல் இந்த நல்லவருக்கா இத்தனை சோதனைகள்? கடவுள் இரக்கமே இல்லாதவர், இதயமே இல்லாதவர் என்று பலவாறாகப் பேசிக்கொண்டு செல்கிறது.

''செயல்-விளைவு'' மாறாத தத்துவம். மகேசனே எண்ணினாலும் மாற்றமுடியாத உண்மை.

இந்தச் செயல்-விளைவு தத்துவத்தின் அடிப்படையில் அமைந்த வள்ளுவரின் இந்தத் திருக்குறளைச் சற்று சிந்தித்துப் பார்ப்போமா!

தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் (குறள்-619)

வள்ளுவர் ''கூலி'' என்கிற சொல்லை ஏன் இந்த இடத்தில் பயன்படுத்தினார் என்பதைக் குறித்து வினா எழுப்பினால்,செயலுக்கேற்ற முயற்சிக்கேற்ற, உடல் உழைப்புக்கேற்ற பலன், குறைந்த பட்சம் ''கூலி'' என்கிற பலனாவது நிச்சயம் கிடைக்கும். இது தெய்வஉதவி இல்லையென்றாலும் தெய்வ ஏற்பாட்டின்படி நிச்சயம் நிகழும்.

(தொடரும்)



-மணி-